# திருப்பம்

மா கி. கிறிஸ்ரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பம்

சிறுகதைகள்

மா.கி.கிறிஸ்ரியன்

அருளகம்

வடகரை 609314 இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருப்பம்" சிறுகதைகள்

முதல் பதிப்பு : அக்டோபர் 1998

நூலாசிரியர் **மா.கி.கிறிஸ்ரியன்**

உரிமை : நூலாசிரியருக்கே

- **Price: 40.00**
- First Edition: October 1998
- "THIRUPPAM" Tamil Short Stories
  Collection and Copyrigh by M.G.Christian,
  3, Villa Guy Maupassant, 91860 Epinay sous Senart - France.
- Published by "ARULAGAM", Rahmath Street, Vadakarai 609 314 - Chennai . India
- Cover Design by *Amudhone*
- Production,Typeset and Layout by Sabrina Mohamed
  *Amine Arts Graphics*, 59, rue des Entrechats,
  F-95800 Cergy-France.
- Printed by M.Ravi, D.P.Tech,
  V.M.Prinding Works, Chennai 600 007 - India

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...

அணிந்துரை
என்னுரை

1. யார் பைத்தியம?
2. ஊர் போய்ச் சேர்ந்தவன்
3. வழியனுப்பிவைத்தவள்
4. திருப்பம்
5. போராளியாக
6. இருபறவைகள்
7. கடல்மேல் ஆணையாக
8. கிளித்தட்டு
9. ஊர்க்கடிதம்
10. சந்திப்புகள்
11. துவேசம்
12. கணவன்
13. தனிமையும் இனிமையும்
14. மீண்டும் பாலன் பிறப்பாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகிகிறிஸ்ரியனின் நூல்கள்

## இதுவரை

| | | |
|---|---|---|
| உயிர்ப்பில் | ... ... | கவிதைகள் |
| திருப்பம் | ... ... | சிறுகதைகள் |
| உள்ளத்தில் மட்டும் | ... | குறுநாவல்கள் |
| வீணாகிப் போகாத நாட்கள் | | கவிதைகள் |

## இனிமேல்

| | | |
|---|---|---|
| வரம் | ... ... | சிறுகதைகள் |
| நாடு கடந்தவர்கள் | ... | கவிதைகள் |
| கவிஞன் கண்ட நாடு | ... | நாடகங்கள் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

ஒவ்வொரு மனித மனத்திற்குள்ளும் ஒருவித ரசனை இருக்கின்றது. அந்த ரசனை ஒவ்வொரு பாதையை செயல்பாட்டை நிகழ்வுகளை நோக்கிப் பரிணமிக்கும் போதுதான் ஒருவன் கலைஞனாகவோ அன்றி ஆர்வலனாகவோ உருவாகின்றான்.

படிப்பதில் – எதையும் படிப்பதில் ஒரு அயரா ஆர்வம் மிகையாக இதயத்தில் துளிர்ந்து, அடக்குமுறைக்கு அடங்காமல் ஆர்ப்பரிக்கும் போது அறிவையும் விஞ்சிய இலக்கிய தாகம் வரையப்பட்ட ஓவியமாய் மனதிற்குள் படிந்து விடுகிறது.

பூபாளராகமாய் நித்தம் நித்தம் சிந்தும் இசையில் திளைத்து நனையும்போது இலக்கியதாகம் "இலக்கியவாதி" என்ற மெல்லிய கோடாக முகைய விழ்ந்து "எழுத்து" என்ற கோபுரவாசலின் அருகே அசையாது நிறுத்திவிடுகிறது. எழுத்து கற்க முடியாத, கற்பிக்க முடியாத ஒரு வரம். ஆமாம் வரமேதான்! இயற்கையான சிந்தனை விரிப்பின் இதழ்களான கதை, கவிதை, நாவல் எல்லாமே வரம்தான்.

"உயர்ப்பில்" கவிதைத் தொகுதியைத் தந்தவர், அதே வேகத்தோடு "திருப்பம்" சிறுகதைத் தொகுதியையும், கதாசிரியர் தந்திருப்பது மகிழ்விற்கும், பாராட்டிற்கும் உரியதாகும். 1981 காலப்பகுதியிலிருந்து இவர் இலக்கியப் பரப்பில் தீவிரமாக இயங்க ஆரம்பித்தவர். அதன் பின்பு உருவாக்கப்பட்ட கதைகளையே இத்தொகுதியில் நாம் தரிசிக்கின்றோம்.

முதலில் இந்நூலின் தலைப்பை பெயராகக் கொண்ட கதையை எடுத்துக் கொள்வோம்.

"திருப்பம்" திருப்பத்தில் இடம்பெறும் நிகழ்வு, புகலிட வாழ்வின் அவலத்தை அலசிக் காட்டுகின்றது. இக் கதையின் கரு, புகலிட மனிதனின் கோணத்தை நிதர்சனப்படுத்துகின்ற பிரயோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகச் சிறந்து அமைந்திருக்கின்றது. இக்கதையை வாசிப்போர் சில சமயங்களில் பல சங்கதிகளை விமரிசிப்பவராக இருப்பர்.

"இருபறவைகள்" இதுவும் சாதாரணம் என்ற வார்த்தைக்குள் அடங்குகின்ற கதையாகத்தான் இருக்கும். கதையைப் படிக்கும்போது "பெரிதாக இதில் என்ன தாக்கம் நிகழப்போகுது?" என்றகேள்வி நெஞ்சிற்குள் எழுந்து, நிமிர்ந்து நீளும் முன்பே... முடிவு! அதுதான் மனதிற்குள் தெய்..தா.. போடுகின்றது. சாதாரண கதை என்ற வார்த்தைய மிஞ்சிக் கும்மாளமிடுகின்றது. "இப்படித்தான் நடக்க வேண்டும். நிச்சயமாக இப்படித்தான் செய்ய வேண்டும" என்று சொல்லிச் சொல்லி ஆர்ப்பரிக்கின்றது.

போடர் (border) செய்கின்ற ஒருவன் பெண்கள், ஆண்கள் என எத்தனையோ பேரை நாட்டிற்குள் நுழைத்து விடுபவன். மொஸ் கோவிலிருந்து அழைத்துவந்த ஒரு பெண்ணுடன் மெல்ல நெருங்கு கின்றான்! மனச்சாட்சிக்கு ஒரு கனமான போர்வை போர்த்தி விட்டு, அவளோடு நெருக்கமாக... மிக நெருக்கமாக வெளியில் சுற்றுகின் றான். இந்தக் காட்சி பலர் கண்களில் படுகின்றது. செய்தி காற்றாய்ப் பறந்து வீட்டினுள் நுழைந்ததும் மனைவி புயலாகின்றாள். ஆனாலும் நிதானமான புயல்.

படிக்கும்போது மனம் பரபரக்கின்றது இவள் என்ன செய்யப் போகின்றாள்? வழமையான பெண்கள் வரிசையில் கத்திக்குளறி, ஓய்ந்து. மன்னித்து..... அவனை அழைத்துவந்து "கற்புக்கரசன்" அந்தஸ்தோடு மீண்டும் குடும்பம் நடத்தி... சே... என்று அலுத்துக் கொள்கிறது.

படிக்கின்ற எங்களின் அலுப்பை அசைத்துக் கொண்டு அவள் வெளியில் வருகின்றாள். கணவனின் அன்னியோன்னிய உலாவரு தலை நிஜமாகவே கண்களால் தரிசித்து மனதிற்குள் குமுறி, தணிந்து எடுக்கின்றாள் முடிவு! கோழையாகாமல் – கண்ணீரைச் சிந்தியபடி தலையில் கைவைத்துக் கொண்டிருக்காமல் – நிமிர்ந்து நின்று நீளமான சவுக்கால் ஓங்கி அடித்தமாதிரி ஒரு முடிவு. படித்துக்கொண்டிருந்த விழிகள் ஒருமுறை மூடிக்கொள்ள, அருமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான முடிவு என்று எங்களையும் மீறி உதடுகள் முணுமுணுத்துக் கொள்கின்றன. இந்த உன்னதமான முடிவை நீங்களும் ஒருதரம் என்ன என்றுதான் வாசித்துப் பாருங்களேன்.

"வழியனுப்பிவைத்தவள்" – பெண்மையின் துணிவைப் பார்த்தோம் இருபறவைகளில் – இங்கே இரக்கத்தைப் பார்க்கின்றோம். இந்த இரக்கம் பெண்களுக்கென்றே உருவாக்கப்பட்ட இரக்கம். பெண்கள் அல்லல் படுகின்ற இரக்கம். அதனால்தானோ இந்தக் கதா நாயகியும் அல்லல் படுகின்றாள்?

கணவன் தப்புப் பண்ணிவிட்டான். மற்றவர்கள் அதைச் சொல்லும்போது அவளுக்குத் தாங்க முடியாத கோபம் வருகிறது. வார்த்தைகளை அள்ளிக்கொட்டுகின்றாள். இதனால்தான்–இந்தப் பத்தினித்தனத்தால்தான் – ஆண்கள் பெண்களைச் சுலபமாக ஏமாற்றி விடுகிறார்களோ?

எவ்வளவு அழகாக ஒரு கைதேர்ந்த நடிகன் மாதிரி பொய்யை உண்மையான உருக்கத்தோடு சொல்கிறான். ஆறுபிள்ளைகளின் தந்தை என்பதைக்கூட மறந்து ...!

ஆனால் அவள் தாய்மையின் நெகிழ்விற்குள் அடங்கி நிற்பவள். அவன் சொல்வதையெல்லாம் நம்பி இரக்க உணர்வால் துடித்து...

"எப்படி முடிகிறது இந்தப் பெண்களால் இவ்வளவு அப்பாவித்தனமாக நடக்கவும், நம்பவும் எப்படி முடிகிறது!" என்று கதையைப் படிக்கும்போது இதயம் ஆதங்கப்பட்டு, அவனின் துயரத்தைத் துடைக்க நினைத்து ஆறுதல் வார்த்தைகளை வாரி வழங்கி கையில் பணத்தையும் தூக்கிக் கொடுத்து அவள் அவனை வழியனுப்பி வைத்தாள். வைத்தவள் ஓ..!

"போராளியாக" எங்களின் யுத்தப் பிரதேசத்தில் வாழும் ஒரு வயதான பாட்டியின் கனவும், துணிவும் மிக அழகாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

செல் தாக்குதலில் மகளையும் மருமகனையும் இழந்துவிட்டு பேரனுக்காக உயிர்வாழ்கின்ற கிழவி அவளின் பரம்பரைக்கு வாரிசாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கும் ஒரேதுளிர் இந்தப் பேரன். திடீரென அவன் ஒருநாள் காணாமல் போய்விடுகின்றான். பதை பதைத்த கிழவி வீட்டில் ஆராய்ச்சி நடத்துகின்றாள். பேரன் படித்த புத்தகங்கள், மற்றும் தடயங்களைப் பார்த்தவள் புரிந்து கொண்டாள். பெருமையோடி ணைந்த மகிழ்ச்சி அவளை ஆட்கொண்டது. பேரன் வருவான் பேரன் வருவான் எனக்காத்திருக்கின்றாள். மரணப்படுக்கையில்கூட பேரனின் வருகைக்காக விழிமட்டும். சோர்ந்து போகாமல் விழித்திருக்கிறது. பேரன் வந்துவிட்டான் அவள் எதிர்பார்த்த, காணத்துடித்த அந்தக் கோலத்துடன் "பாட்டி" என்ற உருக்கமான அழைப்போடு.

அவளின் விழிகள் அசையமறந்து பேரனையே பார்த்துக் கொண்டிருந்தது. அந்த நிலைத்த பார்வையோடு அவளின் இறுதி மூச்சு பரவசத்தோடு, ஆனந்தக் கண்ணீரின் அணைப்போடு பிரிந்து செல்கிறது.

படிக்கும்போது கதைமுழுவதும் இதயத்தோடு ஒட்டிக் கொள் கிறது. கிழவியின் சில உரையாடல்களின் வார்த்தைப் பிர யோகம் மனதைக் கௌவிப் பிசைகிறது.

"ஊர் போய் சேர்ந்தான்" இந்தக் கதையைப் படிக்கும்போது நெஞ்சிற்குள் நெருஞ்சி முள் உரசுவது போன்ற உறுத்தல். "இந்தக் கதாநாயகன் போல் நாங்கள் எத்தனைபேர்?" என்ற கேள்வி திரும்பத் திரும்ப எழுந்து மடிகிறது. சுதாகரிக்க நினைத்தாலும் முடியாமல் அந்த வினா மீண்டும் துளிர்ந்து உள்ளத்தில் உறைந்து நிற்கிறது. ஆமாம் நாங்கள் எத்தனை பேர்?

எப்படியும் வாழலாம் என்ற கோட்பாட்டை உடைத்து பணம் தான் பெரிதென்ற எண்ணத்தைப் புதைத்துவிட்டு இங்கே இது என்ன வாழ்க்கை? எனக் குமுறி அடிமைத்தனத்திற்குள் அடங்க மறுத்து வெளிநாட்டுப் போலி வாழ்க்கையைத் தூக்கி எறிந்துவிட்டு எங்கள் நாடு, எங்கள் மண், எங்கள் மொழி, எங்கள் பந்தம். எங்கள் பாசம், என அந்த இயற்கை நடைமுறைப் பிணைப்பிற்குள் வாழ்வதற்காக அவன் ஊர்போய்ச் சேர்ந்துவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யார் பைத்தியம்" மண்வாசனை கமழும் கதையிது. யாழ்ப் பாணத்தின் ஒருப்பக்கத்தெருக்கள் எல்லாம் அழகாக சித்தரிக்கப்பட்டு, அந்த மண்ணின் நடுவே எங்களை நிற்கவைத்து அந்தப் பைத்தி யத்தைக் கண்முன் காட்டுகின்றார் கதாசிரியர்.

அவள்படும் பாடு, அவளை மற்றவர்கள் படுத்தும் பாடு, அவளை ஆதரவாக அணைத்து ஆதரிக்கும் ஒரு மாது... என நிகழ்வுகளை நாம் பார்த்துக் கொண்டிருப்பது போல மிக யதார்த்தமாகக் கதை சொல்லப்பட்டிருக்கின்றது. மிக எளிமையாக மனதில் தாங்கி நிற்கின்ற அவள் ஓ பைத்தியமா?

"தனிமையும் இனிமையும்" தலைப்பிது தனிமை! வெளிநாட்டி லிருந்து காதலியை நினைத்து நினைத்து ஏங்குகின்ற தனிமை. அவளின் கடிதத்தைக் காணாமல் மருண்டு தவித்துப் போகின்ற தனிமை. ஒருவனின் வாழ்க்கையில் 'காதல்' இத்தனை பொல்லாததா? என்று சிரிப்போடு சிந்திக்க வைக்கிறது அவன் படும்பாடு. பாவம் என்ற பரிதாபத்தோடு நாமும் காத்திருக்கிறோம் அவனின் இனிமைக்காக அவளின் கடிதம் வருகின்றது. வார்த்தை ஜாலங்களற்ற இனிமையோடு படித்து அவன்மட்டுமா இனிமையின் பரவசத்தோடு நிற்கிறான்? இல்லை யில்லை... நாமும்தான் அந்த இனிமையைப் பார்த்துப் பேச முடியாமல் புல்லரித்துப் போய் நிற்கின்றோம். காதல் சுகத்தின் புதுமையான இனிமை. இதயத்தை இறக்கைகட்டிப் பறக்க வைக்கிறது. கூடவே தாழ்வு மனப்பான்மையில் எங்கள் தலை தாழ்ந்து கொள்கிறது.

இப்படித்தான் இந்த "திருப்பம்" என்ற சிறுகதைத் தொகுதியை நிறைத்து நிற்கும் அத்தனை கதைகளும், ஏதோ ஒரு வகையில் நெஞ்சைத் தொட்டுக் கொண்டு நிற்கின்றன. ஒவ்வொரு கதையின் முடிவும், சட்டென்று அடுத்த கதைக்கு எம்மைத் தாவவிடாமல் தடுத்து வைத்து வினா எழுப்பி விழிக்க வைக்கிறது. வாசகர்களை இந்த நிலைப்பாட்டிற்குள் நிறுத்தி வைத்திருப்பது கதாசிரியருக்குக் கிடைத்திருக்கிற "பெருவெற்றி" நிச்சயமாக இக்கதைகள் இலக்கிய ஆர்வலர்கள் மட்டுமல்ல, யாவரும் படிக்க வேண்டிய கதைகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நிய மண்ணில் இயந்திர வாழ்க்கையின் ஓட்டத்தில், இரு கால வேறுபாட்டின் அவஸ்தைகளுக்குள் அமிழ்ந்து கொண்டு வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கிற சூழ்நிலையிலும்கூட திரு. கி. கிறிஸ்ரியன் அவர்கள் இக்கதைகளை உருவாக்கித் தந்திருப்பது மிகுந்த சிறப்புக்குரியது. அவரின் இந்த இலக்கிய ஆர்வம் தணிந்து போகாமல் தொடரவேண்டும்.

"திருப்பம்" என்ற நற்தொகுதியை எங்கள் கரங்களில் தவழவிட்ட கதாசிரியர் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள் வாழ்த்துக்கள்.

**தமிழ்ப்பிரியா**
பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

என்தாய்மண்ணின் சமுகச்சூழலிலும் அகதிமண் வாழ்வின் தோற்றங்காண்பினிலும். ஏற்பட்ட தாக்கங்களே இச்சிறுகதைத் தொகுப்பு எமதுமண் போர்மேகம் சூழ்ந்த நிலையிலும் வீரத்துடனும், விடுதலைக்கீதத்துடனும் சொல்லொனாத் துன்பதுயரங்களைச் சுமந்து நிற்கும் இக்காலகட்டத்தில் புலம்பெயர்ந்தகலை இலக்கியவாதிகளின் கலைப்படைப்புகள் எத்தகைய பிரச்சனைகளை உள்ளடக்கி உயிர்த் துடிப்புள்ள இலக்கியமாக வெளிப்படுத்துகின்றார்கள்... என்ற மிகப் பெரிய கேள்வி கண்முன் வைக்கப் பட்டுள்ளதும் உண்மையே?

மக்களிடம் போய்ச்சேரும் இலக்கியம் என்பது ரசனைக் காகவோ, கற்பனை நயத்திற்காகவோ, கவலையை மறப்பதற்காகவோ, எழுதுவதெல்லாம் கதை என்று சொல்வதற்காகவோ மக்கள் இலக்கியத்தின் வெளிப்பாடு அமைவதல்ல. கவிதை எந்த அளவுக்கு உணர்ச்சியுள்ள உயிர்த்துடிப்புள்ள மகத்துவம் பெற்றதோ அந்த அளவுக்கு வலிமையும், உரிமையும், புரிமையும், நெஞ்சைநெகிழ வைக்கும் திறமையும். படிப்பினையும் சிறுகதை இலக்கியத்திற்கும் உண்டு. போராட்ட நிலைப்பாட்டின் நிதானமாக இக்காலகட்டத்தில் எழுதும் கதைகள் கற்பனை என்று சொல்வதை நான் அனுமதிக்கமாட்டேன்!.....?

கற்பனை நிஜமாகலாம் நிஜம் கற்பனையாகாது.

இந்தவேளையில் புலம்பெயர்ந்த சமுகத்தின் முன் உள்ள பிரச்சனைகளையும் வெளிப்படுத்தும் துணிவுள்ள கதைக்கான உள்ளடக்கக் கண்ணோட்டம் விழிப்பாகத் தேவை. 1981களிலிருந்து இன்றுவரை எழுதிய சிறுகதைகளின் தெரிவே இத்தொகுப்பில் உள்ளன. பிரான்சிலிருந்து எழுதியவையே அதிகம். நம் சமுகத்திடம் உள்ள தவறுகளை தாற்பரியங்களை, உயர்வுகளை. உண்மைப் போராட்ட நிகழ்வுகளை, உணர்ச்சிகளை, நம்மின உரிமைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தநாட்டிலிருந்து வெளிப்படுத்தினாலும் ஏற்றுக் கொள்வதில் தயக்கம் எதுவும் இல்லை! என்னுடைய எழுத்து நடையில் தேர்ச்சி, யதார்த்தம் இல்லாதிருக்கலாம், வளர்ச்சிக்கு அனுபவம்தானே அடிக்கல். நான் சின்னவன்தானே. இன்னும் காலம் உ ண்டு. என் எழுத்தையும் வாசகர்கள் சுமந்து சென்று விமர்சிக்கும் பக்குவம் நிறையக் காணக்கூடும். என்னுடைய அகதி வாழ்விலும் ஓர் அர்த்தம் இருக்க வேண்டும். அதை ஊர்ஜிதப்படுத்தவே 1982ல் பிரான்சில் காலடி எடுத்துவைத்த அதே ஆண்டில் "பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு" நடத்திய "எரிமலை" ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்து பல கட்டுரைகள், கவிதைகள சிறுகதைகள் எழுதி வாசகர் மத்தியில் தெளிவாக்கினேன். அதன் உணர்வோடு உயிரோடு மானத்தோடு ஒட்டிய ஓர்மத்தின் விளைவு புடம்போட்டுக் காட்டும் ஆக்கங்களை இன்றுவரை படைத்து வருகின்றேன். இதன் முனைப்பில் முதல் கவிதைத் தொகுப்பு "உயிர்ப்பில்" இவன் அடைந்த வெற்றியின் விமர்சனக் குவிப்போடு வெளிவருகின்றன இச்சிறுகதைத் தொகுப்பு "திருப்பம்". இதில் அடக்கப்பட்ட கதைகள் பற்றி பேசவேண்டும், என்மனச்சாட்சிக்கு மாசுபடாத கலைப் படைப்பாகத் திகழவேண்டும், தவறுகளைச் சுட்டிக்காட்டி சூடு போடும் போதுதான் தலைமுறையின் நிகழ்விலும் நிதானம் தெளிவாக்கப்படும்.

முதல் கதை "யார் பைத்தியம்" இக்கதையின் உள்ளடக்கம் பற்றி எழும் மன உரசலின் உபத்திரவத்தை உங்களோடு பகிர்ந்துகொள்ள என்னால் முடியும். முன்னுரையிலும் முகம்கொள்ள வேண்டும் நீங்களும் அதன் தாக்கத்தில் விழிப்பாக இருந்து பார்த்தல் வேண்டும். இக்கதையில் நடமாடும் "நாகம்மா" அவளையும் உணர்ந்துகொள்ள வேண்டும். தாய் மண்ணின் பெரியதெருக்கள் - சின்னக்கடைத்தெருக்கள் எல்லாம் அலைந்துதிரிந்த ஓர் ஆத்மாவின் அவலத்தைப் பார்க்கின்றீர்கள். தினகரனில் 11.01.1992ல் வெளிவந்த போது பல வாசகரின் வேதனை நிறைந்த கடிதங்களை என்னால் ஜீரணிக்க முடியாதிருந்தது. நாகம்மா தினமும் பாடுவாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொன்னான வாழ்வு மண்ணாகிப் போனால் துயரம் இதுதானா? இந்த உலகம் இதுதானா?" அவள் இன்று தாய்மண்ணில் மண்ணாகிப் போய்விட்டாளா? மனிசியாக வாழ்கின்றாளா? எப்படி இருந்தபோதிலும் இக்கதையில் அழியாது உயிர் வாழ்கின்றாள்.

இன்னுமொரு விதமாக உள்ளடக்கத்தை வெளிப்படுத்து கின்றது "இருபறவைகள்" அகதிமண்ணின் அவல நிலையிலும் பெண்களின் போக்கில் ஏற்படும் மாற்றங்களும் தடுமாற்றங்களும் பிற் பாடு ஏற்படும் பெண்மியத்தின் சீற்றத்தையும் நிமிர்ந்த நெஞ்சத்தையும் இருபறவைகள் உணர்த்தி நிற்கின்றன. அடுத்தடுத்து வரும் கதைகள் யாவும் என் கண்ணிலும்—மனதிலும் ஏற்பட்ட பாதிப்பேயாகும். ஒவ்வொரு சிறுகதையையும் நான் சொல்வதைவிட நீங்கள் வாசிப்பதில், யோசிப்பதில், அவற்றை விமர்சிப்பதில், ஒருவகையான அவசியம் இருக்கும்.

எம்மண் துன்பதுயரங்களுக்கும் போராட்ட நெறி முறைக்கும் விடிவு கிடைக்கவேண்டும் என்ற நம்பிக்கை யில் பிறந்து நிமிர்ந்த கதைகளும் உண்டு. தானாகப் பிறந்ததெனக் கதைகள் இல்லை. நான் கண்டும் கேட்டும் ஆத்திரப்பட்டும் நெஞ்சு கனத்தும். கவலைகளால் ஆவேசம்கொண்டும், புலம்பெயர்ந்த வாழ்வியலாள் சீறிப்பாய்ந்தும். நெகிழ்ந்தும், என்மண்ணின் விடியலை எண்ணி ஏக்கப் பெருமூச்சாய் ஊதித்தள்ளியும் விழிப்புற்ற கதைகள் – இவையாவும் எழுதிமுடித்து அச்சாகி வந்து விட்டது. உங்களின் ஏச்சும், பேச்சும், நேசிப்பும், விமர்சிப்பிலும்தான் என் கலை இலக்கியச் சுவாசிப்பு. வாசகர்களாகிய உங்களுக்கு நன்றி. எனது முதல் நூலான "உயிப்பில்" கவிதைத் தொகுப்பை வெளியிட்டு என்னை மேலும், மேலும் எழுதத்தூண்டி உற்சாகப் படுத்திவரும் எனது உயர்வில் கரிசனையுள்ள திரு திருமதி. அருள் அருளானந்தம் (பிரித்தானியா) அவர்களுக்கு நிறைய சடமைபட்டிருக்கிறேன், இச்சிறுகதைத் தொகுதிக்கு அணிந்துரை வழங்கிய தமிழ்ப்பிரியா அவர்கள் 1975களில் இலங்கை வானொலிச் சேவையில் இசையும் கதையும், சிறுகதைகள் என்றும், ஆர்வத்தோடு இலங்கை, இந்தியத் தமிழக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகை, சஞ்சிகைகளில் சிறுகதைகள், குறுநாவல், கவிதை, விமர்சனம், நாடகங்கள், என்று இலக்கியப் பரப்பில் தன்னை இனம்காட்டிக் கொண்டவர். ஈழகேசரி ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும் – தமிழ் இலக்கிய தாகம் தீர்த்தவருமான தமிழீழத் தாயின் முதிர்ந்த அறிவு ஜீவியுமான சீ. வைத்திலிங்கம் அவர்களின் அடியேற்றிய தமிழ்ப்பிரியா அவர்களின் அணிந்துரை இச்சிறுகதைத் தொகுப்பில் இடம் பெறுவதும் மகிழ்ச்சிக்குரிய நன்றியாகும். அட்டைப்படம் வரைந்த ஓவியர் அவர்களுக்கும், இந்நூல் வெளிவர சிறப்பாக வெளிவர உதவிய அன்பு நண்பர் 'தமிழ்நெஞ்சம்' அமின் அவர்களுக்கும், இச்சிறுகதைத் தொகுப்பினை அழகாய் வடிவ மைத்துத் தந்தசெல்வி சப்ரினாவுக்கும், சிறந்த முறையில் அச்சிட்டுத தந்த அச்சகத்தாருக்கும் சிறப்பாய் வெளியிடும் பதிப்பக நிர்வாகி களுக்கும் என் நன்றிகள்.

**மா.கி.கிறிஸ்ரியன்,**
பிரான்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பம்

சிறுகதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் பைத்தியம்

விடியற்காலை நேரம்.

மாசிப்பனி மூசிப்பெய்த மந்தகாரம் மறையாது பகலவன் ஒளியில் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருந்தான். ஏழுமணியானால் சோமர்செட் கார் நேரம் தப்பாது நிற்பாட்டுற இடத்தில் வந்துநின்றுவிடும். இன்றும் வழமைபோல் காரை நிற்பாட்டியதும் அவுக்கென்று கதவைத்திறந்த ஆபீசர் திகைத்துப்போய், "என்னடா இது? யாழ்ப்பாணம் சுங்க இலாகா காரியாலயத்தின் பின்பக்க வளவில் நீண்ட நெடுங்காலமாக பேரம்பேசி நிற்கும் அரசமரத்தடியின் கீழ் சைக்கிள் நிற்பாட்டப் போடப் பட்ட பழையகாலத் தகரக்கூரை மூலையிலிருந்து என்றுமே கேட்டறியாத அனுங்கல். காற்றின் காதலோடு மேலேழுந்து முந்திக்கொண்டிருந்தன. எத்தனை நாட்கள் நான் இந்த நேரத்தில் வந்திருக்கிறேன். ஒருக்காலும் இல்லாத புதினமாக இருக்குது!" என்று திடுக்கிட்ட நிலையிலிருந்து விடுபட்ட ஆபிசர் கழுத்துரையை வலக்கையால் அங்குமிங்குமாக ஆட்டி நேர்ப்படுத்திக் கொண்டபடி கடத்தல்காரன் ஒரு வனை பிடித்துவிட்ட வெற்றித் திலகம்போன்ற வீரப்பிரதாபத்துடன் அரசமரத தடியை மோப்பம் பிடித்த நாய்போல் சுற்றிவந்தார். மூலையில் கண்ட காட்சியின் தாக்கத்தால் பிதுங்கிய கண்கள் பிசகற்று, கமராவில் விழுந்த புகைப்படம் போலாகி இருந்தார் ஆபீசர். கையும் காலும் மெய்யோடு ஒட்டியபடி பெட்டியில் அடைத்த பாம்பாட்டம் பட்டுச் சேலைத் தலைப்பால் போர்த்தபடி சுருண்டு கிடப்பது பெண்தான் என்பதை ஊகித்தறிந்து கொண்டார். கனநேர அதிர்வின் பின்பு ஒரு உலுப்போடு.

"இந்தப் பொம்பிள இங்க ஏன் வந்தாள்?" மனசுக்குள் துருவிக்கொண்டிருந்த கேள்விக்குப் பதில் கிடைக்க மனசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுருட்டிய போது கிடைத்த பதில் கேள்வியைத் துணிச்சலோடு தொடுத்தார் ஆபிசர்.

"யார் நீ? அடிபெண்ணே யார் நீ?"

கரகரத்தக் குரலின் குத்தலால் பதறித்துடித்து எழும்பியவள் "யாரடா நீ...? யாரடா நீ? எந்தக் களவாஞ்சியடா நீ?" என்றாள்.

வெற்றித்திலகம் வெருண்டவனாட்டம் பகடியாகக் கேட்டார். "தாயே! உனக்கென்ன பையித்தியமா? இதில வந்து படுக்கிறாய்?"

"யாருக்கடா பையித்தியம்? உனக்குத்தான் பையித்தியம். என்ன விட்டுட்டு இன்னொருத்தியோட போன ஓடு காலி நீதான் பையித்தியம்.. நீதான் பையித்தியம்".

ஆபீசர் மனசு பனிக்கட்டியாய் உருகியது. "இது கல்யாண சமச்சாரம் போலியிருக்குது". படாரென ஒரு கும்பிடு போட்டார். "நான் வருகிறேன்" என்று வாய்மட்டும் புலம்பியது மனசு அந்த இடத்தைவிட்டுப் போகாமல் வேலிபோட்டது.

"பெண்ணே உன்ர நன்மைக்காகச் சொல்லுறேன் இது அரசாங்கக் காணி. கதவு திறந்திருக்கென்று இதுல நெடுகப் படுக்க ஏலாது".

"போடா போ! நானும் அரசாங்கச் சொத்துத்தான். எனக்கும் இதில பங்கிருக்கு உனக்குத் தெரியாதாக்கும்" நக்கல் சிரிப்பொன்றை நறுக்கெனத் தொலைத்துவிட்டுக் குழைந்து நின்றாள்.

"நான் உன்னொட வம்பளக்க வரயில்ல, எந்த ஊர் என்றாவது சொல்லு"

"உனக்கேன் என்ர ஊரைப்பற்றி?"

"என்ன பேர் என்றாவது சொல்லித் தொலை யேன்"

"சொல்லமாட்டேன். சொல்லமாட்டேன்."

"அம்மா தாயே ஊர்பேரைச் சொன்னாத்தானே பொலீசட்டச் சொல்லியாவது உன்ன அங்கு கொண்டு போய் விட்டுடச் சொல்லுவேன்."

"உனக்கேன் இந்த அலுவலெல்லாம்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நானும் மனுசன்தானே? சும்மா ஒரு உதவிக்கு." ஆப்பீசர் கடவாயிலிருந்து வீணி ஒழுகியது.

அவள் திமிரோடு "சும்மா கேட்பீங்க. பின்னால சுமக்கிறேன் என்பீங்க. கொஞ்ச நாள்போக இன்னொரு 'தோற' முப்பத்திரண்டு பல்லையும் காட்டினாப்போதும் அவளையும் வைச்சுக்கிறேன் என்று ஓடியிடுவீங்க. இப்படித்தானே உங்க குணங்கள்." அவளுடைய பதிலிலும் கேள்வியிலும் வேதனையின் சாயல் சாரமாரியாகக் கிடந்தது. "இவளை யாரோ ஏமாற்றித் தொந்தரவு பன்னியிருக்கிறான். அந்தக் கோலம்தான் இந்தக் கன்றாவி போலிருக்கு. வடிவாகவும் இருக்கிறாள், வயசும் அவ்வளவாக இருக்காது, பையித்தியமென்றா என்ன வந்திட்டு மூக்கு முழியோடு லட்சணமாகவேற இருக்கும் போது?"

ஆப்பீசரின் இளகிய மனசு அவளை உரிஞ்சு விட்டுப் பார்க்கக் கனவு கண்டுகொண்டது. முகத்தால எண்ணெய் கசிந்து ஒழுகிக்கொண்டிருந்தது. பல்லு முப்பத்திரண்டும் சொண்டுகள் சொருகிக் கொண்டதால் பளிச்செனத் தெரிய சொக்கிப்போய் நின்றார்.

சுங்கக் காரியாலய முதல்வர் காரைவிட்டு இறங்கி யதும் ஆப்பீசர் இடிஞ்சுபோய் நிற்கும் கோலத்தையும், அவர் முன்னால் பெண் ஒருத்தி சாறித் தலைப்பைப் பற்களால் சப்பிச்... சப்பி "இளிச்சுக்கொண்டு" நிற்பதைக் கண்டு கொண்டவர் முகத்தில் எள்ளு வெடித்தது. உறு மிய உறுமல் காரியாலயக் கட்டிடமெங்கும் எதிரொலித்தது.

"என்ன இங்கு நடக்குது?"

குரல் எதிரொலியோடு முந்திக்கொண்டவள் தன்ர பாட்டுக்குப் பாடம் சொன்னாள். "ஐயா! நான் என்ர பாட்டுக்கு இந்த மூளையில் படுத்துக்கிடந்தேன் இந்த ஆள் என்கிட்ட வந்து ஏதெல்லாம் சொல்லுறான் ஐயா."

காமுகக் கனவிலிருந்து விடுபட்ட ஆப்பீசர் "வணக்கம் சார்! அப்படி ஒன்றுமில்ல. இந்தப் பொம்பிள யாரென்று எனக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாது. பைத்தியம் போல தெரியுது. இங்கின படுக்கக்கூடாது என்று துரத்தத்தான் வந்து நிற்கிறேன்."

"வந்ததும் வடிவா இருக்கென்று வாயால ஒழுகிற்றோ?"

"அப்படியில்ல சார்."

"அது கிடக்கட்டும் முதலில நீங்க உள்ள போங்க" கையை நீட்டித் திரும்பியபடியே. "ஏய் பெணணே, நீ இந்த இடத்தைவிட்டு எங்காவது போயிடு. இல்லாட்டி பொலிஸில புடிச்சுக் கொடுத் திடுவேன். போ... போ இங்கிருந்து."

அவளும் தலையாட்டிவிட்டு "பொலிஸாம் பொலிசு... அந்த நாய்கள் வந்து என்னை என்ன பண்ணப்போறாங்க?" வாசலை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தவளை உள் வாசலில் நின்று அணில் ஏறவிட்ட குரங்குபோல் தவிப்போடு பார்த்துக்கொண்டு நின்றார் ஆப்பீசர்.

நாட்கள் எப்படியோ நகர்ந்துகொண்டிருந்தன. இவள் பைத தியம் "நாகம்மா" மட்டும் இரவு நேரங்களில் விழித்த விழி செருகச் செருக மூலையில் தூக்கி எறியப் பட்டவள்போல குந்திக்கொண்டே இருப்பாள்.

கிட்டங்கித் தெரு, ஓடைகளுக்கையும், கோட்டடி பின் பக்க வராந்தாக்களிலும் யாரும் இல்லாத நேரம் பார்த்து சுங்க இலாக்கா அரசமரத்தடி வளவுக்குள்ளும் இவளது ஆத்மா உறங்கிக் கொள்ளும். இவள் சுங்க இலாக்கா அரசமரத்தடியில் படுக்கவே அதிகம் விரும்புவதும் அரசாங்கக் காணியென்பதால் காமவெறியில் நாய்போல திரியிற காவாலியின்ர தொந்தரவு இல்லாம படுக்கலாம் என்ற பயப்பாடுதான்.

கனநாட்கள் கழிந்துபோனதால் கட்டியிருந்த பட்டுச் சேலையும் கந்தலாய்ப்போச்சு. நொந்து போனவளின் பரிதாபக்கோலத்தைப் பார்த்த பச்சாதாபத்தால் பறங்கித்தெரு பறங்கி மனிசி கொடுத்த சீத்தச்சரமும், நீலநிற பப்பிலின் ரவிக்கையும இரவு நேரக் காமப்பேய்களிடமிருந்து தன்னைத்தானே காபந்து பண்ணிக்கொள்ள ஒரு கறல் புடிச்ச கொடுவாக்கத்தியும், சோறு வாங்கிச் சாப்பிட நெளிஞ்ச அலுமீனியக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிண்ணியும், தட்டும், கோப்பையும். பழங்காலத்து கம்பளிப் போர்வையும், மியுசியத்தில் வைக்கப்படவேண்டிய வேடிக்கையான பொருட்கள். இவை அனைத்தையும் பூட்டிப் பாதுகாக்க ஒரு சாக்குப்பை, இவைதான் இவளது தாய்வீட்டுச் சீதனச்சொத்து.

சிலநேரங்களில் விலைமதிக்கமுடியாத இச்சொத்துக்களையும் களவுகொடுத்துவிட்டு அந்தரிப்பாள் பாவப்பட்ட ஜென்மத்தின் கோபமும் தவிப்பும் கண்கொண்டு பார்க்க முடியாத கோரணியமாகக் காட்சிகொடுக்கும். றோட்டெங்கும் அங்கும் இங்குமாக ஓடி ஓடி அவளது உள்ளக்கிடக்கை வெளிப்படுத்துவாள். வாயில் வந்த தூசண வார்த்தைகளால் ஏசுவாள். இந்நேரங்களில் இவளது கோபத்தைத் தென்றல் தாலாட்டுவதுபோல் பதமாக இதமாகத் தனிப்பாள் பறங்கித் தெரு பறங்கிமனிசி. அந்த இளகிய இதயம் தன்னிடம் உள்ளதைக் கொடுத்து ஆறுதல் சொல்லி அனுப்பும் போதுதான் அவளிடமிருந்து வேதனைப் புன்னகையும் புகைந்து செல்லும்.

இதைவிட மோசமான நாட்கள் மாதம் ஒருமுறை வரும்போது இந்தஜீவனின் கோலத்தைப் பார்க்கமுடியாது? வீதியோர மனிசற்ற நாவில் "இவள் என்றும் தேறமாட்டாள்" என்று முடிவுகட்டிவிடுவார்கள். அந்தநாள் முழுநிலவு நாளாகும். அவளது மேனியில் ஆடைகளும் அரை குறையாகிவிடும். அந்த நாள் இவளுக்கு விலக்கப் பட்ட விபரீத நாளாகும்.

உச்சச் சூரியன் உசிர வாங்கிக் கொண்டிருக்குது. கோட்டடி விராந்தைய விட்டு எழும்பி மாநகர சபை வழியாக அலுப்பாந்திச் சந்தியால திரும்பி நடந்தாள். மயங்கிய கண்களோடு, தலையும் சுற்றிக்கொள்ள நடந்தவளின் காதில் சிணுங்.. கிணுங் சத்தம் கேட்டதும் மெதுவாகத் தலையைச் சரிந்து பார்த்தாள். பித்தம் தலைக்கேறி சுக்கு நூறாய் வெடித்திடும்போல் சுருட்டியது! அடிவயிற்றிலிருந்து எழுந்த நெருப்பு வெட்கையின் வேதனையோடு காறித் துப்பினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய்! பொறுக்கி. குடிகேடா – சேட்டு. சூட்டுப் போட்டுத் திரியிறியா? சையிக்கிலில வேற சொகுசா சவாரி வாறயா?"

மெதுவா வந்த சைக்கிள் எத்தனை மைல் வேகம் உதைக்க முடிந்ததோ அந்தளவு வேகம் பாய்ந்தது. தலைதெறித்த பயத்திலும் மானத்த வாங்கிடப் போறாள். இவளா பையித்தியம் அந்தக் கச இருட்டிலயும் குறிப்பு வைச்சிருக்கிறாளே. இந்தளவு பயம் அவன் வாழ்நாளில் கண்டிருக்க மாட்டான். இனிமேல் இப்படியான இழிவு கெட்ட சமாச்சாரத்தில் பிரசன்னமாகவும் மாட்டான்.

நாகம்மா கதறிய கதறலில் கதிகலங்கிப் பக்கத்தில லொறியில் வந்த ஓடுகளைச் சுமந்து வந்த பொம்பிள "என்ன நாகம்மா ஏன் இந்தக் கத்துக் கத்துறாய்?"

"இதில சையிக்கிலில சிவத்தச் சேட்டோட போனானே அந்த அறுவானத் தெரியுமா உனக்கு?"

"யார்... இங்கின ஒருத்தரையும் காணயில்லையே."

"அந்தக் காமப்பேய் பறந்திட்டு"

"சரி என்ன நடந்தது என்றாவது சொல்லேன்?"

"எளியவன் பொம்பிளப் பொறுக்கி, நேற்று இரவு கோட்டடி விராந்தையில என்ரபாட்டில படுத்துக்கிடந்தேன். என்ன நேரமோ தெரியாது. குறுக்காலபோனவன் என்கிட்டவந்து தன்னோட இணங்கி வரும்படி தொந்தரவு படுத்தினான். நான் மசிஞ்சு கொடுக்கயில்ல. இங்க பார்தாயே பார். அந்த நாய் எப்படி விராண்டிப் பங்கப் படுத்தியிருக்கிறான். என்ன பாடுபடுத்தியிருக்கிறான்" என்று முகத்தை யும், கைகளையும் தூக்கிக் காட்டியபடி சொன்னாள். கண்களிருந்து பீறிட்ட பெரும் மழை இவ்வையத்தையே அழித்துவிடும் போலிருந்தது.

கடும்புயல் வீசி அடங்கிய உணர்வோடு நின்ற வளைப் பார்த்து "நாகம்மா இப்படி எத்தனைப் படுபூாவிகள் இந்த ஊரில உசிரோடு உசத்தியாக உசுப்பிக்கொண்டு திரியுதுகள்."

"திரிஞ்சா எனக்கென்ன? என்னட்டத்தானே இந்தச் சேட்ட வாய்க்காது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுதான் உன்னையே அந்த நாய்கள் மொய்க்கிறது."

"வரட்டும் இனி. வைச்சிருக்கிற கொடுவாக் 'கத்தியால கொளுவி இழுத்துவிடுறேன் பாரில்ல."

"அப்புடிச் செய் நாகம்மா அப்பத்தான் திருந்து வாங்க".

"சரி நீபோ. ஓட்டச் சுமந்துகொண்டு என்ர கவலை யையும் சுமக்கிறே, நீ போ நான் போறேன்."

ஓடு சுமந்தவள் நிலைகுத்தின பார்வையோடு ஒருகை ஓட்டிலும், ஒருகை நாடியிலுமாக நாகம்மாவின் தைரியத்தை யோசித்தாள், "இவளுக்கா பையித்தியம்?"

வாழவேண்டிய பருவத்தில் வாழ்க்கையைப் பறிகொடுத்து விரக்தியால் காய்ந்து சருகாகப்போன பெண்கள் மத்தியில் இவளும் ஒருத்தி. ஒரு பக்கம் ஆசை, ஒரு பக்கம் பயம். ஒரு பக்கம் வைராக்கியம், ஒரு பக்கம் எதிர்க்க முடியாத இயலாமை - இப்படி எத்தனைவிதமான மனக் குமுறல்களுக்கு மத்தியில் இவள் போன்ற பெண்களின் வாழ்க்கைப் பாதை பயணமற்றுப் படுகுழிக்குள் தள்ளப்பட்டுள்ளது!

நெஞ்சு ஏக்கப் பெருமூச்சுக்களால் விம்மித் தாழ்ந்து எழ சுங்க இலாக்க சந்தியால் திரும்பி வழமையான வீட்டுவாசல் முன் வந்து நின்றாள். இவளிடமுள்ள பிடிவாதகுணம் - பிச்சையென்று வாய்திறந்து கேட்க மாட்டாள். சாப்பாடு வேணுமா நாகம்மா? என்றால் மட்டும் கிண்ணிய நீட்டுவாள். சோற்றை வாங்கிக்கிட்டு வாய்திறந்து பேசாமல் இரண்டு சொண்டையும் மூடியபடி ஒரு இழுப்பு மட்டும் இழுத்துவிட்டுப் போயிடுவாள். இண்டைக்கு அந்தச் சேட்டைக்கு ஆள்ர மனசு மசியயில்ல?

"என்னம்மா நானும் தினமும் வாறேன் சோற்றத் தாரீங்க, ஒன்றுமோ என்னட்ட நீங்க கேக்கிறீங்க இல்லையம்மா?"

வீட்டுவாசல் நிலையோடு சாய்ந்தபடியே இரு கைகளையும் கட்டிக்கொண்டு இலட்சணமான புன்னகையோடு தனக்கே உரித்தான இதழ்விரித்த பாலைச் சிரிப்போடு நின்றவள் "என்ன நாகம்மா இன்டைக்கென்று உன்ர வாய் திறந்திட்டு?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒன்றுமில்லையம்மா என்ர மனச அரித்துக் கொண்டிருக்கிற கவலைகளை யாரிடமாவது அள்ளிக் கொட்டிவிடவேணும் போலிருக்கு."

"சரி என்னட்டக் கொட்டேன் உன்ர குழப்படிகளை".

சின்னச்சிரிப்போடு "என்ர குழப்படியில்லையம்மா. என்னை விட்டகலாத குழப்பம்."

"நாகம்மா, முதலில் இந்தப்படியில இரு".

"நான் இங்கேய நிற்கிறேன். நீங்க இருங்கம்மா".

அத்தாய் வீட்டுவாசல் விராந்தவிலிருந்த ஈச்சிச் சேரை இழுத்து அமர்ந்துகொண்டாள். தன்னை ஒருமுறை கிரகித்துக கொண்ட நாகம்மா தன் சோகக்கதையைச் சொல்லத் தொடங்கினாள். "அம்மா நானும் இந்தச் சனங்களப்போல நன்றாகத்தான் இருந்தேன். என்ர அப்பன் அம்மா என்ன நல்லா வளக்கிறளவு சொத்துப் பத்து வைத்திருந்ததுகள். நான் வளர்ந்து வாறது அந்தச் சாமிக்கு புடிக்கலப்போல: என்னப் பெத்ததுகள் ஒன்றன்பின் ஒன்றாக பரலோகம் போய்ச் சேர்ந்திட்டுகள்." இந்நேரம் அவளது இதயவிம்மல் அத்தாயின் காதுகளில் கேட்டது. எச்சிலை உமிழ்ந்த போது அவளுக்கு அவ்வேளைதான் தெரிந்தது தன் வாயினுள் அந்த உமிழ்நீரும் இல்லை என்று. இரக்கம்முள்ள அத்தாய் தன் பிள்ளைகளில் ஒருத்தியைக் கூப்பிட்டுத் தண்ணீர் கொண்டுவரச் சொன்னாள். தண்ணீரைக் குடித்தவள் கண்ணீரை காணவில்லையே என்பதை உணர்ந்தவளாய். "அம்மா" என்று குழந்தையைப்போல அழத்தொடங் கினாள். விம்மல் மேலிட அதன்பிறகு "அம்மாவட ஆச்சிதான் நேசத்தைக்கொட்டி இந்தமட்டும் வளர்த்தது. தன்ர ஆயுள் போவதற்கு முன் எங்கேயோ கிடந்த அறுவானுக்குக் கல்யாணத்தையும் கட்டி வைச்சுது. அந்தக் கிழவி இருக்கும் வரைக்கும் என்ர சொத்தப் புடுங்கிற நரிக்குணத்தோடு நல்லாத்தான் இருந்தான். நானும் அவன் சொல்லிறபடியெல்லாம் ஆடினேன். என்ன மாயாஜாலம் பண்ணி னானோ அவன் விரும்பியபடி சொத்த தன்ரபெயருக்கு எழுதித்தரும் படி ஒருநாள் வந்து நாண்டு கொண்டு நின்றான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நேரம் இடைமறித்த அந்தத் தாய் கேட்டாள், "ஏன் நாகம்மா என்ன ஏதுக்கென்று நீ ஒன்றும் வாய்திறந்து கேக்க யில்லையா?"

"கேட்ட நானம்மா."

"அப்ப உன்ர புருஷன் என்னதான் சொன்னான்?"

"உறுதிய ஈடுவைத்து காசு வாங்கிப் பெரிய தொழிலாச் செய்யப் போறேன்" என்று கெஞ்சிக் கொண்டு நின்றான்.

"உன்ர ஆச்சி அயலவங்கட்ட ஒன்றுமே கேக்கலியா?"

"இல்லையம்மா, நம்மட புருஷன்தானே நமக்கெங்க பிழவிடப்போறான் என்ற பயபக்திதானே"

இந்தத் சமயத்தில் உள்ளிருந்து ஒருகுரல். "அம்மா தேத்தண்ணி குடிக்க வாங்க."

அங்கிருந்தபடியே "எனக்கு வேணாம், நீங்க குடியுங்கோ, எனக்கு நாகம்மா சூடான பானம் தந்து கொண்டிருக்கின்றாள்." என்று குரல் கொடுத்துவிட்டு நாகம்மாவின் எரிமலையான விழிகளைப் பார்க்கச் சகிக்காமல் சற்று எழுந்து நிமிர்ந்தவள் "என்ன நாகம்மா இன்னும் மிச்சமிருக்கா?"

"அம்மா என்ர சோகக் கதையின் கடைசியையும் சொல்லிவிட்டால் என் மனசு லேசாகிவிடும் என்று நினைக்கிறேன்."

"சரி நாகம்மா உன்ர குடும்பக்கதையைத் தொடங்கு."

"கையெழுத்துப் போட்டுக்கொடுத்து கொஞ்ச நாளால என்ர ஆச்சியும் எனக்குப் "புள்ளபுறக்காது" என்று டாக்குத்தரம்மா சொன்ன துக்கத்தப் பொறுக்கமாட்டாமலே யோசிச்சு.. யோசிச்சு அந்தக் கிழவியும் உயிர விட்டுட்டு. என்ர புருஷனுக்கும் புழுகாப்போச்சு. என்ர பிராணனை வாங்கத் தொடங்கி விட்டான். ஒரு நாளா, இரண்டு நாளா? ஒரு வருஷமா, இரண்டு வருஷம?, அவனோட வாழ்ந்த நாள்முதல் நரகவேதனை அனுபவிச்சேன் அம்மா."

இந்நேரம் அவர்கள் முன் தபால்காரன் வந்து நின்று சையிக்கில் பெல்லை அடித்தான், உசும்பவில்லை அவன் "தந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருக்கு உங்களுக்கு" என்றும் கூப்பிட்டுப் பார்த்தான். அவர்கள் அசையாது சோகக்கதையில் சோப்பிழந்து நின்றார்கள்.

"திரும்பவும் பெலனாகப் பெல்லை அடிச்சான்".

திடுமெனத்திரும்பிய பார்வையில் "என்ன தந்தியா?" என்று கேட்டபடி அவன் கிட்டப் போனாள் தாய். கையெழுத்துப் போட்டுத் தந்தியை வாங்கிவிட்டு நாகம்மாவைத் திரும்பிப் பார்த்தாள். நாகம்மா சோற்றுக் கிண்ணிய பார்த்தபடி தன் வழமையான பாடலைப் பாடத்தொடங்கினாள் "பசி பொறுத்தாலும் பாட்டுப் பொறுக்குமா? பொன்னான வாழ்வு மண்ணாகிப் போனால் துயரம் இதுதானா? இந்த உலகம் இதுதானா?" பெலமாகப் பாடி அசைந்து ஆடியவள் றோட்டாலப் போற மனிசற்ற பார்வையைக் கூர்ந்து கவனித்தாள். திரும்பவும் தான் கையில் வைத்திருந்த சோற்றை அள்ளித் திண்றபடித் தன் மாளிகை வந்து சேர்ந்தாள்.

கதிரவன் கண்தூங்க அவளது அரன்மனை அரசமரத்திற்குள் மறைந்து கொண்டிருந்தான். முதல் ஷோ படம் முடிஞ்சு ரசிகர்கள் வரும் நேரம். அரசமரத்தடியின் கீழ் நேர்முகக் கற்பழிப்புக் காட்சி மிகவும் கொடூரமாக அரங்கேறிக் கொண்டிருந்தது!.

"ஐயோ... ஐயோ என்னைக் காப்பாற்றுங்கோடா! தொலைஞ்சு போவானே, என்னை விடடா..."

"எடியே உனக்கு காசு தாரன்ரி நல்ல சேலை வேண்டித் தாரன்ரி,"

"இண்டைக்கு என்னோட படன்ரி."

"சண்டாளப் பாவி எனக்கேன்ரா ஒன்ர காசெல்லாம்? உன்ர மனிசிய யாரோட விட்டுட்டடா என்னட்ட வந்தனீ?"

அவளுடைய கதறல் ஊரே அதிரும்படியாக முழங்கிற்று. படம் முடிந்து வந்த சனங்களின் காதுகளையும் துழாவிக் கொண்டது. சனங்களின் காலடிச் சத்தம் "ஆசாமியின்" காதுக்குள் ரீங்காரமிட்டது. வெறி அடங்கி மனப்பயம் பலமாகத் தொட்டுக் கொண்டது. திமிறிப் பாய்ந்து ஓடத்தொடங்கினான். அவளும் தன் பலம் கொண்ட பிடியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது தேகத்தை இறுகப்பிடித்து இழுபட்டுக்கொண்டு கத்திக் குளறினாள்.

நாலா பக்கத்தாலும் சனம் மொய்த்துப்பிடித்தது. பலரது கைகள் கூட்டத்தோடு கூட்டமாக அடி—பிடி படிமானங்கள் யூடோ, கராட்டி என அவன் தேகத்தைப் பதம் பார்த்தன. உயிரறுந்த வெட்கத்தோடு அறுத்துவிட்ட ஆமையட தலையாட்டம் அவன் தலை தொங்கிக் கிடந்தது. கூட்டத்தில் நின்றவருள் ஒருவன் அவன்ர நாடியப் பிடிச்சு உசத்தினான்! சுற்றி நின்றவர்களின் மூச்சு உறிஞ்சிய சத்தம் அடைபட்ட வாய்க்கால் தண்ணி உடைபட்டு ஓடியதுபோல் இருந்தது.

"டேய் நீயா? என்றான் ஒருவன்.

"நம்ம வாழைப்பழ ஆறுமுகம்!" என்று பெயர் சொன்னான் இரண்டாமவன்.

"ஏன்ரா! உன்னட கிளிக்குஞ்சு மனிசி எங்கேடா?" என்று கேள்வி கேட்டான் மூன்றாமவன்.

"அட பொறுக்கி; காசுயுள்ளனிதானே? வேறு எங்காவது போறதுதானே?" என்று நியாயம் பிளந்தான் நான்காமவன்.

சனம் வாழைப்பழ ஆறுமுகத்தின் மேல்வைத் திருந்த மதிப்பு, மரியாதை அன்பு எல்லாம் காமவெறியில் ஒரு நொடிக்குள் களங்கப்பட்டுவிட்டது.

முகம்கொள்ள முடியாத ஏச்சும் பேச்சும் இதயத்தைக் கனக்கவைத்ததும் ஒருவகையான பயத்தைரியம் ஆறு முகத்துக்கு வந்தது. திமிர்கொண்டடிச்சுத் தன்னை விடுவித்துக்கொண்டான். தலைகுனிந்தபடியே நாக்குத் தெறிக்க ஓட்டம் எடுத்தான். மனசின் அடி நாளைய செய்தித்தாள்களின் தலைப்புச் செய்தியாவதை எண்ணி நெக்குருகியபடி ஊரைவிட்டே போய்க்கொணடிருந்தான்.

நாகம்மா தன்னுடைய மனச ஆற்ற கலீர். . கலீர் என்று வாய்கிழியச் சிரித்தாள். அச்சிரிப்பின் எதிர்த்தாக்கம் "மண்ணுக்குள்ளே சில மூடர் — நல்ல மாதரறிவைக் கெடுத்தார்" பாரதியின் காணம் பெண்வர்க்கத்தின் பெருமையினைப் பேரிடிபோல முழங்கிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேகத்தின் அலுப்பு வேதனையை வேண்டிக் கொண்டது. தொலைவானின் தொல்லையால் பயத்தால் 'மாசக் கழிவும்' வந்தது. அவள் உடுத்தியிருந்த சறமெல்லாம் ஊறியிருந்தகாட்சி 'பற்றிக்' சீலையாட்டம் காட்சியளித்தன. பசியும் களைப்பும் கண்ணை மறைத்துக் கொள்ள வழமையான வீட்டுவாசல் முன்வந்து நின்றாள்.

"அம்மா" என்று கூப்பிட்டபடியே கதவைத் தட்டினாள்.

கதவைத்திறந்ததும் நாகம்மாவின் கோலம்! மனசுக்கு சங்கடத்தைக் கொடுத்தது.

"இது என்ன கோலம் உனக்கு வெட்க மில்லையா?"

"என்னட்ட என்ன இருக்கம்மா வெட்கத்திற்கும், துக்கத்திற்கும்?"

"முதலில அந்த ஓடையால உள்ளவா சாறி தாரேன் மாத்து மிச்சத்த பிறகு கதைப்போம்."

உள்ளே போனவள் வாயில்சாறி உடுத்தியதும் தன் சறத்த ஒரு பொலித்தின் பைக்குள் திணித்தபடி வெளிவந்து திரும்பவும் வாசல் முன்பாக இரு கைகளும் நெஞ்சை மறைக்க நின்றுகொண்டாள். "என்ன நாகம்மா உன்ர அரண்மனைப் பக்கம் சனத்தட சத்தம் கலாம் புலாம் என்று இருந்தது நேற்றிரவு முழுவதும்?" கேள்வியில் இரக்கம் மேலிட்டிருந்தன.

நெஞ்சிலிருந்த கைகள் இரண்டும் மேலெழுந்து ஓசை யெழுப்பச் சிரித்தபடி "அந்த முஸ்பாத்திய ஏன் கேக்கிறீங்கம்மா? வளமையான சேட்டைதான்."

"யாரோட நாகம்மா?"

"வேறுயாரோட? நம்மோடதான்"

"அடப் பாவமே அந்தப்படுபாவி யார் நாகம்மா?"

"வேறு யாருமில்ல, நம்மட சின்னக்கடைக்குள்ள வாழைப் பழம் விற்குற ஆறுமுகம் தான்."

"பார்த்தா நல்ல மனிசனாச்சே?"

"நல்ல மனிசன்தான் வசமா மாட்டிக்கிட்டார். ஆசாமி படம் முடிஞ்சு வந்த சனத்தட்ட குடு.. குடுவென்று குடுத்துக் கலைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிட்டாங்க." மேலும் குலுங்கிச் சிரித்தாள் அச்சிரிப்பில் பெரிய வேதனை வெந்துகொணடிருந்தது.

"நாகம்மா நீயேன் அங்கெல்லாம் கிடந்து அவலப்படுகிறாய்?"

சற்று நேர மௌனத்தின் பின்பு.. "என்ர வீட்டில வந்து இருக்கிறீயா?"

முழிக்கள் பிதுங்க "அம்மா.. தாயே உங்களுக்கேன் இந்தக் கடவுள் குணம்? நான் பைத்தியம் பைத்திய மாகவே இங்கின.. அங்கின கிடந்து செத்துப்போயிடுறேன் தாயே."

இதயத்தில் விழுந்த கீறலைக் காட்டிக்காமல் அந்தத் தாய் "அது சரி நாகம்மா உன்ர மிச்சக்கதையைச் சொல்ல இல்லையா?"

"என்னம்மா? எரியிற நெருப்பில எண்ணெய்யை ஊத்து றீங்களா?"

இடைமறித்தவள் "உன்ர துன்பத்திற்கு எண்ணெய் ஊற்ற வில்லை... நீ விரும்பினால் சொல்லு?"

நளினத்திலும் நசிந்த சோகச் சிரிப்போடு "உங்கட்டச் சொல்லாமல் வேறுயாரட்டயம்மா என்சோகச் சுமைய இறக்கப் போறேன?"

"பிறகென்ன, அந்த ஓடுகாலி பெரியாஸ்பத்திரியில் வேலைசெய்த நேர்ஸ அந்தத் தொறயோட தொடர்பு வைச்சிட்டான். என்ர வீட்டிலயே கூட்டிவந்து குடியும்–குடித்தனமும் நடத்தத் தொடங்கிட்டான். இந்த நேரம் முட்டிநின்ற கண்ணீர்க் குண்டுகள் அவள் நெஞ்சின்மேட்டில் விழுந்து அழுதன. மூக்கால வழிஞ்ச சளியை விரல்களைக் கூட்டி இழுத்தெறிந்துவிட்டுத் திரும்பவும் கதையைத் தொடர்ந்தாள். "அயலவரட்ட நாகம்மாவுக்கு புத்தி சுவாதீனம் என்று பெரும் பொய்யைப் போட்டு வைச்சான். அது என்ர வாழ்க்கையில் மெய்யாகவே போயிற்று. வீட்டில் இருக்க நரகத்தில் இருப்பதுபோல் இருந்தது. என்ர மனச்சாட்சியைக் கொன்ற பாவிய விட்டு வெளியவந்தேன். அன்று தொடங்கி வீதியே வீடாப்போச்சு."

இரங்கு தொனியில் "உன்ர ஊர் எங்க நாகம்மா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுழிபுரம் சுண்டல் மச்சான் என்றால் சின்னக் குழந்தைக்கும் தெரியும்."

"ஏன் இந்தப் பெயர் வந்தது?"

"என்ர அப்பன் வைச்சிருந்த தேத்தண்ணிக் கடையால வந்தது. அதில சுண்டல் விற்றாராம். அது நல்ல ருசியாம் என்று என்ர ஆச்சி சொல்லித்தான் எனக்கும் தெரியும்."

"நாகம்மா உனக்கு இதெல்லாம் ஞாபகமாக இருக்குத்தானே! ஏன் உன்ர ஊரோட போய்ச் சேர்ந்து வாழக்கூடாது?"

"அம்மா எனக்கு அந்த ஊரும் புடிக்கல. அந்தக் குடிகேடன் உசிரோடு இருக்கும்வரைக்கும் அங்கு போகவும் விருப்பமில்ல. பைத்தியமாகவே வெளிவந்த நான் பைத்தியமாகவே செத்துப் போயிடு றேன். கண்ட கண்ட நேரமெல்லாம் சாவைப்பற்றிய நினைப்புவரும். அதனை நினைச்சுச் சிரிப்பேன். என்னடா பைத்தியம் பகுத்தறிவோடு பக்குவமாகக் கதையளக்கிறாள் என்று யோசிக்கிறீர்களா?"

"இல்லை நாகம்மா உன்ர கதையைக் கேட்பது, உன்னப் பார்ப்பதும், உனக்கு உதவுவதும் இன்றோடு முடிஞ்சுது..."

"ஏனம்மா? நான் ஏதாவது தப்புப் பண்ணியிற்றேனா?"

"இல்லை நாகம்மா நேற்று வந்த தந்தி உனக்குத் தெரியும தானே? நாங்கள் எல்லாரும் லண்டனுக்குப் போறத்திற்காக நாளைக்கு கொழும்புக்குப் போறோம்." என்றவாறு விராந்தாவிலிருந்த கதிரை மேல் கிடந்த பையை எடுத்து நீட்டியபடி "இந்தா நாகம்மா இதில உடுப்புகளும் போர்வையும் வைச்சிருக்கிறேன்" என்றாள் அந்தத் தாய்.

தலைமேல் விழுந்த ஷெல் தாக்குதலால் வாய் திறக்க முடியவில்லை! வாழ்க்கையில் விழுந்த வேதனைத் திரையால் இடை வெளி நிரப்பப்பட்டுவிட்டது. துடித்துப்போய் நின்றவள் குழந்தை யாட்டம் "அப்போ நீங்க சீமைக்குப் போறீங்களா? இந்த வானத்தால பறக்குமே அந்த ஏரோப்பிளேனில் போறீங்களா?"

துக்கம் தாங்காமல் "ஆமாம்... அதில்தான். அதுசரி இனிச் சாப்பாட்டுக் என்ன செய்வாய்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கேள்வியில் மௌனமான அவளது குறுகிய கவலை மிகுந்த பார்வை அத்தாயின் மனசுக்கு என்னமோ போலயிருந்தது. கண்ணீர் விடவும் வெட்கமாகப்பட்டது. திரும்பிய அவளது கண்கள் அந்த ஆத்மாவின் பாவசங்கீர்தனத்தைக் கேட்டுக் கொண்டே நின்றது.

அவள் சிரித்தபடியே "அம்மா நீங்கள் இடைஞ்சல் இல்லாம போய்ச் சேருங்கோ. என்ர வாழ்க்கை இன்றோ நாளையோ தெரு வோடு போயிடும். நாலுபேர் தூக்கிச் செல்லவும் வழியற்று நாய் தின்னும் இப்பிணத்தைப் பற்றி ஏன் கவலைப்படுறீங்கள். அம்மா நீங்க போயிற்று வாங்க... நான் போறன்!"

வாசலோடு நின்ற தாயின் இரக்கத்தின் தார்ப்பரியம் மனசுக்குப் பாரமாக இருந்தது. விம்மியெழும் அழுகையையும் அடக்கிக கொண்டவள் "அடுத்த பிறப்பிலாவது இவள் அனைத்துச் செல்வங்க ளோடும் ஆனந்தமாக வாழட்டும்" என்று மனதார நினைத்துக் கொண்டாள்.

நாள் போகப் போக அவள் உடம்பு உருமாறிக் கொண்டு வந்தது. வீதியால் போற வாற மனிசரயெல்லாம் கூர்ந்து- கூர்ந்து வெறுப்பாகப் பார்த்தாள். அவள் கால்களும் புரையோடிப்போன புண்க ளின் வேதனையால் வலுவற்றுப் போனது. அடிவயிற்றிலிருந்து வாய்வரை தினம் தினம் ஏதோ ஒரு கனம் வந்து... வந்து அடைப்பதுபோல இருந்தது. பசியெடுக்கும் போதெல்லாம் எச்சிலைக் கூட்டி விழுங்கி விழுங்கி நாள்தப்பாது சாப்பாடு போட்டுவந்த அந்தப் புண்ணியவதி வாழ்ந்த வீட்டைத் தினம் தினம் வெறிச்சோடிய கண்களால் நோக்கியபடி நொந்துகொள்வாள். வாழ்க்கையில் அழுவ தற்காகவும், அலைவதற்காகவும் வாழ்ந்து வாடி வதங்கிய அவலமான ஆத்மா ஒடிஞ்சுபோய்த் தன்னுடைய அரசமரத்தடி அரன்மனைக்குள் ஒதுங்கிக் கொண்டாள்.

மஞ்சள் வெய்யில் நேரம் அவள் காதுகளை பயங்கர இடிமுழக்கங்கள்... இருப்புகொள்ள முடியாதவாறு அவலப்படுத்தின. இருப்புகொள்ள இயலாமல் எழுந்து துவண்ட கால்களுடன் அடி வயிற்றை இறுகப் பிடித்தவண்ணம் வீதிக்கு வந்தாள். வீட்டிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள்ளிருந்த சனமெல்லாம் வீதியில் விழுந்து விழுந்து தலைதெறிக்க ஓடிக்கொண்டிருந்தார்கள். சனத்தோடு சனமாக ஓடிக் கொண்டிருந்த பறங்கிமனிசி நாகம்மா மேல் இரக்கப் பட்டவளாய் "நாகம்மா நீயேன் இதில நிற்குறாய்?"

"அந்தக் கட்டையில வேகுற ஆமிக்காரன் ஷெல் அடிக்கிறான்! எங்காவது ஓடிப் பதுங்கடி."

அவள் சிரித்தாள்... "நான் ஏன் ஓடவேண்டும்? என்ன வாழ்வுக்காக ஓட வேண்டும்?"

இப்போது யார் பைத்தியம்? தைரியமாக வாழ்ந்த உங்களா லேயே ஓடிமறைஞ்சு வாழமுடியவில்லை: என்னால் முடியுமா? ஷெல் ஒவ்வொன்றும் விழ... விழ.. கொல்லென்று சிரித்தாள் சிரித்துக் கொண்டே நின்றாள்... அந்தச் சிரிப்பொலி அடங்கிவிட்டதா?

தினகரன்
01.11.1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர் போய்ச் சேர்ந்தவன்

ஊரில நான் இவனோடு ஒன்றாகக் கூடித்திரிஞ்சிருக்கிறேன். இன்று இவன்ர கோலத்தைப்பார்க்க என் கண்கள் என்ன பாவம் செய்தன?

சங்குமார்க் வெள்ளைச் சரம், அரைக்கை பொலிசர் சேட்டும், சிற்றிசன் வாச்சும், கழுத்தில் ஏழு எட்டுப்பவுன் தேறும் மல்லிகை மொட்டுச் செயின், மோதிர விரல்களில் டெக்கர் மோதிரம், சேட் பாக்கற்றுக் குள்ளிருந்து தெரியும் பத்து ரூபா நோட்டுக்கள், பிறிசல் சிகரட்டைப் பற்றிவிடும் புகைநடுவேயும் புன்னகை மாறாத புள்ளமுகம், சதைபிடிச்ச உருண்டதேகம், ஊரில இப்படிக்கண்ட உருவத்தை இப்ப இங்கு காண்பதென்ன கனவா?

கறுத்துப்போய், ஜீவகளையற்றுப் போயிருந்தான். ஊரில் சந்திகளில் நின்று வம்பளந்து வாய்விட்டுச் சிரிக்கும் சிரிப்பை இழந்திருந்தான். உடல் பலநாள் பட்டினிகிடந்த எதியோப்பியனைப் போல் ஒட்டிஒடுங்கிப் போய்க்கிடந்தது. முகம் சோபை இழந்து கண்கள் பளபளப்பின்றி குன்றியிருந்தன.

சொண்டில் வைத்து இழுத்துவிடும் சிகரட் சையில் மட்டும் மாறாது நின்றான் தாசன். தினப்பழக்கம் என்பதால் என்னமோ! என் கண்கள் கலங்கின.. நிலைகுத்த நின்ற பார்வையைத் திருப்ப முயன்றேன்.

பரந்தவெளி பனி மூட்டத்தால் போர்த்தப்பட்டிருந்தன பக்கம் பக்கமாக ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கப்பட்டிருந்த றெயின்களிலி ருந்து , ஓட்டுனர்கள் வேளைப்பளுக்களை முடித்த பெருமூச்சோடு திணறி ஓடுகின்றார்கள். நேரத்தோடு வீடு போய்ச்சேர வேண்டும். கழுவித் துடைக்கும் தொழிலாளிகள் வேதனையோடு முடிந்த வேளைக்களைப்பு மறைஞ்ச முகத்தில் புதிய புன்னகையோடும், கழுத்தில் போட்ட பைகளுமாக குலுங்கிக் குலுங்கி திணறி ஓடி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டாவலாங்களைக் கடந்து பாரிஸ் போகும் றெயின்களில் தாவுகின்றார்கள்.

தாசனும்—நேசனும் தங்களுக்குள் அறம்புறமான கதையின் கனதியில் தண்டாவாளங்களைக் குனிந்தும் பார்க்காது நம்ம ஊர் பக்கத்துவீட்டு வேலிச்சண்டைக் காரிகளைப்போல அபிநயங்களுடன் வீதியவந்தடைகின்றார் கள். வாகனங்களின் இரைச்சலை மிஞ்சிய இரைச்சல் தாசனின் இதயத்தை விசைப்படுத்திக் கொண்டிருந்தது.

தாசன் முகத்தை நிமிர்ந்து பார்க்க நேசனால் முடியா திருந்தது? தொங்கப்போட்ட தலையுடன் இறுமாப்போடு செருமி யபடியே கேட்டான். "இப்ப என்ன நடந்திட்டென்று இப்படி உம் என்று வாறாய்?"

தாசன் மௌனத்திலும் எரிச்சல் மேலிட நடந்தான்.

"இண்டைக்கு உன்ர வேலை சரியில்ல என்றுதானே பேசினான்?"

மிதிபட்ட பாம்பாட்டம் சீறினான் தாசன். "என்ன துணிவடா என்னப் பேச? அந்த நாத்தவாயன் அல்ஜீரி நாய்க்கு வேலைக்குச் சேர்ந்து ஐந்து ஆறுமதமும்மில்ல. அவன் பரதேசி பத்துறோனக் காக்கா பிடிச்சு சேப்பாகியிட்டான்.. நான் ஐந்து வருஷமா வேலை செய்யிறேன். என்ர வேலையில புழைபுடிக்க இவனுக்கென்ன தகுதியடா?" தாசனின் குரல் வீதியில் ஓடிய வாகனங்களின் இரைச்சலையும் மிஞ்சியது. கண்களின் மணிகள் கலங்கிக்கிடந்தன.

பிரான்ஸ் ரெயில்வே திணைக்களத்தில் நெத்துவாய் ஏஜென்சி மூலம் வேலைக்குச் சேர்ந்தான் தாசன். இவனோடு பல தமிழர்களும் அல்ஜீரியர்கள், ஆப்பிரிக்ககர்கள், என பலநாட்டவர்கள் வேலை செய்துவந்தார்கள். நேசன் மட்டும் அயல் கிராமத்தைச் சேர்ந்தவன். ஊரிலயிருந்து சிநேகிதமானதால் அவனை தன்னோடு தங்கடவீட்டுப் பக்கத்துவீட்டுக் குணமக்கா வட வீட்டில் ஒரு அறையில் தங்க வைச்சான். அங்கிருந்து வேலைக்குப் போய்வரவும் வசதியாக இருந்தது அவர்களுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாளாகத் தாசனுக்கு வீட்டுக்குக் கிட்ட உள்ள வீதியால போற வாற அல்ஜீரியரைக் காணும் போதெல்லாம் அவனது நெஞ்சில் பட்ட காயத்தின் வருத்தத்தில் முகத்தில் எள்ளு வெடிக்கும். அல்ஜீரிய சேப்பின் வரம்புமீறிய 'வசை' வதைப்படலமாய் அமைதியற்ற ஆத்திரத்தைக் கிண்டிக்கிளறிக் கொண்டி ருந்தன.

கடல் உறங்கினாலும் கண்ணுறங்காது உழைத்து வளர்த்த தந்தையும், பாசமிகு தாயும், நேசத்தின் பிடி தளராத அன்புள்ளங்களின் கள்ளமற்ற முகங்களும் அவன்முன் நின்று நிழலாடின.

கழுத்தில் தொங்கிய சாப்பாட்டுப் பையைத் தூக்கி எறிந்தான். ஆத்திரம் அடங்காது செற்றியில் விழுந்து முகம் புதைய சீறிவரும் சீற்றத்தைச் சீர்படுத்த முயற்சித்தான். தாசனின் செயல் குணமக்காவின் மனசைப் பாதித்தது. அவன்ர ஒருக்காலும் இல்லாத போக்கைக் கண்டு கீச்சிட்ட குரல் கர... கரத்துக்கொண்டது.

"தம்பி தாசன் என்னப்பா நடந்தது?"

"ஒன்றுமில்லையக்கா என்ன சும்மா படுக்க விடுங்கோ...!"

"கை கால் முகத்தைக் கழுவியிற்றுவந்து சாப்பிட்டு படேன்தம்பி?"

"நான் பிறகு சாப்பிடுறன் நீங்கபோய் படுங்கக்கா".

"தம்பி, முதல்ல எழும்பு பிறகு என்னன்று பார்ப்போம்."

தாயைப்போல் பரிவு காட்டும் அக்காவின் முகத்தைப் பார்க்க முடியாமல் தன்ர முகத்தைச் சரிச்சபடியே எட்டிநடந்து பாத்ரூமிற்குள் புகுந்து கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டான்.

நேசனை திரும்பிப் பார்த்தவள் என்னடா இவனும் வந்த நேரத்திலயிருந்து ஒன்றுமே பறயாமலிருக்கிறான்! போலியான பாசமிகுந்த கோபத்தோடு.

"என்னடா நீயும் ஒன்றும் பறயாமலிருக்கிறாய்?"

"ஒன்றும் நடக்கயில்லையக்கா"

"டேய் பொய்யவிட்டுட்டு ஆறுதலான வார்த்தையப் பேசுங் கடா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒன்றும் பெரிசா நடக்கயில்ல. வேலைதளத்தில் அவன் சேப் இவன்ர வேலை சரியில்ல என்று சின்னதாப் பேசிப்போட்டான். அந்தப் பிரச்சனைய பெரிசாத் தூக்கிபிடிச்சுக் கொண்டிருக் கிறானக்கா."

"என்னமோ, வேலையை விட்டுறாதீங்க. இங்கு வேலையில் லாட்டி வாழ ஏலாது. அதுதான் போகட்டும். ஒரு நாயும் நம்மல மதிக்காது. மேசையில சாப்பாடு வைச்சிருக்கிறேன். இரண்டு பேரும் பசியார சாப்பிட்டுட்டு நிம்மதியாகத் தூங்குங்கோடா."

ஊரில வாழ்ந்தபோது பெயர் சொல்ல வாழ்ந்த குடும்பம். தாசனின் தந்தையிடம் இரண்டு ஆழ்கடல் போட்டும் வலையும் பல தொழிலாளிகளைத் தொழிலுக்கும் வைத்திருந்தவர். எடுபிடி வேலைக்கென பக்கத்தூார் மனிதர்களைக் கொண்டு சிறப்போடு வாழ்ந்தவர்கள். பாழாப்போன சிறிலங்கா படையினரின் குண்டுவீச்சில் வெள்ளிடி விழுந்ததுபோல் கடலில் கிடந்த போட்டும் வலையும் அழிஞ்சுபோச்சு. அத்தோடு விட்டதாதுன்பம? வீட்டில் உள்ளவர்கள் மேல் விழுந்த ஷெல் தந்தையையும் இரண்டு ஆண் சகோதரர்களை யும் காவுகொண்டுபோச்சு. தப்பிய தாயும், தங்கையுடன் மண்ணும் மக்களும் பட்ட அவஸ்தைகளில் மாறாத மன வைராக்கியத்தை அவனால் நினைத்துப் பார்க்கமுடியவில்லை. கடல் வெளியெங்கும் நெஞ்சுநிமிர்ந்த அலைமாந்தரின் அம்பாவின் ஆவேசம் அவன் மனசை தட்டிச் சென்றது. தாயும் தங்கையும் கண்முன்னே தோன்றி மறைந்தார்கள்.

கஞ்சியக் கூழைக் குடிச்சேனும் கனப்பற்ற கவலையக் காட்டாத கள்ளமற்ற உள்ளங்கள் ஊரில் தான் இருக்கிறார்கள். அயலவருடன் அடிபிடி வேலிச்சண்டை என்று வந்தாலும், துன்பம் என்று வரும்போது துணைக்கரம் நீட்டும் உயர்கரங்கள், உயர் உள்ளங்கள் ஊரில்தான் உண்டு.

சற்று சூடான தண்ணீர் அவன் தேகத்தில் பட்டது. மனதில் பட்ட துன்பச் சூடு தணியவில்லை? ஊரில் கிணற்று நீரைத் தேடியது மனசு. வாளியில் அள்ளிக் குளிக்கும் குளிர்மைக்கு ஈடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே இருக்கப்போகுது? அந்தக் குளிப்பு முழுக்கில் ஏற்படுகின்ற அலாதியான மகிழ்ச்சிக்கு...

அம்மா பின்னால் நின்று முதுகு தேய்த்த படியே, "நன்றாக சூடுபறக்கத் தலையில அள்ளி ஊத்துமகனே உப்புத்தண்ணீர் பட்டஉடம்பு பொருக்கடித்திருக்கும். நல்ல தண்ணி பட்டால்தான் சுகமாக இருக்கும். கடலுக்குப் போட்ட உடுப்புகள் வக்குக்குள்ள போடு. நான் பிறகு தோச்சுப் போடுறேன்."

"அண்ணை இன்றைக்கு வெளியபோய் எனக்கு என்ன கொண்டுவருவாய்? நான் என்ன ருசியான, நீ ஆசைப்பட்ட சாமன் செய்து வைச்சிருக்கிறேன்! என்ன ஏதென்று தொரியாமல் முழிக்கிற போது அவள் அன்போடு நெருப்புவெக்கமிக்க இருந்து கிண்டிய அரிசிமா களியக் கொண்டுவந்து, "தேங்காய்த் தலைப்பாலில கிண்டினேன். இந்தா இதர வாழைப்பழமும் இருக்கு தின்னணண்ணை."

அதன் இனிப்பில் கண்ட சுவையைவிட அவள் அன்பில் கண்ட இனிப்பே தேனமுதானது. களைப்பிலும் கவலை மறக்கும் செழிப்பும் ஊரில இருந்தது: தட்டிச் சென்ற தாயின் தங்கையின் குரல்கள். அவனை உள்முச்சு மேல்முச்சு வாங்கவைத்தன. உணர்ச்சி நரம்புகள் உத்வேகத்தோடு அன்பைத்தேடின, ஊரில் தான் செய்த தொழில் யாருக்கும் தலை வணங்காக் கடல் மடியைத்தேடியது. இயந்திர மனிசனிடம் காணமுடியாத அன்பு, ஆறுதல், அமைதி, விரிபார்வையுடன் வீரியம்பேசி நின்றது. ஊர்போய்ச் சேரும் நினைப்பு மேலும் மேலும் அவன் உள்ளத்தைத் துழாவிக் கொண்டிருந்தன.

படுக்கையில் சாய்ந்தவன் விடிந்தால் வேலைக்குப் போகும் எண்ணம் எழுந்து தூக்கத்தைக் கொடுத்தது. அசதியுடன் நித்திரையாகிவிட்டான்.

காலைப்பனி மூசிப் பெய்துகொண்டிருந்தது. வீட்டு வாசலைவிட்டு வீதிக்கு வந்தார்கள் தாசனும் நேசனும். யக்கற் ஸ்ரீப்பை இழுத்துவிட்டதும், சயிற் பொக்கற்றுக்குள் இருகைகளும் நுழைத்தனர். பின் ஒருவர் முகத்தை ஒருவர் நிமிர்ந்து பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரமின்றி நாக்குத் தெறிக்க ஓட்டமும் நடையுமாக விரைந்து கொண்டிருந்தார்கள். வழமையான நேரத்திற்குப் பத்துநிமிடம் பிந்திவிட்டார்கள். இலேசான பயம் மனதைக் கவ்விக்கொள்ள குளிர்நடுக்கத்தோடு சேர்ந்து தாளம் போட்டன. நேற்று நடந்த சச்சரவுக்கு இன்றைக்கு வேலைக்குப் பிந்தியது அவன் சேப்பிற்குச் சார்பாகப் போச்சுது. தாசனின் மனம் படபடத்தது. பதட்டத்துடன் தனது நம்பர் லொக்கரைத் திறந்து வேலைக்குப் போடும் உடுப்பை மாற்றிக்கொண்டான். ஏளனச் சிரிப்போடு காவியேறிய பல்லைக் காட்டிக் கொண்டு வந்தவன் தாசனை ஏற இறங்கப்பார்த்துவிட்டுத் திரும்பி நேசனைப் பார்த்துச் சிரிச்சபடி "நீ வழமையான குறுப் போடு போய் வேலை செய்" என்றான். தாசனைத் திரும்பி முறைச்சுப் பார்த்தபடி "ஆறாம் நம்பர் றெயின் நிற்கிற இடத்திற்கு வா" என்றான். மௌனமாக மரண வேதனையோட அவன் பின் தொடர்ந்துச் சென்றான்.

அவனது அதிகாரத் தொனியில் விழுந்த அடியால் தாசனின் இதயம் ரேகைகளாகப் பிரிந்து இரத்தம் கசியத் தொடங்கியது. அல்ஜீரியனின் மரத்தசொண்டும், பிதுங்கிய முழிகளும், சரிஞ்சு நீண்ட மூக்கும், முகம்சிவப்பேற நிண்டவனின் நிழல் தணலாய்ச் சுட்டது.

திரும்பவும் தாசனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு அடைச்சக் குரலில் "அலோ! மிசு, நீ இண்டையிலிருந்து றெயின்களுக்குள ளுள்ள 'கக்கூசுகள' கழுவு" என்றான்.

"என்னடா! நான் செய்த வழமையான வேலையைவிட்டுட்டு இதையேன்ரா செய்யச் சொல்லுறாய்?"

"நான் உனக்குச் சேப்! நான்சொல்லுறதைத்தான் நீ செய்ய வேண்டும்?"

"என்ரா உனக்கு மலாத்தா?" *(வருத்தமா)*

ஆத்திரத்தோடு கைகள் இரண்டையும் தூக்கி ஆட்டிவிட்டு அவன் அந்த இடத்தைவிட்டுப் போனான். தாசனின் மனதில் முட்டி நின்ற ஆத்திர அவசரம் இறக்கை கட்டிப் பறந்து ஊர்சுற்றி வந்து நின்றது. மூசிய பனியும் நாசியால் பறந்த ஆவியும் அகோரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்தது. முட்டிவந்த மூர்க்கத்தனத்தால் அல்ஜீரியனின் முகம் உடைத்திடும் தோரணையில் எகிறி நின்றான்.

வாளிய எடுப்பதும் கையை நழுவவிடுவதும், திரும்பி அவன் வாறானா என்று பார்ப்பதும் கையில் வைச்சிருந்த தும்புத்தடியைத் தூக்கி எறிவதும், றெயின் வாசல் படியில் சாய்ந்து நிற்பதும்... மனசு தினுசு தினுசாக மாறி மாறியடித்தது. இப்படியே விட்டுட்டுப் போயிடுவோமா என்றுகூட நினைத்தான். பத்ரோனைப் போய்ப் பார்த்து கேட்டாலும் தனக்கு நியாயம்கிடைக்குமா?

தன்னைத்தானே கிரகித்துக் கொண்டவன் எரிபார்வையைத் தொலைத்துவிட்டு 'ஜவலை' வாளித் தண்ணீருக்குள் ஊற்றினான்! நுரை பொங்கியது. தரையில் நிற்க முடியாத கால்கள் றெயின் பொட்டிப்படிகள் மிதித்து உள்சென்றதும் சீற்றில் தொப்பென இருந்து கொண்டான். தாசனின் இதயநாடி பலமாக அடித்தது. இனிமேல் இந்த அல்ஜீரிய நாய் இருக்குமட்டு தான் இங்கு வேலை செய்வது இருதலைக்கொல்லி எறும்பு போலாகும்", என்று அடிக்கொரு தடவை தட்டிச் சொன்னது நெஞ்சு. "அற்பனுக்கு வந்த பவுசு ஆறாம் அறிவைத் தொலைத்து நிற்குது", யோசனை பலமாகியதால் வேலையும் ஓடவில்லை.

ஆறுபெட்டிகள் உள்ள இரண்டு றெயின்களைக் கழுவித் துடைத்து வந்த நேசன் குரூப்பினர் முன்றாவது றெயினையும் கழுவ ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். தாசன்மட்டும் காலையில் ஏறிய முதல் றெயின் பெட்டிக்குள்ளவே குந்திக்கொண்டிருந்தான்.

ரோசம் கெட்டு வேலை செய்து நாசம் கெட்டுப் போவதை விட ஊரோடு போய்ச்சேர்ந்து மடிவதேமேல். மண்வாசம்தேடி, மனித நேச உயிர்களை நினைத்து, சிறைபறவையாகத் தவித்தது, மணல் தரைகளை முத்தமிடும் அலைகளின் ஓசை அவன் காதுக்குள் ரீங்காரம் இட்டது. மணல் பரப்பெங்கும் நிமிர்ந்து நிற்கும் தென்னையும், பனையும் அவன் நெஞ்சை மேலும் நிமிர்ந்திடச் செய்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாசனின் பிடிவாதத்தை உணர்ந்த நேசன் மௌனமாக, பேச நாவெலாது ஓரக்கண்ணால் பார்த்து நின்றவன் இரக்கம் மேலிடக் கேட்டான்.

"ஏன்ராப்பா இப்படியெல்லாம் அடம்பிடிக்கிறாய்?" .

பல்லை நரும்பிக்கொண்டு திரும்பிப் பார்த்தான் தாசன்.

"இந்தவேலைய விட்டுட்டு வேற வேலை எங்க எடுக்கப போறாய்?"

"டேய் என்னால முடியாதா! போடா போ."

"இத்தனவருஷம் செய்து பழக்கப்பட்ட வேலைய விட்டுட்டு எங்கயேடா போவே?"

"உனக்கேன் அந்தக் கவலை?"

"தாசன் நான் சொல்லுறதக் கேள், நாளைக்கு வந்து அவன் சேப்பிட்ட மன்னிப்பு கேட்டுட்டு வேலையைப் பாரடா".

அவனைச் சுற்றி நின்றவர்களும் அதே தோரணை யில் ராகம் பாடினார்கள்.

தாசனுக்கு சினத்தின் சினப்பு உருவெடுத்தது. அவர்களுடைய ஆறுதல் வார்த்தைக்குப் பதில் சொல்லி வீன்பழி ஏற்காதவனாய் தன்னைத்தானே ஆசுவாசப் படுத்திக் கொண்டான். சுற்றி நின்றவா களை விலக்கிக் கொண்டு தன் லொக்கரை முட்டநடந்து நின்றான். லொக்கர் கதவைத் திறந்ததும் அதற்குள்ள இருந்த பொருட்களை அள்ளித் பைக்குள் திணித்தான். எல்லோரையும் சிவந்த கண்ணோடு பார்த்து ஏக்கம் மேலிட ஒரு கும்பிடு போட்டபடி சுன்டைக்கு முன்னம் வெளிய வந்தான்.

ஆலாய்ப் பறந்து வந்தான் நேசன். "டேய்! நில்லடா நில்லு, அவனோட கோவிச்சுக்கொண்டு என்ன ஏன்ரே வெறுத்து போறே?"

தவிப்பேறியவனாகத் திரும்பிப்பார்த்தான் தாசன்.

இருவருக்குமிடையில் இலங்கைப் பாராளுமன்ற விவாதம் றோட்டில நடந்துகொண்டிருந்தது.

இறுதியில் தாசன் சொன்னான். "இந்த நரகத்தில் கிடந்து மாரடிப்பதைவிட ஊரோடு போய்ச்சேர்ந்து பதுங்கு குழிக்குள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடந்தாவது சந்தோஷமாகச் சீவிச்சிடலாம்." சர்வாங்கம் அனைத்தும் நடுங்க உரை முடிந்தது.

"அதுசரி இப்ப வீட்டில குணமக்கா கேள்வி மேல கேள்வி கேட்டா என்ன பதில் சொல்வது?"

"நீ ஒன்றையும் அள்ளிவைக்காமல் இருந்தால் போதும்."

"சரி நடுறோட்டில மறிச்சுக்கேக்கிற நம்ம பொடியங்களுக்கு?"

"நான் இரண்டுமாசம் லீவில நிற்கிறேன் என்று சொல்லு." சொல்லிவிட்டு உதடுகள் துடிதுடிக்க விம்மலை அடக்கிச் சிரித்தான் தாசன். கோலிங் பெல் அடிக்கும் சத்தம் கேட்டதும் துடித்துப் பதைத்து எழுந்து கதவைத்திறந்தாள்.

"என்னப்பா, வேலைக்கு என்னமும் நடந்ததா?"

"அதொன்றுமில்லையக்கா."

"அப்பாடா இப்பதான் என்ர உசிரே வந்தது."

"அக்கா இன்டையில இருந்து எனக்கு வக்கன்ஸ் இரண்டுமாத லீவு தந்திருக்கிறாங்க."

"அப்படியா ரொம்பச் சந்தோஷமே. இந்தக் குளிருக்க மாரடிக்கிறதவிட திறங்கில்லா இருக்கலாம்."

நெஞ்சை அடைத்துக்கொண்டு பீறிட்டுவரும் அழுகையை அடக்கிக் கொண்டான் தாசன்.

அவனது கள்ளவரிகளைச் சுமந்த நேசன் நெஞ்சு கனத்தது. அவன் உள்ளத்தில் விம்மல் மேலிட்டது கண்கள் கலங்கின. சுவரில் முகத்தைப் புதைத்துத் தேம்பி அழுதான்.

குணமக்கா பேசினாள். "தம்பி தாசன் இரண்டுமாச லீவில் இங்க நின்று என்ன செய்யப்போறாய்? உனக்குத்தான் 'இமிக்கிரன்' விசா ஆச்சே: ஊருக்குப் போய் வயசான அம்மாவையும், வயசுக்கு வந்த தங்கைச்சியையும் பார்த்துவிட்டு வாயேன். கல்யாணம் காட்சி என்றாவது முடிவு செய்திருந்தாலும், அதையும் முடிச்சிட்டு வந்தா நல்லதுதானே." இருவருக்கும் காப்பி பரிமாறியபடி பாவொன்று பாடிமுடித்தாள். பின்னே சற்று தள்ளி வந்து செற்றி எதிராக்கிடந்த கதிரையில் பெருத்த குண்டியை பொத்தென்று வைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது நினைவும் நெஞ்சும் கனத்தது. பொழுது எப்போது விடியும்?

ஊர் போய்ச் சேர்வதற்கான ஏற்பாடுகள் துரிதகெதியில் நடந்து முடிந்தன. புறப்படும் நேரமும் வந்தது.

தன்னைத் தாய்போல் பராமரித்த குணமக்காவின் கரங்கள் இரண்டையும் பற்றிக்கொண்டான். "அக்கா நான் இங்கிருந்த காலத தில் எனக்குச் செய்த உதவிகளை, அறிவுரைகளை சாகும் வரையும் மறக்கமாட்டேனக்கா."

குணமக்காவின் கண்கள் மாரி மழையானது.

"நான் ஊர் போய்ச் சேர்ந்ததும், திரும்பி வருவேன் என்பது நிச்சயமில்லையக்கா."

அவள் பெருத்த நெஞ்சு வேகமாய் மேலெழுந்து தாழ்ந்தது.

எனது ஆசைகள், பாசம், பற்று, சொந்தம், பந்தம், நான் தினமும் நடந்து செல்லும் மணல் பரப்புகள், அலையின் ஓசைகள், தென்னை, பனை, பூவரசு மரநிழல்கள், எங்களது மேன்மையான தொழில்துறை, மொழி, இனம், கலை, பண்பாடு, இவையாவும் எங்கட ஊரில்தான் இருக்கின்றன.

அடே என்மகனே... என்று குளறி அழுதபடி தாசனைக் கட்டிப்பிடித்து சொக்கை என அவளையும் அறியாத பாசம் பீறிட நெற்றியில் மாறி மாறிக் கொஞ்சினாள். நிமிர்ந்தவள் அழுகையில் ஆனந்தம் மிதந்தது. ஊர்போயச் சேரும் தாசனின் முடிவை வரவேற்றாள். அவளது கணவன், பிள்ளைகள், நேசன் எல்லோர் கண்களிலும் கண்ணீர் பெருக்கெடுத்தோடியதால் தேறுதலடையாமல் விக்கி விக்கி நின்றனர். தாசனின் கண்ணிமை ஓரம் தரித்து நின்ற கண்ணீர்த் துளிகள் குணமக்காவின் கைமீது பட்டுத்தெறித்தன.

விடைபெற்றவன் எல்லோரையும் பார்த்துச் சிரிச்சபடியே எட்டி நடையோடு றெயில்வே ஸ்ரெசனில் வந்து நின்றான். தாசனை வழியனுப்பக் கூடவேசென்று கொண்டிருந்தான் நேசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழியனுப்பி வைத்தவள்

எங்கள் தேசத்தின் உச்ச சூரியன் உசிரவாங்கும் அகோரத்தில் ஆத்திரப்படாத காலைப் பொழுது, பொக்குவாய்க் கிழங்கள், நடுத்தர வயதினர் சிலரின் அழைப்போடு வீதியோரத்து அப்பக்கடையச் சுற்றி வட்டமேசை மாநாடு ஒன்று நடந்து கொண்டிருந்தது. மேடைப் பேச்சுகளும், கலந்துரையாடல்களும் கன கச்சிதம் எடுத்துக் களை கட்டத்தொடங்கியது.

அதன் தொணியில் பழமொழிகளும், புறஞ்சொற் களும் பல விதமான வண்ண ஜாலங்களுடன் பறந்து இருபதாம் நூற் றாண்டையும் கடந்து சென்று போய்க் கொண்டிருக்கிறோம்.

"அடியே!" பக்கத்தில இருந்தவளை சுரண்டி "திரும்படி இங்காலா".

"ஏன்ரி உன்ர பக்கத்து வீட்டுக்காரியட புருஷன் இன்னும் வாசல் வந்து ஏறயில்லையாமே?"

மற்றவள் "அப்படி என்னதான் நடந்திட்டு?"

"அதயேன் கேக்கிறீயள், அவள்ர புருஷன் மாதம் தப்பாது ஒருநாள் தன்ர வைப்பாட்டிக்கிட்ட போய் வருவான் இந்தத் தடவ மன்னாருக்குப் போனவன் திரும்பிவரயில்ல."

"அதனால்தான் இங்கால முகம் காட்டாமல் இருக்கிறாளா?"

"நீ சொல்லுறது சரிதான். அந்த வெள்ளிடிதான் போலக்கிடக்கு. அவள்ர தலைக்கறுப்பக்கூடக் காணக் கிடைக்கயில்ல."

"இதனால்தான் நம்மட மாநாட்டையும் பகிஸ்கரித்துக் கொண்டு உள்ள தொப்பென்று இருந்திட்டாள். இது உனக்கு இவ்வளவு நேரமும் தெரியாமலா போச்சு?"

கிலுகிலுப்போடு துடிச்சவள், "வெல்லனயில இந்தச் சமாச்சாரம் தெரியாமல் போச்சே!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரப்புறமாக இருந்த பொக்குவாய்க்கிழம், "அவள்ர குணம் தான் உங்களுக்குத் தெரியுமே."

"தெரிஞ்சு என்ன அவள்ர புத்தி எங்க போச்சு?"

"அவனப் போகவிடாமல் தடுக்கலாம்தானே?"

"வாழைப்பழம் தின்ன வருத்தமாயிருக்குமாடி?"

"அவள் தடுத்து அந்தக் குடிகாரன் கேக்கவா போறான்?"

"அப்படியென்னடி இத்தன புள்ளைகளைப் பெத்த பிறகும் அந்த அறுவானுக்கு இந்த மாதிரியான சின்னத்தனப் புத்தி?"

"கடவுளும் இவனப்போல உள்ள கசடுகளப் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறான்.

"ஓமன நம்ம ஊர்ப்பொம்புளகள் இந்தமாதிரியன ஆட்களுக்குக் கொடுத்துவாற மரியாதைதான். இல்லையன கேள்வி கேக்கத் துணி யாதது என்று சொல்லன".

சுற்றி இருந்தவர்களுடைய கதைகளைக் கேட்டுக் கொண்டு ஒரு கரண்டி மாவை இரும்புச்சட்டிக்குள் ஊற்றித் துழாவியபடியே "எடியே, போதுமடி உங்கட அலட்டல்கள்! அவள்ர நிலை உங்க ளுக்கு வரும்போதுதான் ஓடி முழிப்பீங்க ஆந்தை முழியாட்டம். ஓட்டுத்திண்ணை நித்திரைக்குக் கேடு. இதனால்தான் வெளிய படுத்த வன் உள்ளேபோய் படுத்திட்டான். பஞ்சில நெருப்புப் புடிச்சிட்டு. அவ னும் என்ன செய்வது? படுத்தவளையும் வைச்சுப் பாதுகாக்க வேணாமா? இதுகளயும் பார்த்துக்கொண்டு மேஞ்ச ஊரில உள்ள தையும் அவள்ர கவட்டையும் காண அங்கும் இங்குமாகத் திரியுறான். அவள்ர புருஷன்ர முடிவு என்னமோ ஏதோ! முடிவு தெரியும் முன்னமே நீங்க ஏனடி உங்கட மனசப்போட்டு உசுப்பிறீங்க?" அப்பக காரியின் நிஜம் சற்றுநேர மௌன ராகத்தை முணு முணுக்கவைத்தது.

"திடீரென நம்மோட எவ்வளவு முஸ்பாத்தியா வந்திருந்து கதைக்கிறவள். துடையிற் புண்ண நடையில் காட்டாமல் இருக கிறாள். அவள்ர வாயில ஏன்ரி மண்ணை அள்ளிக் கொட்டுறீங்க?"

"வாழ்வதும் கெடுவதும் வாயாலேதான். அக்கம் பக்கம் பார்த்துக் கதையுங்க."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொக்குவாய் ஒன்று "எடியே, நீ அப்பம் சுடுறீயோ இல்லையோ பழமொழிகள் பொலிவதில் மட்டும் படு சுட்டியடி."

நாட்டுத் தீர்மானத்தின் சிக்கலான வாதம், கதைச்சுப் புதைச்சு, சிதைச்சுக் கொண்டவள் சம்பந்தப்பட்டவள் பின்புறமாக நிமிர்ந்த நெஞ்சோடு சிங்கத்தின் சினம் சீறிக் குரைத்துக் கடித்துவிடும் கோபாவேசமாக நின்றாள்!

மாநாட்டுக் குழு கும்பத்தோடு திரும்பியது!

படரவிட்ட பார்வையின் பாவத்தின் வெட்கம் வெடிச்சு நாணி நின்றன!

குழுவினர் பார்வைகள் அவளையே மொய்த்துக் கொண்டிருந்தன.

அந்நேரம் அவள், "என்ன எல்லாற்ற வாயிலயும் வீணி ஒழுகுது? நான் என்ன உங்கள விழுங்கவந்த பூதமா?"

அப்பக்காரி அப்பத்த சட்டகப்பையால் கிளப்பியபடியே, "இதுகளுக்கெல்லாம் ஊர்வம்பளந்து பழக்கமாப்போச்சு. நீ இல்லாத நேரம்பார்த்து நம்ம அமிர்தலிங்கம் ஆலாள் பேசுறமாதிரி விளாசிப் போட்டாளுகள். இப்ப நீயே முன்னால வந்ததும் வாயடைச்சுப்போய் இருக்கிறாளுகள்." ஒரு அகப்ப மாவைக் கிள்ளி இரும்புச் சட்டிக்குள் ஊத்த அந்தச் சில்லிப்பின் சிலிர்ப்பு அவளுகள் உடம்புகளைப் புல்லரிக்க வைத்தது.

அவள் அத்தகைய மௌனத்திரையின் இடையிலும் தன் துன்பத்தையெல்லாம் வெளிக்காட்டாமல். "என்ன உங்கட தீர்மானம் நிறைவேறியிற்றா? தும்மலில் போனாலும் தூற்றலில் போகக்கூடாது என்பார்கள். உங்கட தூற்றல் முடிஞ்சிட்டா? இன்னும் மிச்சம்மீதி இருக்கா?"

கூட்டத்தில் இருந்த அனுபவசாலி பொக்குவாய் ஒன்று. "ஏன்ரி உன்ர புருஷன் வந்திட்டானா?"

அவள் தன்னைத்தானே கிரகித்தபடி "ஏன்னே இப்படிக் கேக்கிறாய்?" என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்தில இருந்தவளைச் சுட்டிக்காட்டி, "இப்பதான் இவள் சொன்னாள். உன்ர புருஷன ஆமிக்காரன் சுட்டுப்போட்டானாமே மன்னாரில. உண்மையாடி?"

கோபத்தின் கொந்தளிப்போடு, "இவளுக்கு யாராம் சொன்னது? ஆமிக்காரன் தந்தியா அடிச்சவன்? அல்லது இவளைக் கூப்பிட்டு படுக்கவைச்சு சொல்லி அனுப்பிவிட்டானா? என்னட்டச் சொல்லாம ஊரெல்லாம் தம்பட்டம் அடியென்று?"

அவளின் உணர்ச்சியான உறுமல் திரும்பவும் மாநாட்டுப் பிரதிநிதிகளை வாயடைக்க பண்ணியது,

அவள் சிரித்தாள். சின்ன இதயத்தில் சிதறிய சிந்தனை வேதனையால் மீண்டும் மீண்டும் சிரித்தாள். நெஞ்சக்களத்தில் நினைவுக்கல் பாரமாகயிருந்தும்கூட குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்.

உலகின் போக்குகள் மாறி நவயுகம் உருவெடுத்து ஓடிக் கொண்டிருக்கும். பெரும்நதிகளின் மத்தியிலே நம்ம ஊர்வீதிகளிலும், வாய்க்கால்களிலும் தேங்கிநின்று நாற்றமெடுக்கும் நீராக மானிடம் வாழ்வதை நினைத்துச் சிரித்தாள். சட்டியில் கிளப்பி எடுத்த அப்பத்தைச் சுளயில் வைத்துவிட்டு, ஒரு முறை அடுக்காக இருந்த அப்பங்களை மனப்பாடம் பண்ணிக்கொண்டு. "இந்தாடியம்மா இதில பத்து அப்பம் இருக்கு. இதக்கொண்டு போ. பத்தாட்டி உன்ர புள்ள களில் ஒன்ற அனுப்பிவிடு உடனே சுட்டுக் கொடுத்து விடுகிறேன்."

சுளக நீட்டினாள் அப்பக்காரி தன் இருகைகளையும் நீட்டி வாங்கியதும் நாரியில் சுளகின் குடப்பாகம் குத்திக்கொண்டது. வலக்கையில் வைத்திருந்த காசை நீட்டியபடி "இந்தான காசு"

அப்பக்காரி காச வாங்கிக் கொண்டதும். "உன்ர நல்ல மனசுக்குப் புதுமைமாதா புளவிடப் போறதில்ல: நீ சந்தோஷமாகப் போடி."

அவளும் சிரிச்சபடி சுற்றியிருந்தவர்களைப் பார்த்து நக்கல் சிரிப்பைத் தொலைத்துவிட்டு நகர்ந்தாள்.

பொறுமை இழந்த கிழவி ஒன்று, "அவள்ர சிலுப்பப்பாரு, சிலுப்ப. அவயட தார்ப்பரியத்திற்காக நாங்கள் கதைச்சா எங்களேயேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னமோ நினைச்சுட்டுப் போறாள். என்னடி நீங்களும் ஒன்றும் கதைக்காம குத்துக்கல்லாட்டம் இருக்கிறீங்க?"

"ஓமென நீ சும்மா இரன். என்ன நடக்குதென்றுதான் பார்ப்போம்."

எரிநெருப்பு அப்பக்காரி "என்னடி பெரிசா நடக்கப் போகுது? உங்கட நையாண்டிக்கும் ஒரு அளவே யில்லையா?"

துள்ளி ஓடும் மானாட்டம் பசியின் பதைப்போடு அவள்கிட்ட வந்துகொண்டிருந்தான் அவளது கடைசிக் குட்டி. "அம்மா... அம்மா நம்ம அப்பா வந்திட்டார்."

இன்னுமொரு புள்ள ஓடிவந்து. "வந்ததில இருந்தம்மா எங்கோட முகம் எடுத்தும் கதைக்கிறாரில்ல?"

பெரியவள் "நீ கெதியா வாம்மா."

"சரி சரி நீங்க முன்ன நடவுங்க" ஒரு எட்டி நடையோடு லேசாகத் திரும்பி அப்பக்கடையைப் பார்த்துவிட்டு, அவளுக்கே உரித்தான உலுப்பலோடு ஒரு சரிஞ்ச வெட்டோடு முகத்தைத் திருப்பி நிமிர்ந்து நடந்தாள். வீட்டு வளவுக்குள்ள வந்ததும் புள்ளகள் அப்பச்சுளக மொச்சுப்புடிச்சனர். சுளகிலிருந்த அடுக்கை ஆளுக் கொன்றாக எடுத்து அப்புறட்டடுத்திக் கொண்டனர். புள்ளகளின் பசியாறும் தாய்மையின் உணர்வில் இன்பம் காணும் உணர்வுக்கு இந்தவேளை இடமில்லை. தன் புருஷன்ர புன்னகைக்கு நேர்ந்த புதிருக்கு என்ன வெள்ளிடி விழுந்தது என்ற காரணத்தோடு புருஷன கிட்ட நெருங்கினாள். அவளையும் அவள் தோற்றத்தையும் தலை நிமிர்த்திப் பார்த்துவிட்டு திரும்பவும் முகத்தைத் தொங்கப் போட்டான்.

"என்னதான் உனக்குப் புடிச்சிட்டு?"

"புடிக்கவேணடியதுதான் புடிச்சிட்டு."

"அதுதான் என்னென்று கேக்கிறேன்?"

எச்சில விழுங்கிவிட்டு "என்னென்று சொல்லுவேன் மன் னாரில இருந்த அவளும் புள்ளயும்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுகளுக்கு இப்ப என்னவாம்?" கேள்வியின் வேகம் அவனுக்கு எரிச்சலைக் கிளப்பித் துருதுருவென துடிக்கச் செய்தது.

"எடியே, நீ அவங்களப்பற்றி அக்கறையோடு கேக்கிறீயா? இல்லாட்டி வேண்டா வெறுப்பாகக் கேக்கிறீயா?"

நான் மனச்சுத்தத்தோடு மனிசியா, நின்றுதான் கேக்கிறேன். உனக்குக் கரவு வச்சுக் கதைக்காட்டி பத்தியப்படாதே. நீ என்னவிட்டுட்டு அவளோடு படுக்கப் போறபோது கூட நான் உனக்கு ஏதாவது இடைஞ்சலா இருந்தேனா? புளைக்கப் போன இடத்தில் கனப் பொழுது பலவீனமான உணர்ச்சிக்கு அடிமையாகியிற்றா. அவளும் என்ன செய்வது வேறு கல்யாணம் பண்ணாமல் உன்ர காசையும் வரவையும் பார்த்துப் பார்த்து அந்தக் குழந்தையையும் வளர்த்து வருகிறாள். இப்ப என்னதான் வந்துட்டு அதுகளுக்கு?"

அவளுடைய ஒவ்வொரு சொல்லிலும் அவனது இதயத்து உணர்வுகள் உருவமற்று சிதைந்து கொண்டிருந்தது. அவளின் தவிப்பிற்காக அவன் அனுதாபப்படவில்லை என்ற சூனியம் யாருக்குத் தெரியப்போகுது? முறைப்படி சுற்றம் சூழ நடந்த திருமணப் பந்தம் பாதக சாதகத்தைச் சரிப்படுத்தி நியாயப் படுத்துவதாகவும் தோன்றவில்லை! அறுபது நாள் ஆசையோடு ஆறு குழந்தைகளுக்குத் தந்தையான தார்மீக தர்மமும் அவன் மனதில் முளைவிட்டதா என்பதும் கேள்வியின் கணையாகத்தான் நின்று தத்தளித்தது. அவன் பேசத் தொடங்கினான்.

"மன்னாரில் தாயும்–புள்ளயும் இருந்த வீட்டை விட்டுப்போய் கனநாட்களாச்சாம். அந்த இடியோடு இன்னும் கொஞ்சம் தள்ளிப்போய் விசாரித்தால். பொடியங்களுக்கும் ஆமிக்கும் நடந்த சண்டையின்போது தல்லாடி முகாமிலிருந்து அடிச்ச ஷெல் விழுந்து செத்திட்டாளாம்..! புள்ளய யாரோ மாமன்காரன் வைச்சு வளக்கிறாராம். அவனுடைய எழும்பின சொண்டு மூடும்முன்னம். பாவிமனுசா உன்ர இதயத்தில் இரக்க மில்லையா? அந்தக் குழந்தையையாவது தேடிக் கண்டுபிடிச்சுக் கூட்டிவராமல் வெறுங்கைய ஆட்டிக் கொண்டு முகத்தத் தொங்கப்போட்டுக் கொண்டு திரும்பிற்றாயா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுபுள்ளகளையும் அடுக்கடுக்காகப் பெத்துத் தூய்மையின் பூரணத்துவத்தைச் சுமந்தவயிறு 'சுள்' என்று சுண்டியது. வல்லென்று வெடிச்சு விழுந்தாள். நிற்காதே நாளைக்குப் புறப்பட்டுப் போய் அந்தப் புள்ளயத் தேடிக்கண்டு புடிச்சுக்கொண்டு வா. இந்த ஆறோட ஏழாச்சு. நம்ம புள்ளபோல வளர்ப்போம்."

குறுநகை அரும்பி அவள்முகம் முழுநிலவாய் நீந்தியது. அவள் வாயில் வந்ததல்ல இந்த வார்த்தை? மனதின் ஆழத்தில் புதைந்து புகைஞ்சு எழுந்த பச்சாத்தாபத்தின் தார்ப்பரியத்தில் எழுந்தது. அந்தப் புள்ளயும் வளர்த்திட வேணும் என்ற கடமையுணர்வோடு எகிறி நின்றாள்.

இவள் பாக்கியத்தை மனைவியாக அடைய நான் பாக்கியம் செய்தேன். அவன் நினைத்தானோ? பொம்மையாட்டம் தலைய மெல்ல மெல்ல ஆட்டியபடி தலை கவிழ்ந்துகொண்டு நின்றான்.

"சரி பாக்கியம், உன்ர இஸ்டப்படி நாளைக்கு காலம்புற முதல் பஸ்சுக்குப் போயிடுறேன்." அவள் சற்று மௌனமாகத் தலையாட்டிச் சிரிச்சாள்.

இப்ப எங்க பஸ்களும் சரியான ரைமுக்கு ஓடுது! வெள்ளன யில போனால்தான் சீற்றிப்பி பஸ்ஸத் தவறவிட்டாலும் மினி பஸ்சிலாவது நேரத்தோட போச்சேர்ந்திடலாம்.

எப்பொழுது இப்பொழுது போய் புதிய விடியல் புலரும்? புறப்படக் காத்திருந்தவன் கண்தூங்கவில்லை? கல் மனசில் கண்ட கண்ட எண்ணங்கள் எல்லாம் உருண்டுகொண்டிருந்தன. நிமிடத்திற்கு ஒருதரம் எழும்பி எழும்பி தலைமாட்டிற்குப் பின்னால் மேசை மேலிருந்து எலாம் மணிக்கூட்டை நெருப்புக் குச்சின் மெல்லிய ஒளியில் பார்த்துப் பார்த்துச் சினந்துகொண்டான்.

சீ.. இந்த வேகத்தில் மணியும் ஓடுதில்ல! சாமமென்று பாராமல் ஓடிவிடலாம்போல துாண்டித் துள்ளிக்கொண்டு ஓலமிட்டது மனசும்.

பக்கத்தில் படுத்திருந்த பாக்கியம் சட்டென்று முழிச்சுக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன இன்னும் நித்திரையாப்போகயில்லையா? மனசப்போட்டு அலட்டிக்காம படு. நான் சரியான ரைமுக்கு உன்ன எழுப்பி விடுறேன்." புலம்பியபடி மல்லாக்காச் சாய்ந்தாள்.

பாதிக்கண்ண மூடியவன் சற்றுநேரத்தில அயர்ந்து போயிட்டான்.

எலாம் மணிக்கூடு தன் கடமையை நிறைவு செய்தது, இருவரும் சேர்ந்தே எழும்பினார்கள். அவன் தன்ர ஆயத்தங்களைச் செய்துகொண்டான்.

அவளும் தன்னுடைய வழமையான கடமைகளை முடித்தாள்.

தேத்தண்ணி வைத்துக் கொடுத்துவிட்டு அலமாரியத் திறந்து அடுக்குப் பெட்டியில இருந்த காசில பாதிய அவன் கையில் திணிச்சாள்.

அவன் உயிர் ஒருதரம் கசிஞ்சது.

"நல்லபடியாகப் போயிற்று புள்ளையோட திரும்பி வா". வாய் நிறைஞ்ச புன்னகையோடு வழியனுப்பி வைத்தாள்.

போனவன் போன நாட்களை எண்ணத் தொடங்கினாள் பாக்கியம். நகர்ந்து சென்ற நாட்கள் வாரங்களாகி மாதங்களையும் கடந்து சென்றன. ஆறு புள்ளகளையும் அடிக்கடி பார்த்து பார்த்து வெந்து நொந்தாள்.

புள்ளகளை வளக்கவேண்டிய கட்டாயக் கடமை உணர்ந்து வெதும்பினாள். வாய்விட்டுச் சொல்லமுடியாத வேதனையைச் சுமந்து நின்றாள்.

அப்பக்கடையிலிருந்து ஒரு பொக்குவாய்க் கிழவி ஓடி வருவதை வளவுக்குள் நின்ற பாக்கியம் கண்டு "என்ன இந்த மனிசி இந்த நடுக்கத்தோடு ஆடிவருகுது?"

"எடியே பாக்கியம் உன்ர புருஷன் மன்னாரில அந்த வைப் பாட்டியோடு குடும்பமாக இருக்கிறானாமடி. என்ர பேரன் மன்னாரில இருந்து இண்டைக்கு, இப்பத்தான் வந்து சொன்னானடி."

அவள் பேயறைஞ்சுபோய் நின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையராய்ப் பிறந்திட நல்ல மாதவம் செய்திடல் வேண்டும். மன்னவரை வழியனுப்பி வைப்பதில் வாழ்க்கை வாழவேண்டும். பழைய நினைவுகள் புதிய மலர்களாக அவள் மீது தூவப்படுகின்றது. பெண்மையின் இலக்கண வரம்பு நெஞ்சக்களத்தில் தணல் மூண்ட சுடர் பரப்புகின்றது. மலருக்கு மலர் தாவும் பண்பற்ற பைத்தியக காரர்கள் கிளிபோல் மனைவியிருக்க குரங்கைப் போன்ற ஒருத்தியைத் தாவும் பலவீனமானவர்கள் தானே.

ஆறு புள்ளைகளையும் அணைத்துக் கொண்டவள் கண்ணீரைத் துடைத்தபடி நின்ற புள்ளைகளின் புன்னகைக்காக வாழ்வதே வாழ்க்கை இந்தப் பூமியில் இது சபதமில்லை – சாதனை அதுவே அவளது குறியானது.

பாரிஸ் ஈழநாடு
25.12.1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பம்

கோடைக்காலம் என்பதால் அதிகாலை நேரக் குளிரும் உடம்புக்குக் கத கதப்பாக இருந்தன. ஐந்து மணிக்குப் பிறகும் இழுத்துப் போர்த்துக் கொண்டு கிடக்கிற சோம்பேறித் தனத்தை விட்டுப் பல மாதங்களாகிவிட்டன. நேரத்தோடு எழும்பும்போது நித்திரைத் தூக்கத்தின் பிடிதளராத, கடு கடுப்பிருக்கத்தான் செயயும். இனி என்ன செய்வது? ஊரைவிட்டு வெளிநாடென்று வந்திட்டோம் உழைக்க வேண்டும். உழைக்க வேண்டுமானால் வேலை ஒன்று தேடி எடுக்க வேணும் என்று அலைஞ்சு பட்ட பாடுகள்... "கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகள் என்று பொய் சொல்ல மாட்டேன்..."

இன்று வழமைபோல் படிகள் இறங்கும்போது "நல்லூர் கந்தா... கல்லுடைக்கின்ற வேலையாவது கிடைச்சிட வழிசெய்யப் பனே!" என்று வேண்டிக் கொண்டேன்.

வீதியிரங்கி பாதாள ரயிலேறி. பாரிஸ் நகரத்து நடு மையமான திறந்த பெரும் தெருக்களில் நடந்தேன். அழகில் கதிகலங்கும் காட்சிகள். தென்படும் இடமெல்லாம் உடல் சிலிர்க்கும் சிங்காரக் கோலங்கள். உலக அதிசய ஈவ்ல் கோபுரம் (Tour Effel) தெரிந்தாலும் பதினான்குக்கு மேற்பட்ட வீதிகள் பிரியும் சந்திகளின் நடுவே காட்சியளிக்கும் 'போர் நினைவுச் சின்னம் (Arc de Triomphe)' பிரமிக்கும் அதிசயமான வளைவு தெரிந்தாலும், என்னுள் நான் கண்ட அதிசயம்! ஆதவன் வரவைப்போன்று பிரெஞ்சு மக்கள ஆடைகளைக் குறைத்து அவர்களது அழகு மேனிகள் பளபளக்க நடந்தும், துள்ளியும் திரியும் மகிழ்ச்சியின் சுழர்ச்சியும் அழகின் அதிசயம்தான். பெரும் வீதியின் ஓரமாய் நடந்த நான், ஒதுக்காயிருந்த சிறு வீதி ஒன்றின் வளைவுகாளால் கால்போன திக்கில் வேகமாக நடக்க ஆரம்பித்தேன். வீதிகளில் விரைந்து இரைந்து செல்லும் வாகனங் களின் இரைச்சல் என் காதுகளைக் காயப்படுத்தி நிதானப்படுந்து வதாகவும் இல்லை. படை நடை என்று சொல்லுவார்கள். கணக்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைகளோடு எடுத்து வைத்த அடிகளால் காலடி நோவும், சப்பாத்து வெட்டும், உசிரை வாங்கிக் கொண்டன. பேய்த்தனமான சிந்தனைகள் நரம்புகளை முறுக்கேற்றின. வாழ்க்கைப் பிடிப்பற்று போராடி நின்றன. அனுபவத்தை முன்னாடி சிந்தித்து பின்னாடி சீர்தூக்கிப் பார்த்து வாழும் வழிமுறையை வலுவாகச் சிந்திக்கத் தெரியாதவனாகவல்லவோ நான் போய்க் கொண்டிருந்தேன்.

நடையைச் சற்றுத் தளர்த்தி நின்று, திரும்பத் திரும்பி நாற்புறமும் பார்த்தேன். பரந்தவெளிகொண்ட வீதிகள். சிறந்த இடம். கட்டிடங்களின் வனப்பும் பிரமிக்க வைத்தன. ஓ... ஓ... நான் நிற்கும் இடம் பிரெஞ்சுப் புரட்சிக்கு அடிகோலிய பதினாறாவது லூயி மன்னனை சிறைச்சேதம் செய்த இடம். 'கொங்கோட்' (Place de la Concorde) தலைநகரின் 'சிரசு' சற்றுத் தள்ளிப் பேனால் பாராளுமன்றம் பெரும் வளைவைச் சுற்றினால் வெளிநாட்டு வங்கிகள். தூதர்களின் அலுவலகம்... ஆவேசம் கொண்ட அதிர்ச்சியோடு கண்வெறித்து நோக்கத் திரும்பினேன். உரிமையாக முதுகைத் தட்டியவன், ஊரில் திரிந்த நண்பன்தான் என்பதறிந்து சற்று மௌனத்துடன், இளநகை வீசினேன். பின் கைக் கட்டோடு அவனது கேள்விகளுக்கு விடையளித்தேன். கொஞ்சநேர அளவலாவளில் என் நிலமையறிந்து உதவிடும் நண்பன் அவனில்லை என்பதையும் உய்த்தறிந்து கொண்டேன். அவன் விடைபெற்று வேறுவழியே போகிறான். நான் திரும்பவும் விரக்தி முட்டி... திறந்த பெருவெளி வீதியின் குறுக்கே நடக்கின்றேன். வாகனங்கள் என்னைக் கண்டு பெலத்து கத்தின. மனிதர்கள் "மடப்பயல் மகனே" என்று பரிகசித்தனர். மண்டை சுகமில்லாதவன், இசகுப் பிசகாக என்னவும் நடந்திடப் போகுது என்று தூற்றினர். கடவுள் இருக்கிறானோ - இல்லையோ... என் தாய், தந்தை, உயிருக்குயிரான தங்கை இருக்கின்றனர். இந்நேரம் 'புனிதா'வின நினைப்பு... இரண்டு ஆண்டுகள் கழிந்துவிட்டன. எத்தனைபேர் இங்கு எனக்கு ஆறுதல் கூறுகின்றார்கள. ஆனால் அவற்றில் ஒன்றுகூட என் நினைப்பில் கல்வெட்டாகப் பதியவில்லை. எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் என். தங்கையின் சிரிப்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு, தேவை, எந்நேரத்திலும் உடல்சோர்வு பாராது உதவிய சேவை. தூக்கத்தில் சோம்பேறித்தனமாகக் கட்டிலில் பிரண்டுப் பிரண்டு கிடக்கும்போது விலாவில் செல்லமாக ஒரு குத்துவிட்டு எழுப்பித்தரும் கோப்பியின் சுவையும், அறிவுறுத்தலும்… "இப்படியே சோம்பேறித்தனம் பிடிச்சுதென்றால் போற நாட்டிலும் இந்த நோய் தொற்றி உன் வாழ்க்கையைக் கெடுத்திட போகுதண்ணை" என்று கெஞ்சிவிட்டு, அன்பு அதட்டலோடு "கெதியா எழும்படா" என்பாள். அந்த நிகழ்வு பதிந்த இன்பகரமான நினைவு நின்றாட, பெரியதோர் பூங்காவிற்குள் புகுந்தேன். 'கொங்கோட் பூங்கா' ரோஸ் பூக்கள் புடைசூழ, நடுவே கிடந்த வாங்கில் குந்தி இருந்தேன். தலைய மெல்ல ஆட்டி ஆட்டம் கண்ட வாழ்க்கையின் வெறுப்புண் வேதனை தாங்க முடியாது. விம்மியெழும் நெஞ்சின் ஸ்தம்பிதமற்ற போக்கால் முட்டி வந்த கண்ணீரோடு குழறிக் குழறி அழ வெட்கமுற்று, அனுங்கி அனுங்கி அழுதேன். என்னைக் கன வேகமாகக் காடு சேரக் கொண்டு போவது போல் துடி துடிப்பு ஆட்கொண்டது. ஊரிலிருந்து விமானம் ஏறும்போது இருந்த உற்சாகம், பிரான்ஸ் வந்ததும், செயின் நதிபோல் உருக்கொண்டு, பின் நம்ம ஊர் வாய்க்கால் தண்ணீர்போல் தேங்கி விட்டன. எத்தனை தொல்லைகள், என்னை நிம்மதியிழக்கச் செய்கின்றது! ஒழுங்கான விசா கிடைக்காத கவலை, 'அகதி அந்தஸ்து கார்டு (Carte Réfugie)' கிடைக்காத கவலை. தாய், தந்தை, தங்கை பற்றிய கவலை. ஊர்க் கவலை. இங்கு சாப்பாடு நானாவித செலவுகள் பற்றிய கவலை. இப்படிப்பல வர விலக்கணமாகத் தொடர்கின்றது. முக்கியமாக வேலை… கொடுப்பணவற்றவனாக என் வாழ்க்கைப் பயணம் பயமாகவே இருந்தது. 'கடவுளை நான் நம்பவில்லை! என் தாய், தந்தை ஏழை எளியோருக்கு, கோயில் குளங்களுக்கு செய்த உதவியப் பயனின் பலனை இங்கு நான் பெற்றிடுவதின் மூலம்! வாழ்ந்து வாழும் நிம்மதியைத் தேடுகிறேன்'.

என் மூளை கலங்கிப் போயிருந்தது. அழுத கண்ணீரால் கண்கள் சிவந்து முகம் வீங்கி காட்சியளித்தது. இருண்டு கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது. 'மருண்டுவிடும் நம்ம ஊர் ஒளியிழந்த பூமியா இது?'. பகலைவிட இரவு பகலானது. இனி! என்ன செய்யப் பேகிறேன்? ருசி அறியும் நாக்குக்கூட எச்சிலற்று வறண்டு போயிருந்தது. பசியறியும் வயிறும் ஒட்டிக் கட்டியற்றுக் கிடந்தது. எப்படியாவது இருப்பிடம் போயாக வேண்டும்! வாங்கை விட்டெழுந்தேன். திரும்பவும் நிழலாடினர் அம்மா, அப்பா, தங்கச்சி, அயலவர்கள் எல்லோரும். 'படும் அவலமும், அழுகையும், சுமை சுமந்த வாழ்க்கையும்... வெகு நேரமிருந்த பூங்காவை விட்டு வெளியே வரும்போது தயக்கமாக இருந்தது. தயக்கத்தைத் தக்க வைக்க முடியாத பசி மயக்கம். இயக்கம் கொள்ள முடியவில்லை.

முன்னாடி மூன்று போலிஸ்காரர்கள்! விறைத்தாடியது நாடி. பார்வையின் தடுமாற்றத்தால் பின்னிப் பின்னிக் கொன்னதட்டி விழுந்தாடியது வார்த்தைகள். விசாவை எடுத்துக் கொடுத்தேன். வாங்கிவிட்டுத் தங்களோடு கூட்டிப் போனார்கள். வானம் பொளிந்தது. என் கண்கள் நிறுத்திய மழையை, அடிவயிற்றின் எரிமலைக் குமுறலை மழையால் தனிக்க முடியவில்லை.

நடந்து கொண்டிருந்தேன். நேரம் இரவு ஒன்பதாகிவிட்டது. இன்னும் கொஞ்சம் அழுதேன். பின் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நடந்தேன். போலிஸ்காரன் பின்னோக்கி என்னை முட்ட வந்தான்...! கிட்ட வந்தவன் என்ர விசாவைத் தந்துவிட்டு போகும்படி சொன்னான். என்னைப் பெத்தவர்கள் கொடுத்ததற்குக் குறையில்லை என்றமைதிக் கொண்டேன்.

ஐந்து மாடிப்படிகள் ஏறி அறைக்கதவைத் திறந்து உள்ளே போனேன். எங்கும் அமைதி. வழக்கமான சினிமாப் படத்தை ரிவியில் காணவில்லை. ரெப்ரெக்கொட் பெலத்துக் கத்தும் 'சென்னைத் தமிழ் புதுப்பாடல்'களின் சத்தம் கேட்கவில்லை. ஒருவித கும்மிருட்டின் அமைதி. எல்லோரும் சொல்வதுபோல் மயான அமைதி. கண்கள் துலாவித் துலாவி நோக்கின.

"என்ன ஆக்கினய்யா... இருக்கிற மூன்றுபேற்ற வாயும் திறக்கினமில்லை. நாறின மீனாய் நசிஞ்சி இருக்கிறாங்கள்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதயன் வாய் சும்மா இருக்காதே! அவனொரு இசைஞன். தினமும் பாடிக்கொண்டே இருப்பான். இண்டைக்கேன் உம்மென்று இடிஞ்சு போயிருக்கிறான்? மேலும் பலர், வந்து வந்து மௌனமாக அமர்ந்து கொள்கின்றனர். செய்தியறியாது, செய்வதறியாது நிற்கும் எந்நிலையைப் புரிந்தவன் ஒருத்தன்கூட வாய்த் திறக்கறானில்லை. கொதிப்பேறிப் போயிருந்தேன். இனி சற்று நேரமும் பொறுப்பதிற் கில்லை. நறுக்காக இரண்டு வார்த்தைகள் சொன்னால்தான், ரோச முள்ளவன் சுறுக்கா முகத்திலடிப்பான். கணநேரம் மௌனம் நிலவி யது. தேகத்தை உலுப்பி வாயை திறக்கும் முன்னம், தொலைபேசி மணிச்சத்தம் காதை கடிச்சது. இடிஞ்சு போயிருந்த இதயன் உசும்பினான். ரிசிவரை எடுத்துக் கன்னத்தில் ஒத்தினான். பசிக் களைப்பு தலையைச் சுற்றிச் சுழட்டியது. கிண்ணத்திலிருந்த கறி – சோற்றை எட்டி நடையோடு திறந்து. திறந்து பார்த்தேன்! அவற்றின் வெறுமை தலையை உடைத்துவிடும் போலிருந்தன. எங்குபோய் உட்கார்ந்திருப்பது என்ற பிரச்னையாகவும் கிடந்தது. தொலைபெசிச் சத்தம், மேலும் என் நெஞ்சில் இடியோடு தாளம் போட்டது.

"ஹலோ... ஹலோ..."

"............"

"நான்தான் – இதயன் கதைக்கிறன்."

"............"

"ஓமண்ணை நிக்கிறான்!"

"............"

"அவனுக்கு இன்னமும் விஷயத்தைச் சொல்லவில்லை! இப்பவே வெறி புடிச்சவன் போல நிக்கிறான். நாங்கள் என்ன பக்குவத்தோடு சொன்னாலும், அவன்ர குணம் உங்களுக்கும் தெரியும்தானே? முன்பின் யோசனையில்லாத மோட்டுத்தனமான முடிவுக்குப் போயிடுவான் என்ற பயத்தில்தான் எல்லோரும் குந்தியிருக்கிறோம். நீங்க கெதியா வந்தீங்கன்றா நல்லமண்ணை..."

கதவு தட்டும் சத்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிப்போய் நான்தான் கதவைத் திறந்துவிட்டேன். இன்னும் இருவர் உள்ளிட்டதும், என்னை முழிச்சிப் பார்த்துவிட்டு ஒதுங்கிக் கைக்கட்டோடு சுவரோடு சாய்ந்து நின்றனர்.

என்னடா! இண்டைக்கென்று நல்லூரான் எல்லாரும் ரூமுக்கு வந்து குவியிறாங்க. என்ன நடக்கப் போகுது? என்ற பெலமான யோசனை எனக்கு. என்ன இவங்க? என்று ஒரு தரத்துக்குப் பத்துத்தடவை சுற்றிச் சுற்றிப் பார்த்தேன். பின்பு எனக் குள்ளாகச் சிரிச்சேன்.

"இங்கின சுத்துமாத்துக்கென்று வெளிக்கிட்ட பழைய மாணவர் சங்கம் ஏதும் தொடங்கக் கிடங்கப் போறாங்களா?" பொறுமையிழந்த நான் சீறிப் பாய்ந்தேன்.

இதற்குள் எங்களுக்குப் பெரியவரான காசியண்ணர் ஆலாப் பறந்து வந்தவராய், அதேவேளை ஆவேசத்துடன் அந்தரப்படாதவராய் நிதானமாக என்னைப் பார்த்து நின்றார்.

காசியண்ணன் கொஞ்சம் படிச்சவர். அதேவேளை நல்லது கெட்டது புரிந்து அதற்கேற்ற ஒழுங்குகளை, ஓரவஞ்சனையற்று குஷாலான நேரத்திலும், கவலைகளால் தடுமாறும் நேரத்திலும் எப்படி பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதில் ஒருவிதமான சாமர்த்தியசாலிதான். ஆனால்...

இனி இவர் கையாளப்போவது என்ன?

ஆனந்தனுக்காக ஒரு பெருமூச்சை ஊதினார். காசி யண்ணையின் விழிகளை வாங்கிய நான் வழியறியாதவனாக இமைகள் எழுப்பி முழிச்சேன். திடீரென பதட்டப்பட்டவர்களாக இதயனும், சுந்தரனும் கதிரையை விட்டெழும்பி நின்றனர்.

திறந்திருந்த ஜன்னல் வழியாக இரவு நேரக் குளிர்காற்று வந்து கொண்டிருந்தன. சின்ன அறைக்குள் அடைபட்டிருக்கும் பத்துப் பேரின் மூச்சின் வெட்கையைத் தனித்தன. பல சோடிக் கண்கள் காசியண்ணனையும், என்னையும மாறி மாறிப் பார்த்து பனிந்துக் கொண்டன. என்னுடைய கண்கள் சிவந்து முகமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோர்ந்து சூம்பின கத்தரிக்காய்போல் இருந்தது. இந்நேரம் காசி யண்ணன் வாய்த் திறந்தார்.

"தம்பி ஆனந்தன் இப்படி இந்தக் கதிரையில் இரு தம்பி"

"உம்... உம்... சீ... சீ... நான் மாட்டேன். நீங்க... அவங்களெல்லாம் நிக்கிறீங்க."

"அது பரவாயில்லை. நான் இதில இருக்கிறேன். நீயும் அதில இரு தம்பி."

தலையை மெல்ல ஆட்டியபடி உட்கார்ந்தேன்.

"ஆனந்தன், ஊரில உங்கட அம்மா அப்பாவும், இந்த பிரான்ஸில நீயும் நாங்களும். கும்பிட்ட தெய்வங்களெல்லாம் நம்ம இனத்துக்கு துணைக்கு வரவில்லையென்பது வேதனைக்குறிய விடயம்தான். இப்ப நான் உன்னைக் கும்பிடுறேன். நான் சொல்வதை அமைதியுடன் கேள். பிற்பாடு ஆக வேண்டியதை கவனிப்போம்."

சிந்தனைகள் பலவாறு உறுண்டாலும், நிந்தனைக்குறிய செயல் என்ன நடந்தது? என்ற வாக்கினை, எங்கினம் கக்கினம் இல்லை என்று ஏங்கி இருந்தேன். காசியண்ணன் கண்கள் கலங்கி, அனுங்கிய குரல் தணிந்து வந்து விழுந்தது. ஒருகணம் விம்மலும் மேலிட்டது.

"தம்பி உனக்கு மட்டும் நடப்பதல்ல, நம்மட இனத்துக்கே இதுதான் விதி. சதிசெய்வது என்று சொல்லி நியாயப்படுத்தவும் இதுவல்ல நேரம்..." சட்டென்று ஆவேசமாகத் தொனித்த குரல் பட்டென்று போட்டன தொலைபேசிச் செய்தியின் அவலத்தை...

"தம்பி ஆனந்தன்! உன்ர தங்கச்சி புனிதாவை ஆமிக்காரன் கற்பழிச்சிப்போட்டு கழுத்தை நெரித்துக் கொன்று, சடலமாக கந்தர் மடத்தடிச் சந்தியில் கிடந்தெடுத்து அடக்கமும்... முடிந்து விட்டன என்று உன்ர மாமா கொழும்பிலிருந்து ரெலிபோனில் சொன்னார். உன்னைக் கேட்டார். நான்தான் அவனில்லை என்று சொன்னேன். வந்ததும் சொல்லச் சொன்னார். இப்பதானே நீயே வந்திருக்கிறாய். அதனால்தான் இதயனிடம் சொன்னேன் அயல் ஆக்களுக்கு ரெலிபோன் எடுத்துச் சொல்லும்படி..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விம்மி, விம்மி விழுந்த குரலால் வெடித்திடும் என் இதயம்... மூர்க்கத்தனமான முரட்டு ஆவேசத்துடன் துடிச்சு எழுந்தேன். இருந்த கதிரையும் பின்புறமாக விழுந்து குலறின. உணர்ச்சி வேகத்தால் தேகம் கிடு கிடுவென நடுங்கின. என்ன செய்வதென்று வாய் புலம்பின.

"ஐயோ! கடிதத்தில் எழுதியிருந்தாளே! என் கையில் வளையல்கள் இல்லை. மலர வேண்டிய மலர்ச்சிக்கான வடிவம்தான் ஏந்தியுள்ளேன். பாடபுத்தகத்தைக் கையில் ஏந்திய நேரம்போக, பகுதி நேரத்தில் இன்னுமொன்றையும்பழகி வருகிறேன் என்றவள், இன்று என்னை விட்டுப் போய்விட்டாளா? வீட்டைவிட்டு வெளிக்கிடும் போது மலர்ந்த முகத்தின் முறுவலோடு, கள்ளமற்ற தேன்சிந்தும் இனிதான குரலில் சொன்னாள் 'எங்கிருந்தாலும் இங்குவந்து வாழ்வதையே இனிதான வாழ்வெனக் கொள். அதுதான் பிறப்புக்கும், இறப்புக்கும் பெருமை' யென்ற என் மண்மகளா! அன்புத் தங்கை புனிதாவா மறைந்து விட்டாள்?

இல்லை... இல்லை...

கற்பழிக்கப்பட்டாள்...

சாகடிக்கப்பட்டாள்.

இனி?

தனித்துவிடப்பட்ட அம்மா, அப்பா நெஞ்சில் மேலும் ஒரு பூகம்பம்! விரக்தி, விரயம், கவலை, நிம்மதியற்ற நிர்க்கதி. இதற்கிடையே தீர்க்கமான முடிவு? ஊர்ப்போய்ச் சேர்வதென்பதும், புனிதாவின் சாவோடு சங்கமமாகிவிட்ட கனத்த மனசில் தனியாக ஒலித்தன. 'விடிந்ததும் முதல் அலுவல் இதுதான்...' இறுகிய பிடிதளராது நின்றேன்.

இதயன் எழும்பி எல்லோருக்கும் தேத்தண்ணீர் பரிமாறினான். என் நாவில் எச்சில் இல்லாதது கண்ணீர் உப்புக் கரித்திடும்போதுதான் சிலிர்த்தன. "இவன் தேத்தண்ணி குடிப்பானா? குடிக்க மாட்டான்." பிடிவாதம் பிடிச்சவன் குணமறிந்து எனக்குத் தேத்தண்ணீர் இதயன் தரவில்லை. குனிந்தேன். கண்ணீர் பொல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலவென உதிர்ந்தன. நிமிர்ந்தேன். காசியண்ணன் எழுந்து கைகளால் கண்ணீரை வழிச்செறிந்தார் தலைமயிரை மெல்ல வருடினார். அந்நேரம் அவர் சிந்திய கண்ணீர் என் தலைமேல் விழுந்து அதிர்ந்தன. முடிந்தன. இரவும் விடிந்தது – பகலும்...

காலை எழுந்ததும் நானும் காசியண்ணனும் அலுவல் களைப் பார்ப்பதற்காகப்' படிகள் இறங்கினோம். அவருக்கு விருப்ப மில்லைதான். என்ர பிடிவாதம் அவரால் மறுப்புச் சொல்ல முடிய வில்லை. படியைவிட்டு இறங்கியவர், கடிதப்பெட்டியைத் திறந்தார். என் பெயருக்கொரு கடிதம்...

"தம்பி ஆனந்தா, உடைச்சுப் பார்க்கட்டாடா?"

மௌனமாகத் தலையாட்டினேன்.

சிரிக்க முடியாச் சிரிப்பை வலுக்கட்டாயப் படுத்தியவர் "டேய் தம்பி உனக்குக் கார்ட் (அகதி அந்தஸ்து பத்திரம்) அக்ஸப்ட் பண்ணியிருக்காங்கடா" குலுங்கி குலுங்கி ஆடியபடி காசியண்ணன் படிகள் ஏறினார்.

நானும் அவர் பின்னே படிகள் ஏறிக் கொண்டிருந்தேன்.

பாரிஸ் ஈழநாடு
23.05.1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளியாக

மூன்று நாட்களாகக் கிழவி பேரனைத் தேடி தெருவெங்கும் அலைந்து திரிந்துவிட்டாள். பேரனைப் பற்றிய செய்தி சொந்த ஊரில் உள்ளவர்கள் யாரிடமிருந்தும் வந்தபாடாய்த் தெரியவில்லை! கிழவி யின் உடல் வலிமை குன்றியதுபோல்.. பேச்சிலும், பார்வையிலும் பொலிவும், தெளிவும் குன்றவில்லை. கால்கள் மட்டும் கனத்தன. பாடசாலை போய்வந்த பேரனைக் காணாத கனதியான கவலைகளால் முகம் வெளுப்பேறியிருந்தது.

பொழுதும் போய்க் கொண்டிருந்தது. இரவின் கையில் சிக்கிய மாலைப் பொழுதில் மங்கிய ஒளி ஜன்னல் கம்பிகள் ஊடாகப் பதுங்கிக் கொண்டிருந்தன. இந்நேரம் கிழவியின் மனசில் உரசிக் கொண்டிருந்த பேரனைப்பற்றிய ஊள்ளீட்டின் துடிப்போடு எழுந்து பேரனின் படிப்பறையுள் புகுந்து கொண்டாள். அவனது மேசையில் கிடந்த காகிதங்கள், புத்தகங்களைத் துழாவிக் கொண்டிருந்தாள். பள்ளிக்கூடப் புத்தகங்களைத் தவிர வேறு என்னதான் தேடுகின்றாள்? பேரன் தனக்கு ஏதாவது எழுதி வைத்துவிட்டுப்போயிருப்பான் என்ற ஏக்கத் தவிப்பாகவும் கிழவியின் செயல் தென்பட்டது. தவிப்பின் வேகத்தில் கரங்களில் இரண்டு புத்தகங்கள் அகப்பட்டன! தூக்க இயலாத துக்கத்திலும் வலுக்கட்டாயமாகத் தன் இரு கரங்களிலும் கரத்திற்கொன்றாகத் தூக்கிக் கொண்டாள். புத்தகத்தின் பெயர்களை வாசிப்பதற்குள் ஜன்னல் வழியாகத் தெறித்த மெல்லிய ஒளிக்கும் பிடிப்பில்லாது இரவின் அனுமதியின்றி இருட்டிக் கொண்டது.

நீண்ட நேரமாக நான்காவது இரவும் பேரனின் வரவுக்குக் காத்திருக்கக் கிழவி உறுதிபூண்டாள். மேசைமீது இருந்த அரிக்கன் லாம்பைத் தேடி நான்கடி எடுத்து வைத்தாள். 'மின்சாரம் இல்லாத சமாச்சாரமே ஊரில் பெரும் புரட்சியாகிவிட்டது. எந்த நேரமும் இடுப்புச் சீலை மடிப்பில் பத்திரப்படுத்தி வைத்திருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்புப்பெட்டியை திறந்து குச்சொன்றை எடுத்து நின்று... நிதானமாகப் பொட்டியில் உரசிப் பற்றிக் கொண்டதும் லாம்பின் திரியை மெல்ல எழுப்பிப் பற்றவைத்துக் கொண்டாள். பிரகாசித்த ஒளியைப் பார்த்த கிழவிக்கு பேரன் தற்பாதுகாப்பிற்காகத் தேசத்தின் பொருளாதாரப் பிரச்சனையில் உள்ள மண்ணெண்ணையும், நெருப்புப் பொட்டியையும்தான் கிழவிக்குப் பேரன் கொடுத்த சொத்தாகும். விரக்தி கலந்த சொற்ப சந்தோஷம் லாம்பின் ஒளியில் பிரகாசித்தன. தன் காலத்து மண்ணெண்ணை விளக்கொளியில் வாழ்ந்த வாழ்வில் ஓர் அர்த்தமும், அகமகிழ்வும் இருந்தன. கிழவியின் புள்ளைகள் காலத்தில் தமிழ் ஈழப் பகுதிக்கு வந்த மின்சாரத்தின் பாச்சல் போலவே எங்கட சனத்தட உயிர்களையும், கற்பையும், பொருளாதாரத்தையும் கண் மூடித்தனமான மனித மிருகங்கள் பாஞ்சு.. பாஞ்சு குதறித் திண்டார்கள். குறுகிய கண்களோடு வாயின் புலம்பலும், மனசும் பெலமாக அடித்துக் கொண்டன. பிற்பாடு உணர்வுகளும், உண்மைகளும் உறங்காது "எங்கட புள்ளைகள் உரிமைக்காப் போராடத் தொடங்கியதும் கிழவி நடைபயின்ற காலத்துக் கும்மிருட்டுத் தேசம் போலாக்கி விட்டார்கள்.... தேசப் பற்றற்றவர்கள்!" தனக்குள்ளாகவே பேசிக் கொண்டாலும் நிதானம் தப்பாத செயல்கள் கிழவியிடமிருந்து தப்புவதில்லை. முதல் வேலையாகத் தனது பொக்கிஷமான நெருப்புப்பெட்டியைப் பத்திரப்படுத்திக் கொண்டாள். ஒரு நாளைக்கு இரண்டு குச்சிகளுக்கு மேல் பற்றவைப்பதில்லை! ஒன்று சமையலுக்கு, மற்றொன்று இரவின் ஒளிக்கு. இருண்ட தேசத்தின் வரண்ட நிலமை காரணமாகவே. அடுத்து பேரனின் மேசையில் தேடியெடுத்த புத்தகங்கள் இரண்டையும் குறுகிய பார்வைக்குத் தெரிந்தவரை உயர்த்தி புடிச்சு லாம்பின் ஒளியில் படித்துக் கொண்டாள்.

ஒன்று ரூஸோவின் 'சமூக ஒப்பந்தம்'. மற்றொன்று டால்ஸ்டாயின் 'போரும் சமாதானமும்'. புரட்சிகரமான கருத்துக்களின் தொகுப்பான இரண்டும் ஆயிரம் பக்கங்களுக்கு மேற்பட்டன. கிழவிக்கு அதிர்ச்சி கலந்த அகமகிழ்வு தோன்றியது. "இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரியான புத்தகங்களையும் பேரன் படிக்கிறான்!" பிரமிப்பின் இடையிலும் இருண்ட மனங்களையும் நொந்து கொண்டாள். இலங்கைத் தீவில் இப்படியான புத்தகங்கள் வைத்திருப்பவர் சிறைவாசம், தண்டனை என்று இந்தப் பாழாப்போன அராஜகக்கும்பல் தடைவிதித்த காலத்தையும் நினைத்து வெட்கப்பட்டாள்.

"எங்க அயல்தேசத் தமிழன் எழுதிய 'மீண்டும் இலங்கை எரிகிறது' என்ற நாடக நூலுக்குப் பாடை தூக்கிய பயந்தாங்கொள்ளிகள், மொக்குகள், இந்தப் புத்தகங்களைப் படிக்கயில்லப்போலிருக்கு! என்ர பேரன் கெட்டிக்காரன்".

"இருண்ட இந்த ஊரில இந்த மாதிரியான புத்தகங்களை எங்குதான் தேடிப்பிடிச்சான்?" சந்தேகத்திலும் பேரன்மேல் இருந்த பிடியான நம்பிக்கை தளரவில்லை.

"கலாச்சாரப் படுகொலையாக எங்கட அறிவுக்கு அறிவூட்டிய பொது நூல்நிலையத்தையே நெருப்பிலிட்ட மிருகங்கள். பகுத்தறிவற்ற இராணுவம் நடமாடும் இந்தத் தேசத்தில் பேரனுக்கு இப்படியான புத்தகங்கள் கிடைத்தது?" கிழவிக்குப் பெரும்பயமாகவும் இருந்தது.

பயத்துடன் கலந்த பசிக்களைப்பும் கிழவிய சாய்வு நாற்காலியோடு சாய்ந்திட வைத்தன. கண்களின் செருகல் இரவின் பிடியின் இறுக்கலில் இரங்கிநின்றன. மனசு மௌனமாகும் நேரம் காதுகளைத் துளைத்தது கனகம்மாவின் கீச்சிட்ட குரல்!

வாசல்படி ஏறிவரும்போதே. "நான்தான் பொன்னு ஆச்சி பக்கத்துவீட்டுக் கனகம் என்றாள். என்னனே திரும்பவும் பேரன மூன்று நாளாகக் காணமாமே?"

அவளது இழுப்பு கிழவிக்குப் புடிப்பில்லாது இருந்தது?

கேள்வியில் இரக்கத்தின் சாயலா? அல்லது கேலியின் பாச்சலா?

கிழவி வாய்மூடியபடி தனக்குள்ள புகைஞ்சதை வெளிக் காட்டாமல் சாய்ந்திருந்தாள். பக்கத்து நாற்காலியில் பெருத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டியை வைச்சவள் கிழவியக் கூர்ந்து நோக்கினாள். கிழவியும் வாய்திறந்து பேசுவதாகத் தெரியவில்லை.

அக்கம்பக்கம் துருவித் துருவிப் பார்த்தபடியே கனகம் திரும்பவும் பேசினாள்.

"என்ன பொன்னுயாச்சி! இந்தப்பெரிய வீட்டில இந்த வயசான காலத்தில தனியாக்கிடந்து மாரடிக்கிறாய்? பேரனும் தனிய விட்டுட்டுப் போயிட்டான்? இப்படியிருக்கும் போது உன்ரமனசில என்ன தான் பிடிப்பு இருக்கென்றாவது சொல்லன?"

கிழவியின் உம்மென்று உரசிக்கொண்டிருந்த சொண்டுகள் திறந்தன. நச்சரித்து நடுங்கி சொற்கள் இடைவெளியின்றி வந்து விழுந்தன.

"எடியே! என்ர பேரன் உழைச்சுக் காப்பாற்றவேண்டும், அவன் தயவில் என்ர சீவியம் ஆடவேண்டும், என்பதல்ல என்ர வைராக்கியம். ஆயுள் முழுவதும் சீவிக்கக்கூடிய சொத்தும், காணிபூமியையும், என்ர மகராசன் வைச்சிட்டுதான்ரி போயிருக்கிறான். என்னட்ட இருக்கிற சொத்துக்குப் பேரன எங்கெல்லாம் அனுப்பிப் படிக்க வைச்சுக் காப்பாற்ற என்னால முடியுமடி. அதுவல்ல என்ர கனவு? அவன் இங்கிருந்து எங்கட சனத்திற்கு, ஊருக்கு உழைப்பதை என்ர கண்ணால கண்டு ஆறுதலடையவேண்டும். அந்த நாளைத்தான் நான் காண ஏங்குறேன்."

கிழவியின் ஒவ்வொரு சொல்லிலும் கனகம் நீந்தத் தெரியாதவள் ஆற்றில் மூழ்கித் தவிப்பது போல் தத்தளித்தாள். வெளி நாட்டிற்குத் தான்பெற்ற மூன்றுபுள்ளகளையும் அனுப்பிவைத்துவிட்டு அவர்கள் அனுப்பும் பணத்தை எதிர்பார்த்து வாழும் இழிவான வாழ்க்கை வாழும் தன்னையும் கணவனையும் சற்றுநேர மௌனத்தில் நினைத்து வெட்கித் தலைகுனிஞ்சாள்.

இத்தனை வயசிலும், கிழவியின் மனத் தைரியத்தையும் ஊர்ச்சனத்தின் மேல் வைத்திருக்கும் பற்றும், பாசமும், நேயமும் அறிந்து கனகத்தின் இதயம் கலங்கியது. கண்கள் சிவப்பேற லாம்பின் ஒளியில் கிழவியின் பொக்குவாய் விழுந்த நிர்மலமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்த்தாட்சணியமான புன்னகைமுகத்தைப் பார்த்து மேலும் மௌனி யாக அமர்ந்திருந்தாள்.

கிழவியின் குரல் திரும்பவும் கரகரத்தது. "எடியே கனகம், கண்ணுக்கு கண்ணாக வளர்த்த ஒரே மகளையும், மருமகனையும் பாழாப்போனவன்ர ஷெல்லடிக்கு இரையாகக் கொடுத்தபோது அந்த உடல்களைக்கூட ஒன்றாய்க் காணமுடியாமல் தவித்தேன். அங்கங்கள் ஆங்காங்கு சிதறுண்டு கிடந்ததைப் பார்த்தப்பவே என்ர உசிரும் போயிருக்கவேணும். இன்னும் ஏன் இழுத்துக் கொண்டிருக்குது? என்ர பேரனுக்காகத்தான். இந்த ஊர்ச் சனமெல்லாம் கூடிநிற்க நான் ஒப்பாரி வைத்துக் குளறி அழுதபோது என்னைக் கட்டிப்புடிச்சுச் சொன்னான் – பாட்டி நீ ஒன்றுக்கும் பயப்படாதே நானிருக்கேன – என்று அவன் சொன்ன வார்த்தையில்தான் இன்னும் என்னுசிர் ஊசலாடிக் கொண்டிருக்குது."

கிழவியின் கண்களிருந்து கண்ணீர் பெருகுவதை விளக் கொளியில் கண்ட கனகம் கிழவியின் நடுக்கத்திலும் உள்ள உறுதி கண்டு பிரமித்துப் போய்த் தலைகுனிந்தபடி மெல்ல மெல்ல வெளி யேறினாள்.

வாழ்க்கை முழுதும் யாருக்காக வாழ்வது என்பதைப் புரிந்து கொண்ட கிழவியின் கனவுதான் மிகவும் கெட்டியாக இருந்தது. துயரத்திலும் அழுந்திய நிகழ்ச்சி மட்டும் கிழவியை தினம்தினம் துன்பத்தின் துடிப்பில் வாட்டி வதங்கவைத்தது. கனவின் இலட்சியப் பிடியில் தீவிரமாக மூழ்கிவிட்டதால் கிழவியின் நடை, உடை பாவனைகளில் சகிப்புத் தன்மை தென்பட்டது. அறுபத்தைந்து வயசிலும் தன் கணவனைப் பிரிந்தும் கேசத்தில் நரைப்புத் தன்மைகள் அதிகம் தென்படவில்லை.

கணவனைப் பிரிந்து இரண்டு வருடங்களின் பின்பு மகள்– மருமகனின் கோர மரணம் கிழவியின் உடலையும், கேசத்தையும் முழுமையாக நரைக்கவும் நடுங்கவும் வைத்ததுடன் தோற்றமே மாறிய வாட்டமாக இருந்தது. இத்தனைக்குள்ளும் பேரன்மேல் வைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவுகடந்த அன்பும், தெம்பும் எந்நேரமும் கண்களில் நின்று உறுதிதளராது இருந்தன.

பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. காகங்கள் கரைந்து கொணடிருந்தன. வீட்டுவளவிற்குள்ள நின்ற பசுக்களும் கிழவிக்கு முன்பாக எழுந்துவிட்டன. இருண்ட தேசத்தின் விடிவை நோக்கிய மண்ணில் முந்தின காலத்துப் பரபரப்புக்களுக்கு மாறான நிலவரங்கள் மட்டும் தோன்றின. கிழவியின் காதுக்குள் புகுந்த சத்தத்தின் சந்தம்! நீடித்த தாக்குதலுக்குப் போய்வரும் பாசறைப் போராளிகளின் சப்பாத்துச் சத்தம் என்பதைப் புரிந்து கொண்டாள். வாயில் படலையை இழுத்துத் திறந்து வெளிவந்ததும் கண்கள் நிலை குத்திப்போக போராளிகளின் நடையில் பதித்தாள். கிட்டப்போய் ஒவ்வொருத்தரையும் தொட்டுத் தொட்டுப் பார்த்தாள்.

பெயர்களையும் விசாரித்துக்கொண்டாள். முன் சென்றவர்களை கூப்பிட்டபடி முன்னோக்கி ஓடினாள், "எடேய் தம்பிமாரே என்ர பேரனைக் கண்டிகளா? மிக அழகானவன் ஓல்லியானவன் உங்களைப் போலத்தான் அவனும் இருப்பான். அவன்ர பெயர் சாந்தன். அவன்ர முகமும் சாந்தமடா. டேய் நீங்களும் என்ர பேரன்மார்தான், அவனக் கண்டால் ஒருக்கா என்னிட்டக் கூட்டிவந்து காட்டியிற்றுப் போங்கடா என்ர பேரன்மாரே."

போராளிகள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். "கிழவிக்கு அரனை பேந்திட்டுப் போலிருக்கு" என்றும் நினைத்துக் கொண்டார்கள்.

கிழவியின் தவிப்பேறிய பார்வையும், திடகாத்திரமான பேச்சும் போராளிகளை மேலும் வீரம்பொங்கச் செய்தன. போராளிகள் நடந்து கொண்டே இருந்தார்கள். கிழவி புலம்பிக் கொண்டு வாயில் படலையைச் சாத்திவிட்டு உள்சென்றாள்.

நாட்கள் வாரங்களாகி மாதங்கள் பல உருண்டன. கிழவியின் உடல் நிலையில் கனத்த கவலைகள் சேர்ந்தன. படுக்கையில் படுக்கையாகிவிட்டாள். துயரமும், புலம்பலும் பேரன் வருவான் என்ற நடுக்கமும் அறைமுழுவதும் கிடந்தாடின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயலவர்கள் எல்லோரும் கிழவியின் கட்டிலைச் சுற்றி யிருந்தார்கள். ஒவ்வொருத்தரம் தங்களது மனதில் உள்ள அபிப் பிராயங்களைக் கவலையோடு கக்கிக்கொண்டிருந்தார்கள். கிழவி அசைந்து கொடுக்கவே இல்லை. கிழவியின் சொருகிய கண்களும், துவண்ட உடலும், வற்றிப்போன நரைச்ச தலையும், சூம்பிப்போன கால்களும், கைகளும், அசைவற்றுக் காணப்பட்டன. பேரனின் குரல் கேட்கும். என்ர பேரன் வருவான். பிடியில் சஞ்சலத்தோடு அனுங்கிய குரலும் கண்களும் தெம்பாகக் காணப்பட்டன! நேரம் ஆக ஆக பரபரப்பு, அயலவர்களை ஆட்கொண்டு உலுக்கியது. பேரனின் காலடிச் சத்தம் வீட்டு வாசலில் கேட்கும் என்ற ஏக்கத்தோடு கிழவியைப் பார்ப்பதும், தங்களுக்குள்ளாகப் பேசிக்கொள்வதுமாக இருந்தார்கள்.

கிழவியின் கடைசி மூச்சும் கனவின் நனவிற்காகவே தள்ளிப் போட்டுக் கொண்டது போலிருந்தது.

"பேரன் வருவான். தன் கனவை நனவாக்குவான் அப்பத்தான் என்ர ஆன்மா சாந்தியடையும்". கிழவியின் அனுங்கள் அயலவர் காதுக்குள் கேட்டன.

கிழவியின் கடைசிக்கட்டம் இன்னும் சிறிது நேரம்தான்...!

அயலவர்கள் அதற்குள் கிழவியின் காத்திரமான முனங்களின் முடிவை அறிந்துவிடத் தவித்தார்கள்? ஒன்று சேர்ந்த குரல்கள்.

பேரன் வந்தால் "என்னத்தையனே சொல்லுறது?"

கேள்விகள் பலவாறு பறந்துகொண்டிருந்தன.

கிழவியின் நிலமை களத்தில் நின்ற பேரனுக்குத் தெரிவித் தார்கள். உச்சியிலிருந்து உள்ளங்கால் வரையும் நடுக்கம் பிடித்தது. தன்தலைய நிமிர்த்தி நேரான பார்வையை பாசறத் தலைவன் மீது படரவிட்டான்.

அவனும் அதற்குப் பதில் தொடுப்பதுபோல் சின்னப் புன்னகை யோடு தலைய அசைத்தான். "சாந்தன் நீ போய்! உன்பாட்டியப் பார்த்துவிட்டு உடன் திரும்பி வா" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து வைத்த ஒவ்வொரு அடியிலும் சர்வாங்கம் அனைத்தும் நடுங்கயது. போராட்ட ஆடையுடன் தோளில் தொங்கிய துப்பாக்கி சகிதம் கிழவியின் வீட்டு வாசல் படியில் காலடி எடுத்து வைத்தான். "பாட்டி... பாட்டி என்ர பாட்டி" அடிவயிற்றிலிருந்து அள்ளிப் போட்டான் வேதனையை.

பேரனின் இரங்கல் தொனி லேசாக்கேட்டதும் கை கால்களை ஆட்டினாள்.

"பாட்டி என்ர பாட்டி! என்ன ஒருதரம் பார் பாட்டி".

அறையில் இருந்தவர்கள் கண்களைக் குமுறச் செய்தன.

குறுகிக் குற்றுயிராய்க்கிடந்த கிழவி பேரனின் இரங்குதொனி கேட்டதும் புத்துயிர் பெற்ற அனுங்கலோடு குறுகிக்கிடந்த கண்களை யும், ஒட்டிக்கிடந்த சொண்டுகளையும் அகல விரித்துக்கொண்டாள்! இறுதிச் சாவின் இழுவைக்குக் கிடைத்த தைரியத்தோடு துடி துடிக்கப் பேரனைப் பார்த்தாள். அவனது போராளியின் தோற்றமும், தோளில் தொங்கிய துப்பாக்கியையும் கண்டதும் பொக்குவாய் பொங்கச் சிரித்தாள். கண்களிலிருந்து கடைசித்துளிக் கண்ணீர் ஆனந்தமாக அவன் கைகளில் விழுந்தது.

"என்ர பேரா, என்ர பேரா, என்னுடைய கடைசிக் கனவை நனவாக்கிவிட்டாயடா."

அவன் கிழவியின் பிடியவிட்டு நிமிர்ந்து நின்றான்.

"நாட்டிற்காக, நம்ம சனத்திற்காக நீ... நீ போட்டிருக்கும் ஆடையே என்ர நிம்மதியான சாவிற்குச் சந்நிதி. பேரா... என்ர பேரா, நீ வாழப்பு."

அனுங்கிய குரல் அடங்கிவிட்டது...!

கிழவியின் பரம்பரையின் கடைசி வாரிசு போராட்டக் களம் நோக்கி நடந்துகொண்டிருந்தான்.

பாரிஸ ஈழநாடு
14.10.1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபறவைகள்

கோபம் தனியாதவளாய்க் கேட்டாள். "இதன் விளைவைப் பற்றிச் சிந்தித்தீர்களா?"

"எதைப்பற்றிக் கேக்கிறாய்?" ஏளனச் சிரிப்போடு திரும்பிக் கேட்டபடி நிமிர்ந்தான்.

"உங்கட புள்ளையாக இருந்தால் இப்படிச் செய்ய மனசு வருமா?"

"நமக்குத்தான் புள்ளையே இல்லையே. அதையிட்டு ஏன் கவலைப்படவேண்டும்? அதனால்தான் பிறந்த புள்ளையும் ஆறு வயசாகும் முன்னமே அந்த ஆண்டவன் எடுத்துட்டான்." விக்கி விக்கி கக்கினாள் உள்ளத்தில் நெறிஞ்ச வார்த்தைகளை.

"இப்ப என்ன நடந்திட்டு என்று இப்படிப் பிதுக்கிச் சிலுக்கி நிற்கிறாய்? ஆத்திர அபிநயத்தோடு அவள் முகம்முட்ட போனவன் பின் குனிந்து அவள் முகத்தை நோக்கினான்.

"உங்கட வண்டவாளத்தை யெல்லாம் என்ரமாமா ரெலிபோன் மூலம் தண்டவாளம் ஏற்றிவிட்டார். நேற்று ராத்திரியே!" சொன்னபடி அவன் முகபாவத்தைக் கூர்ந்து கவனித்தாள்.

ஓ! "அந்தக் குடிகாரன்ர பேச்சைக் கேட்டா இந்தத் துள்ளு துள்ளுறாய்?"

அவர் குடிகாரன்தான்! "அப்ப நீங்க எந்த வேசக்காரன் சொல்லுங்களேன்?"

"நான் மெஸ்கோவிலிருந்து கூட்டிவந்த பொட்டைப் பற்றிய சமச்சாரம்தானே?"

"சிரிப்பில் சிறிதேனும் பொய்யில்லாத நாசுக்கான கபடம் நுழையோடியிருந்தது".

அவளது உள்ளத்தை முட்கள் குத்தியது. அவனது மனசில் இருப்பதை அறிவது மிகவும் "இன்டப்போல்" நுழைவாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்பட்டது. கோப வேசத்தோடு நின்ற "கலா"வின் கண்ணின் கண்மணிகள் கலங்கியிருந்தன. இதயத்தில் ஏறிய கனத்தோடு "குமரேஸ்" பெண்புள்ளைகளைப் பெற்றவர்கள் ஒவ்வொருத்தரும் தன் மகளின் எதிர்காலத்தைப் பற்றிய கனவுகளோடும், அவளது வாழ்வு நல்லாக அமைய வேண்டும் என்ற நிஜமான எதிர்பார்ப்புகளோடும் தான் இந்த வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கின்றார்கள்.

குமரேஸ் நான் ஆயிரம் தடவை அடிக்கச் சொல்லுவேன் நீ அந்தப் பெண்ணோடபழகுவது அவ்வளவாய் நல்லதல்ல. அடிவயிற்றின் அலறலோடு உரத்துக் கத்தினாள். "யார் இப்ப பழகினது"? ஆச்சரியம் கலந்த அசட்டுத் தைரியத்தோடு.

"உன்ர மனசாட்சியத் தொட்டுச் சொல்லு நீ பழகயில்ல?"

அவளது மனசின் நிலமையை 'திராசின்' நிலையில் கிரகித்துக் கொண்டவனாக அசட்டுச் சிரிப்போடு கலா அவன் சுரேஸ் பொய்யான தகவல்களைத் தந்திருக்கிறான். மொஸ்கோ விலயிருந்து கூட்டி வந்தவளை நடுறோட்டிலா விடுவது? அது மனித தர்மமா?" ஒன்றும் இங்கு அறியாத பெண்ணுக்கு வேண்டிய உதவியக் கூடவா செய்துகொடுக்கக் கூடாது?" மனசைப் போட்டு அடிச்சிக்காம உன்ர அலுவல்களைப் போய்பாரும். நான் ஒருக்கா போடர் விடயமாக வெளியே போயிற்று இருட்டைக்குமுன்ன வந்திடுறேன். எட்டிவைத்த அடியோடு கலாவின் கிட்டப் போனவன், உன்ர கண்ணீரைத் துட முதல்ல. அந்தப் பெண்ண இண்டையில இருந்து சந்திக்க மாட்டேன்." அவனது நடிப்பு அவளுக்கு வியப்பாக இருந்தது நிமிர்ந்து பார்த்தாள்.

"என்ன! இந்த வாக்கை நம்பலாம்தானோ?"

அவன் தலைய மெல்ல பொம்மையாட்டம் ஆட்டினான். அவளது அழுகையின் குரலில் தளர்வு நீந்தி யது. அவன் சிரித்த சிரிப்பில் சில பல உண்மைகள் மறைந்து கிடந்தன. அவனது கள்ளச் சிரிப்பில் மெல்லக் கசிந்தது அவளது உள்ளமும். வீட்டுக் கதவை திறந்து படிகள் இறங்கினான். அவன் போனதும் அவள் கதவைச் சாத்தி தாழ்ப்பாள் போட்டுக் கொண்டாள். திரும்பிய வேகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசி கீர்.கீரென இரைஞ்சது. எடுத்து வைத்த அடிவேகம் கொள்ள. செற்றி அருகில் 'தூழ்மேல்' இருந்த ரெலிபோன் ரிசிவரை எடுத்து காதருகே வைத்தாள்.

அலோ! "நான் சுரேஸ் கதைக்கிறேன்".

"சொல்லுங்க மாமா நான் கலாதான் கதைக்கிறேன்."

"என்னடி நான் சொன்னதை குமரேசிடம் கேக்கயில்லையா?"

"இப்பதான் கேட்டனனான் மாமா".

"அவன் என்னதான் பொய்யால மொழுகினான்?"

"தான் இனி அந்தப் பொட்டையப் பார்க்கமாட்டேன் என்று சத்தியம் பண்ணிப்போட்டு இப்பதான் கீழ இறங்கிப் போறார் மாமா.

"அப்படியா! அந்த மடையன் இன்டைக்கு காலமையும் எங்கேயோ கூட்டிக்கொண்டு போனத நம்மவங்க கண்டிருக்கிறாங்க! அந்த விசயம் என்ர காதுக்கு எட்டியிற்று. எடியே! சொல்லிக் கொள்ளாமல் அள்ளிக் கொண்டு போகும் முன்னே முளையிலேயே கிள்ளி எறிந்திட வேணுமடி". சுரேசின் மூச்சு விடாத வீச்சில் சொக்கிய சோகத்தில் நின்றவளின் குரல்தொணி...கேக்காததால்..

"என்னடி! உன்ர குரலையே காணயில்ல?"

"சரிமாமா நான் இன்டைக்கே இதற்கொரு முடிவெடுக்கி றேன்".

சுரேசின் பேச்சை இடைமறித்தவள் அவனது ரிசிவரை வைக்கச் சொன்னாள். அவனது குரலில் ஒலித்த அக்கரையும், ஆத்திர மும் அவளது மனசை கனக்க வைத்தது. கண்கள் மழையைப் பொழிந்தன. குமரேசிடம் நேரில் கேட்டு எந்த காரியமும் ஆகபோவதில்லை. கள்ளத்தனமான காரியம் தான் இந்த காரியத் துக்கு சரியாகப்பட்டது. நல்லதுக்கு கைகூடும் இப்படியான செயல கள் பாவம் இல்லாதவை. துணிந்தவள் தூக்கம் கெட்ட இரவாகக் கழியப்போகும் துக்கத்தை தாங்கமுடியாத மனசோடு சங்கடப்பட்டாள். வீடியோ மூலமாக டிவியில் ஓடி கொண்டிருந்த வாழ்க்கைப்படகு சினிமாவில் வரும் பாடல் வரிகளை கேட்டாள் கண்களே கண்களே காதல் செய்வதை விட்டு விடுங்கள். பெண்களே பெண்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபரைக் கெஞ்சம் வாழ விடுங்கள். இவ்வரிகள் அவள் இதயத்தை இரும்பாக்கி கோர தாண்டவம் ஆடும் அபார சக்தியை அளித்தது. படாரென டிவியின் சுச்சை கை பதம்பார்த்தது! வீடியோவிற் குள்ளிருந்த கசற் ஜன்னல் வழியாக வெளியில் பறந்தது. தன் வல்லமையை மீற முடியாத கசற் றோட்டில் விழுந்து நொறுங்கியது. குமுறிய கொந்தளிப்போடு கட்டிலில் முகம் புதைத்து விம்மி..விம்மி அழுதாள். முடியும் பொழுதும் இரவின் கையில் சிக்கி விடியும் பொழுதாய் விடிந்தது.

அவசியம் இல்லாத சில அவசரங்கள் இயந்திர மயமான மனிதர்கள். பட..படப்பு, பர..பரப்பு கலந்த எரிச்சலான முகங்களற்ற முகங்கள். எந்த நேரமும் ஒரே மாதிரியான போராட்டம் போட்ட லுத்துக் கொண்டிருக்கும் 'பாரிஸ்' நகரத்தின் நெரிச்சலான வாழ்க்கையைப் பார்த்ததும் 'சினம்' கொண்டாள் 'சுகந்தி'. வீதி யோரத்து நடைபாதையில் நின்றபடியே தன் சொந்த மண்ணையும், நிர்மூலமான நீலவானத்தையும், காலையிளம் கதிரவனின் கண்சிமிட்ட லும், இளம்தென்றலின் தாலாட்டும், பால்யத் தோழிகளுடன் பல்லாங் குழி ஆடிய ஆட்டத்தின் அகமகிழ்வும் அவள் நினைப்பறையில் கிடந்து—உருண்டு தேகத்தை உசுப்பியது.

பழமையிலேயே கிழமைகளை ஓட்டிக் கொண்டு வடகமும் அப்பளமும் தட்டி விற்று வளர்த்தவள். சீமைக்குப் போய் "நல்லா இருமகளே" என்று அனுப்பிவிட்டு நான் இந்தப் புண்ணிய பூமி யிலேயே கிடந்து செத்துடுறேன். மகளே நீ மானத்தோடு நம்ம பண்பாடுமாறாமல் வாழ்ந்து நான் உசிரோடு இருந்தால் ஒருமுறை வந்து பார்த்திடு என்று சொன்ன தாயின் திருமுகம்! வேக..வேகமாக கிளர்ந்தெழுந்து வந்து எச்சரிக்கைச் சைகையும் கண்டித்துக் கொண்டிருந்தன சுகந்திக்கு! நினைவைத் தொலைத்து நின்றவள் காதுக்குள் திடிரெனக் கேட்ட குரல் மேலும் கூர்மை பெற வைத்ததால் திரும்பிப் பார்த்தாள். மெற்றோ வெளிவாசல் வழியாக வந்து கொண்டிருப்பது குமரேஸ் என்றதும் எண்ணத்தில் "தெளிவற்றுக் கிடந்த நீரோடைக் குளிர் கொண்ட நம்ம ஊர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளத்து நீர் போலானது". குமரேசின் முகம் முட்டப் போனதும் தன்னை அசுவாசப்படுத்திக் கொண்டாள். இரண்டில் ஒரு முடிவைக் கேட்டுவிடும் துணிவு துள்ளியமாகத் துலங்கிநின்றது.

"என்னங்க என்ர யோசனையைத் தப்பாசையாக்க மாட்டீர்கள தானே?"

அவள் குழைஞ்சு கேட்டகேள்வியின் பாவம் அவனது மூளையைச் சூடேற்றியது. திரும்பத் தொடர்ந்தாள் நான் உங்களைத் தான் கல்யாணம் பண்ணிக்கப் போறதாக எங்கம்மாவுக்குக் கடிதம் போட்டிட்டேன். ராகம் தப்பாது வந்து விழுந்தன சொற்கள். சுகந்தி எனும் தளிர்க் கொடி தத்திப் படர்ந்திடத் துணிந்துவிட்டது. புரிந்து கொண்டவன் "முட்டைக் கோது உடைந்தது போன்ற சிரிப்பை முகிழ்த்தான". உள்ளங்கையில் கசிந்து கொண்டிருந்த வியர்வை யோடு அவள் கையை இறுகப் பிடித்தான். அவனது பிடியில் அவளது கை கச.கசக்க செய்தன.

சபல புத்தியானது ஒவ்வொரு மனிதனின் மனசிலும் மறைந்து கொண்டுதான் இருக்கிறது. சரியான சந்தர்ப்பத்தில் தூண்டில் போட்டதும் விழித்துக் கொண்டு விடுகிறது. குமரேசும் சாதாரண மனிதனாக காதல் வலையில் சிக்கிடும். பெண்களின் தொடர்புக் காகவே அலையும் பெண்போக நடிகனாக சுகந்தியின் பலங்களையும், பலவீனங்களையும் நன்கு அறிந்து கொண்டான். தனக்குள்ளாகவே சபலத்துக்கு சந்தர்ப்பம் கிடைத்துவிட்ட "தழல்" மூட்டிக் கொண்டான். சுகந்தியின் ரகசிய வார்த்தைகள் மட்டும் ஜீரணமாயின அவன் காதுக்குள்!

இருவரும் கைகோர்த்தபடி எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்ற அசட்டுத் தைரியத்தோடு சுகந்தியின் வேலை விடயமாகப் போய்க்கொண்டிருந்தார்கள்

எரிமலை விழியோடு உயிரற்ற ஓவியமாய் எச்சிலை முழுவதும் இழந்தவாய் பிழந்திட நின்றாள் கலா! நெருப்பின் தவிப்பை நெஞ்சில் உணர்ந்தாள். கனத்த கவலைகளால் அவள் எடையும் கூடி கொண்டன? மதிப்பு–மரியாதை பண்பாடு, மரியாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின்றி இனிமேல் குமரேசிடமிருந்து ஒதுங்கிவிட்டதை உணர்ந்து கொண்டாள். கலாவின் உச்சந்தலையில் கடப்பாறை இறங்கிய வேதனையில் வியக்க முடியாத துணிவு முந்திக் கொண்டு வந்தது.

ஒரு அபலைப் பெண்ணின் கற்பு காப்பாற்றப்பட வேண்டியதன் ஆத்திர அவசரம் பெண்மையில் நின்று வண்மைகொண்டது.

மேகக் கூட்டங்களின் மோதலைச் சமாளிக்க முடியாமல் வானம் பல்லிழிக்கத் தொடங்கியது. தூறல்களுக்கான ஓட்டைகள் ஓவென உடைந்து பெரும் மழை கொட்டியது. வீதியோரமாக ஒதுங்கிய கலா கடை ஒன்றிற்குள் புகுந்து கொண்டாள். மெல்லிய புருவங்களை ஒன்றுகூட்டி பலமாகச் சிந்திக்கத் தொடங்கினாள். குமரேசுடன் போகும் அந்த அபலைப் பெண் இந்த மெற்றோ முன் நின்றதை நினைத்துக்கொண்டாள்! எப்படியும் அவள் இங்கின் எங்கினயும் தான் இருக்க வேண்டும்! "வரட்டும் ஒரு கை பார்ப்போம்". துணிவு தூக்கி நின்றது. கடையில் உள்ள பொருட்களைத் தூக்கிப் பார்ப்பதும் வைப்பதும் பின்னே இடைக்கிடையே திருடியப் போல் வெளியில் பார்ப்பதும். கவுண்டரில் நிற்கும் வெள்ளைத்தோல் பெண்ணைப் பார்த்து முழுசுவதுமாக நின்றாள் கலா.

கண்கள் காணவேண்டிய காட்சியை கனப்பொழுதும் நினைத்தறியாதவள் கண்களை குத்தினார்கள் குமரேசும், சுகந்தியும் ஒரே குடையின்கீழ் அன்னியொன்னியமாக உரையாடிப் பல்லிளிச்சபடி போனவர்கள் திரும்ப வந்து கொண்டிருந்தார்கள். கண்ட காட்சியில் கட்டிய கணவனின் ஒட்டிய மொட்டையான உறவும் அறுந்து விட்டது. ஆத்திரம் கலா வைக் காவு கொண்டது. சற்று நேரமும் தாமதிக்க முடியாத அவள் மனசு மரண வேதனை அனுபவித்தது.

மழையின் வேகம் வேறு கலாவுக்குத் தொந்தரவு கொடுத்தது. அடைமழைக்குள்ளும் உடைப்பெடுத்திடும் அகோரம் கலாவின் அடிவயிற்றில் அனலாக்கிக் கொண்டிருந்தது. அவர்கள் நடந்து செல்லும் பாதையில் இம்மியும் பிசகற்று வெறிச்சோடிய பார்வையில் நெஞ்சுருக நின்றாள். மழையின் வேகம் நிதானமாக மௌனமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனங்களின் இரைச்சல்—மழையின் இரைச்சலையும் மிஞ்சிநின்றன. குமரேஸ் மெற்றோ வாசல் படிகள் இறங்கி பாதாளத்திற்குள்ளே போய் மறையும் மட்டும் ஒடுங்கி ஒடிந்து நின்றாள் கலா. சற்றுநேரத்தின் பின் சுகந்தியை பின்தொடர்ந்தாள். இவளது வாழ்க்கைக்கு வந்த கோலத்தைப் பார்த்தால் ஊரார் காறித் துப்புவார்கள். ஊனமற்ற வாழ்வின் உளவாளியாக மாறிய உண்மை அறிந்தாள். இந்தப் போராட்டத்தின் முடிவுக்கு அவள் கண்ணீர் பதில் சொல்லப் போவதில்லை! நிதானமான நீதியான பெண்மையின் சட்டங்களும் சம்பிரதாயங்களும், பெண்மையை மென்மையென மதிக்கும் குற்றங் களும், பழமைவாத கள்ளமுற்ற கோலங்களும் நம்மிடையே புரை யோடிப்போன பெண்மையைப் பழிக்கும் நீசத்தனங்களும் ஆண்களால் பெண்கள் கண்ட மட்டமான அடக்குமுறைகளும் இன்றோடு அழியட்டும். விமோசனம் விடுதலை கிடைக்கும் என்ற எழிச்சிப் போக்கோடு சுகந்தியைப் பின்தொடர்ந்தாள் கலா.

அப்பாற்ட்மன் கதவின் 'கோலிங்' பெல்ல அமர்த்த வலக் கையைத் தூக்கினாள். சுகந்தி. முதுகைப் பதம்பார்த்தது கலாவின் இடக்கை.

பிதுங்கிய முழியோடு நடுங்கியபடி திரும்பினாள் சுகந்தி. சற்றுத்தள்ளி நின்றபடி இடுப்புக்கையோடு நிமிர்ந்து நின்றாள் கலா.

சுகந்தி நேர் எதிரே நிற்கும் பெண்ணைப்பார்த்ததும் நம்ம தமிழ் பெண்தான்! மனசில் மங்கலான மகிழ்ச்சி. இருந்தும் முன்பின் தெரியாதவள் ஏன் நம்ம முதுகில் தட்டினாள்? கேட்டுவிடத் துடித்த உதடுகள் எழும்பும் முன்னே, கலா வாய்மொழிந்தாள்.

செருமலோடு "உன்ர பெயர் என்ன?"

அடக்கத்தோடு "சுகந்தி" என்றாள்.

"உனக்கும் குமரேசுக்கும் என்ன உறவு?" கடினமான தொனியோடு.

"அவர் எனக்கு வேண்டியவர்". கீறல் விழுந்த குரலில் அதிர்ச்சியோடு.

"நான் யார் தெரியுமா உனக்கு?" திமிரிலும் வெட்கத்தோடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தெரியாது ஏன் இப்படிக்கேக்கிறீங்க?" விக்கல் தொனியோடு.

"என்னென்று உனக்கு குமரேசுடன் பழக்கம் வந்தது? நளினம் கலந்த சிரிப்போடு.

நின்றாள். "மொஸ்கோவிலிருந்து அவர்தான் என்னைக் கூட்டிவந்தார்?" இறங்கிய குரலோடு. கலாவின் சர்வாங்கமனத்தும் ஆட்டம் கண்டது. இமை ஓரங்களில் துளித்து நின்ற கண்ணீர் வெள்ளத்துடன் வாய் கதறியது.

"மொஸ்கோவிலிருந்து கூட்டி வந்தால் கண்–மண் தெரியாமல் நடப்பதா?"

கலாவின் வெப்பிசாரத்தைப் பார்த்து சுகந்தியின் கண்கள் விரிந்தன.

கலாவின் கதறல் வீதியோர மனிதரையும் சற்று தாமதித்து நிற்கவைத்தது.

"திரும்பவும் உன்ர கற்புக்குக் களங்கம் நேர்ந்தால்! அவன் நினைப்புக்கும் நிலைக்கும் யார் காரணம் கேட்பது...?"

"பெற்றவர்கள் கடனக்கிடனப்பட்டு புள்ள நல்லா இருக்குமே என்ற ஏக்கப் பெருமூச்சோடு உங்கள இங்கின அனுப்பிவைத்தால் கண்டவனையும் கண்டவுடன் காதலா வேண்டிக்கிடக்கு? அன்னபப் பொழிஞ்சு வம்பை தேடிவிட்டு தற்கொலை, சிசுகொலை, காதல் தியாகம் கண்றாவியென திரியவா போறாய்?"

பிரசங்கத்தின் பீச்சோடு ஒரு புயலைத் தள்ளி நின்று வீசிவிட்டு நிமிர்ந்தாள் கலா. பேயறைஞ்சுப் போய் நின்ற சுகந்தியின் எண்ணம் ஏதுமறியாத அபலையின் கோலமாய் குழந்தையைப் போல கண்ணீர் விட்டபடி விவரம் கேட்கும் மனத்துணிவு அற்றவளாய் வாய் முணுமுணுத்தன. "என்னக்கா...என்னக்கா சொல்லுறீங்க? எனக்கு தலை யெல்லாம் சுற்றுது அக்கா" என்று புலம்பி நின்றாள். சுகந்தியின் பாவத்தையும், குழந்தைத் தனத்தையும் கண்ட கலாவுக்கு தாய்மையின் தாற்பரியம் மேலிட்டது. அமைதியான குரலில் நறுக்கு தெரிக்க விவரத்தைச் சொன்னாள் கலா..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுகந்தி! நான்தான் குமரேசனின் மனைவி! எங்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்து–வளர்ந்து ஆறுவயதாகும் முன்னமே அந்த ஆண்டவன் என்னிடமிருந்து எடுத்திட்டான்." நெஞ்சுதாங்காத விம்மலோடு வந்து விழுந்தன சொற்கள்.

கலாவின் அடுத்த வார்த்தைகளை கேட்க முடியாத பயபீதியோடு குரல் சோகத் தீயில் கருகி உயிர் விட்டது. "அக்கா" என்று அலறியவாறு சுகந்தி இரு கைகளையும் விரித்து கலாவை கட்டிப் பிடித்து தேம்பி...தேம்பி அழுதாள்....

"கலா ஒரு விதமான செருமலோடு "சுகந்தி எங்கள் சோகக்கதைக்கு முன்னம் நாம் எடுக்கப்போகும் வேகக் கதைக்கு வருவோம்." சுகந்தி தன்னை சுதா கரித்துக் கொண்டாள். அவளது முகத்தில் தெரியும் ஆச்சரிய குறிக்கு விளக்கமளித்து பிற்பாடு குமரேசுக்கும் சமுதாயத்தின் அவன் போன்றவர்களுக்கும் கொடுக்கும் அடி முற்றுப்புள்ளியாக வேண்டும் என்ற துணிவும் துயர்களைந்த வீரமாக பரிணமித்தது.

கலா எடுக்கும் எந்த முடிவுக்கும் சம்மதம் தெரிவிப்பதுப் போலவே சுகந்தியின் பாவமும் பதைப்போடு கைக்கோர்த்திட்ட உணர்ச்சியோடு -நின்றன. "அக்கா நீங்கள் என்ன முடிவு எடுத் திருக்கிறீர்கள்?" இறங்கு தோணியோடு கேட்டாள். என் முடிவுக்கு முன் உன் முடிவில் தான் என் இறுதி அத்தியாயமே அசத்த உள்ளது என்றாள் கலா. புளியங்கோது உடைஞ்சது போன்ற சிரிப்போடு "பெற்ற தாய்போல் வந்து என்ர கற்பைக் காத்த பெண் தெய்வம் அக்கா நீங்கள். கலாவின் இரு கைகளையும் நெஞ்சு மேட்டின் மேல் வைத்தபடி அக்கா நீங்கள் வாங்க...அவன் முகத்துக்கு முன் காரித் துப்பிவிட்டு நான் கேக்குற கேள்வியைக் கேளுங்க. அந்த பொம்பள பொறுக்கி..." பெருங்குரல் உயிரையெல்லாம் ஒன்றுதிரட்டி வீரிட்டன. சுகந்தியின் மனத் தைரியத்தை கண்ட கலா சிறிது நேரம் சுவரோடு சாய்ந்து கொண்டாள்.

கண்சிமிட்டிக் கொண்டிருந்த மாலை நேரத்து மயக்கத்துக் காக மேகங்கள் மறைந்து கொண்டிருந்தன. குமரேசுக்கு மனவைி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக இருந்தேன் என்ற பெயரைவிட ஒரு பெண்ணின் கற்புக்கு காவலாக இருந்தேன் என்ற தாய்மையின் பாக்கியம் எவ்வளவோ மேல் என்ற நினைவோடு சென்றுக் கொண்டிருந்தாள் கலா. எந்த பெண்ணும் செய்யத் துணியாத தியாகத்தை கலாவின் வடிவில் காண்பதாக உணர்ந்துக் கொண்டாள் சுகந்தி. தேம்பி.. தேம்பி அழுதவள் அக்கா என்ர தாயின் மன்றாட்டுத்தான் உங்கள் வடிவில் இறைவன் அனுப்பியிருக்கிறான். கலா அவள்ர கண்ணீரை துடைத்தபடி முகத்தை நோக்கினாள். சுகந்தியின் செம்பஞ்சு கன்னத்தை சோக ரேகைகள் ஓடி வடிவழகின் வண்ணத்தை பாழ்படுத்தியது தென்பட்டது.

காரைவிட்டு இறங்கிய குமரேசு வீட்டு வாசல்முன் வக்கிரத்துடன் நிற்கும் கலாவையும்–சுகந்தியையும் கண்டான். பூகம்பம் ஒன்று புதுவடிவம் கொண்டு வந்து விட்டது. உணர்ச்சி நரம்புகள் ஒன்றோடொன்று முறுக்கிக்கொண்டன. எழும்பிய சொண்டுகள் சொருசிக் கொண்டன. முட்டவந்து நின்றவன்! இருவரதும் முகத்தின் பார்வையைச் சந்திக்கத் திராணியற்றவனாய் வெட்டுப்பட்ட தலையாட்டம் தலையைத் தொங்கப் போட்டான். சிகரட் நெருப்பு விரலைச் சுடுவது தெரியாத மரத்துப் போன உடலாய் உணர்வற்று நின்றான்.

சுகந்தியின் குரல் மேலேழுந்தது. "டேய் குமரேசு ஓடுகாலி இப்படியான தாய்மையின் இராக்கினிய விட்டுட்டு அலைறியே. நன்றி கெட்ட நாயே! இனிமேல் உன்ர முகத்தில் முழிப்பதே பெண்மைக்கு இழுக்கடா. இன்றோடு முடிந்தது உன் தொடர்பும் நினைப்பும்!" சுகந்தியின் அடிவயிற்று அலறலைத் தொடர்ந்து, கலாவின் குரல் கண்ணியமாக அதே வேலை ஆழமாக இதயத்தை ஊடறுத்திடப் பாய்ந்தது. இனிமேல் இவள் சுகந்தி என்னோடு தான் இருக்க போறாள்! உன் உறவையும் திருமண பந்தத்தையும் அறுத்து விட்டேன். வெகு விரைவில் விவாகரத்து நேட்டீஸ் உன்னிடம் வந்து கிடைக்கும். இந்தா உன்வீட்டு சாவி!" என்று அவன் முகத் தில் தூக்கியெறிந்து விட்டு! "மானம் ரோசம் இருந்தால் என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடி அலையாதே. இனிமேலாவது மனுசனாக நடந்துக் கொள்"

ஒரு காமுகனிடமிருந்து விடுதலைப் பெற்ற மகிழ்ச்சியோடு இரண்டு பறவைகள் சுதந்திரமாகப் பறந்து கொண்டிருந்தன.

இரும்பு கூண்டுக்குள் அடைப்பட்ட மரண தண்டனை கைதிப் போல் கலங்கி நின்றான் குமரேஸ்.

பாரிஸ் ஈழநாடு
29.04.1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்மேல் ஆணையாக

***1986 ஆனிமாதம் மண்டைத்தீவுக் கடலில் நடந்த உண்மைக் கதை***

குறுக்கும் நெடுக்குமாக சந்துகள் நிறைந்த தெருக்கள். குருநகரின் எழிலுக்கு அழகு சேர்த்தது தெருக்கள்—சந்துகள் திருப்பங்கள். முன்பின் தெரியாதவர்கள் இத்திருநகருக்குள் வந்தால், வலது பக்கமா இடதுபக்கமா எந்தப்பக்கத்து சந்து வழியே திரும்புவது என்ற குழப்பம்! திறமையான சாமர்த்தியசாலிகளாலும் புரிந்து கொள்ள முடியாத குழப்பமுள்ள தெருக்கள், சந்துகளில் எல்லாம் பிணம் தின்னும் கழுகுகளின் (ராணுவம்) நடமாட்டம் கவச வாகனங்கள், ஜீப்பு வண்டிகளின் இரைச்சல் ஓசைகள். இரவு முழுவதும் அங்குமிங்குமாக இரைந்து அமைதிக் கொண்டது.

விடிவெள்ளி விண்ணில் நின்று கண்சிமிட்டியது. வெள்ளாப்பு நேரமும் வெளுவெளுத்துக் கொண்டது. வேதனைக்குரிய உடல் ஒன்று சின்னப்பு வீட்டு வேலிப் படலையைப் பிடித்துக் கொண்டவன் உரத்த குரலுக்கு நாய்களின் குரைச்சலும் கோரஸ்பாடிக் கொண்டன. "டேய் சின்னப்பு... டேய் சின்னப்பு...தொழிலுக்கு நேரமாச்சு. கெதியாய் எழும்பி வாடா! ஆமிக்காரனெல்லாரும் போயிட்டாங்க. கெதியா வாடா இரண்டு மூன்று தடவைகள் உரத்து கத்திக்கொண்டான்.

"வர்ரேன்டா போடா" என்ற குரல் வந்தது. பருத்த உடல் வலப்பக்கமாக ஆடி அசைந்து திரும்பி குச்சு ஒழுங்கைகள் வழியாக தெருக்கள் ஏறி நூறு யார் இருநூறு யார் என்ற அளவில் உள்ள வீட்டுப் படலைகள் முன் நின்று குரல் கொடுத்துச் சென்று கொண்டே இருந்தான் முடியப்பு.

கரவலைத் தொழிலுக்கு வரும் தொழிலாளர்களை விடியல் இரண்டு—மூன்று மணியளவில் ஆள் எழுப்புவது வழக்கம். கரவலைத் தொழில் ஊரில் வாழ்ந்த மூதாதையர்களின் வீரம் – விவேகம் – விடாமுயற்சி தோள் வலிமை கொண்டு செய்யத் தொடங்கிய ஆதிபத்திய தொழில் விஞ்ஞான கருவிகள் தோன்றியிராத காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம்–நேரம் கடல் காற்று நீர் நிலமைகள் புரிந்து அனுபத்தோடு செய்த தொழில்தான் கரவலைத்தொழில். படகில் இருந்து "டேய்! பசங்கள் மன்றாடிமார் *(மன்றாடிமார் என்பது தொழில் அனுபவ சாலிகள்)* எல்லாம் வந்துவிட்டாங்களா?"

கரையிலிருந்து "ஓமடா எல்லாரும் வந்திட்டாங்க". கட்டு மடிக்காரனையும், தண்ணீர் (குடிதண்ணீர்) செலவுக்காரனையும்தான் இன்னும் காணயில்ல" என்று குரல் கொடுத்தான் முடியப்பு.

"டேய்! அவங்க வெள்ளையன்ர கடைக்குகிட்ட வந்து கொண்டு இருக்கிறாங்க. நீங்கபோய் படகில ஏறுங்கடா" இப்படியாக சின்னப்பு வரவு சொல்லிவிட்டு பக்கத்தில் திரும்பிப் பார்த்தான். தம்புதான் தென்பட்டார். "டேய் தம்பு இண்டைக்கு எங்க ஓடி வலை வைப்போம்?" என்று கேட்டுவிட்டு நகர்ந்தார்.

"கடல் இருக்கிற நிலையில இந்தப் பாழாப்போன நேவிக் காரன் விடவாபோறான்! அகல ஓடித் தொழில் செய்ய.." என்றவாறு ராகம் பாடினார் தம்பு. "மண்டைத் தீவு பக்கமாக போனால் எப்படி?" என்றார் மீண்டும் தம்பு. "நீர்பாடு நல்லாத்தானிருக்குது. டேய் தம்பு வள்ளங்களும் தேவையேன்? கல்லுப்பாடு வள்ளங்கள் எடுப்பதும் இப்ப கஷ்டம் அப்ப என்னடா செய்வோம்?"

"என்னத்திற்கும் மன்றாடிமாரையும் கேட்போம". சின்னப்பும் ஒரு மன்றாடிதான். இருந்தும் மற்றவர்களுடன் கலந்து பேசி முடிவு செய்வது நல்லதுயென்ற நல்லகுணம். படகு பாலத்தைவிட்டு அகன்றது. யக்கோவே!

புதுமைமாதாவே! தொழில்பாட்டைத்தா.. இயந்திர இரைச்சல் ஓசையுடன் கோரஸ் பாடியது."படகு கடல் மாரிமேல் பயணம்". மணல்பரப்பில் பனங்கூடலுக் கிடையே இருள்கிழித்த ஆதவன் வரவு நீலக்கடலின் நிறத்தை நிர்மலமாகக் காட்டியது. அலைகள் கிழித்து நுரைதள்ளிவந்த படகும் மண்டைத்தீவு 'முனை' கிட்டியதால் தன் மதிப்பிற்கு ஏற்ற அளவு ஆழத்தில் 'நங்கூரம்' இடப்பட்டு லாவி நின்றது.. படகிலிருந்த தொழிலாளிகள். கட்டுமடி, கம்புகள், குடி தண்ணீர், மடுப்புபொட்டி, விடிசச்சோறு என்பனவற்றை எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு இறங்குவதில் அமாக்களப்பட்டுக் கொண்டனர். கடலில் கால் வைக்கும்போது இன்றைய உழைப்பின் வெகுமதியை பெறு மதியாகத் தந்துதவு கடல் அன்னையே!" என்று மன்றாடிக் கொண்டார்கள்.

வலைகளைப் போடுவதற்கான முன் ஆயத்தங்கள் தடபுடலாக நடந்து கொண்டிருக்கின்றது. மன்றாடிமாரின் நிர்வாகம் நீர், காற்று நிலமைகளை ஆராய்ந்து படகைத் திருப்பக் கூவிநின்றார்கள்.

"டேய்!.. மவுன் கல்லுப்பாடு கவனமாகப் பார்த்து அடி. அங்கு மிங்கும் பார்ப்பதுடன் கரையில் நிற்கும் எங்களையும் கவனி.." இப்படியாகப் பலவிதமான அறிவான அலட்டல்கள் மன்றாடிமாரிடம் இருந்து பறக்கின்றது. இடுப்புக்கும்–முழங்காலுக்கும் இடைப்பட்ட தண்ணீரில் முப்பதுக்குட்பட்டவர்கள்... வலையைவிரித்து... மடியை இறக்கிவிட்டதற்கான சைகை.

படகின் அனியத்தில் நின்று கொண்டவனால், வெள்ளைச் சறத்தால் வீசிக் காட்டப்படுகின்றன. எல்லோருடைய நாரிகளிலும் பளங்கயிறு சுற்றிக் கட்டப்படுகிறது *(வலையைக் கூட்டி இழுக்கப் பாவிக்கப்படுவது)* ஒரு சில சிறுவர்களைத் தவிர படகும் வலையை இழுக்கத் தொடங்கியது. முப்பது நிமிடங்களின் பின்பு படகும் கரை வந்து சேர்ந்தது. இருபக்க வலைகளையும் சரிசமமாக பிரிந்து நின்று இழுக்கத் தொடங்கினார்கள்.

அடிமேல் அடி வைத்து இழுக்கும் அழகையும் வீரத்தையும் என்னென்று எழுதுவது..கடலும்–காற்றும் இசை முழங்க கவிதைகள் பிறக்கின்றன. ஏலே... ஏலே என்ற கீதத்தில் வீரம் விரைந்து செல் கின்றது. அலைமேல் அலையாக அவர்கள் உள்ளத்து உணர்ச்சிகள் வலை முடிவைத்தொட அம்பாவின் ஆவேசம் அலையையும் மிஞ்சுகின்றது. மீன்மடி கிட்ட வந்துவிட்டதாலும் "மேலாப்பாச்சி" இரண்டு பக்கத்தவர் களையும் பொதுவாக லாவிவிட்ட பாங்கு மீன் கூடுதலாக மடிக்குள் பிடிபட்டுவிட்டதையே காட்டுவதால் அவர்களின் வீரம் விரைகின்றது....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிமைக்கும் நேரத்தில் அலையைக் கிழித்துக் கொண்டு உறுமல் ஓசையுடன் பீரங்கி பூட்டப்பட்ட மூன்று படகுகள் நாட்டின் முதுகெலும்புகள் முன் லாவி ஆடி நின்றன!

கவிதைபாடி கவலையை மறந்து வீரமாக விளையாடிய கைகளும் கால்களும் சோர்வுற்றது. இதயம் படார் படார் நாடி நரம்பு களின் துடிப்பை...? ஒரு குவளைச் சோற்றுக்காக உழைக்க வந்த உதிரம் சிந்தும் உழைப்பாளிகள் உலகத்தில் உள்ள தெய்வங்களை யெல்லாம் நினைக்கத் தொடங்கினர். மனித வாழ்க்கைக்கு அப்பால் ஒரு மிருக வாழ்க்கை வாழ்பவர்கள்தான் இந்தக் கறுப்புச் சட்டைக்காரர்கள் *(சிறிலங்கா கடற்படையின்மறு ஆடைதான் முகம் மறைந்த கறுப்புச்சட்டை)*

மூன்று படகிலும் துப்பாக்கிகளை நீட்டியபடி நின்று கொண்டார்கள். ஒருவன் "அடே இங்கால வாங்கடா..." என்றான்.

"ஐயா! எங்களை என்ன செய்யப் போறாய்?" என்று அறுபது வயது மதிக்கத்தக்க குரல் ஒன்று நாத்தலம்ப கத்தியது. மிருகங் களுக்குத் தெரியுமா வயசும்—மரியாதையும் இக்குரல் தனிய, இன்னொ ருவன் வரிசையாக வந்து முழங்கால் அளவு தண்ணீரில் நிற்கும்படி உறுமினான்.

வலைகளை பிடித்த கைகள் மார்போடு ஒட்டிக் கொண்டது. உழைப்பாலும் மரியாதையாலும் உயர்ந்து நின்றவர்கள் அன்னியனி டம் உயிர்ப்பிச்சை கேட்டு நின்றார்கள். படகில் நின்றவாறு இருவர் "அடோ கொட்டியா...?" என்றார்கள்.

நிராயுத பாணிகளாக நின்ற தொழிலாளர்களால் அந்த நேரம் என்ன சொல்ல இயலும்..?

"இல்லை ஐயா! நாங்கள் தொழிலுக்குத்தான் வந்தோம்." எல்லோரும் ஒருமித்துக் கத்தினார்கள்.

அவன் "நம்மிள சுடடோடத்தானடோ வந்தன்?" தமிழின் தரம் கறுப்பு அங்கியணிந்தவன் நாவில் பிரண்டு தவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீரில் நின்ற ஆத்துமங்கள் குளறியழுதனர். "இந்தக் கடல்மாரிமேல் ஆணையாகச் சொல்கின்றோம். நாங்கள் தொழிலுக்குத் தான் வந்தோம்." என்றனர்.

உடல்—உள்ளம் உயிர் மூன்றுமே அடைக்கலத்தைக் கேட்டன. அவர்கள் மனசு சினத்தால் சினந்தது. மிருகச் செயலுக்கு ஆயத்த மானார்கள்.

பற்கள் கெட்டிக் கொண்டன. கண்கள் குளிரில் விறைத்தன அம்மா.. அம்மா என அன்னைமடி தேடியது பச்சிளம் பாலகர் இருவர்குரல். பன்னிரண்டு வயது நிரம்பாத ஜெயகாந்தன்—யேசுராசா என்பவரின் அவலக்குரல் தேனாய் அவர்கள் காதுகளில் இனித்தது. "அடோ! பொடி கொட்டியா".. என்றவாறு மனிதத் தன்மையற்றவன் துப்பாக்கிய உயர்த்தினான் மூன்று படகில் நின்றவர்கள் துப்பாக்கி களும் உயர்ந்தன.... சரமாரியாக தோட்டாக்கள்... அந்தப் பிஞ்சு உடலையும் துளைத்தது. முப்பது உயிர்கள் அல்ல... நாட்டின் முதுகெலும்புகள் முறிக்கப்பட்டது. கடலையே நம்பிவாழ்ந்த உயர்ந்த தொழிலாளிகளின் உயிர்கள் கடல்மாரி அன்னையின் மடியில் சங்கமமாகியது. இரத்த சாட்சியங்களாக ஒவ்வொரு நிகழ்வுகளும் பதிந்து கொண்டிருக்கும் பாச பூமியின் நீலக்கடலே சிகப்பாச் சுடர்ந்தது.

இத்தனை கொடுமைகளுக்குள்ளும் ஓர் உடல் நீரில் மூழ்கியது. எங்கே போவது மூச்சைவிட எப்ப எழும்புவது என்ற பயத்தில் சுழியோடிக் கொண்டிருந்தான் முடியப்பு. "அந்தக் கடவுளுக் கும் கண்ணில்லையா?" கரையொதுங்கிய பன்டி பிரண்டு—பிரண்டு அலையோடு அவதிப் பட்டது... போன்ற பதகழிப்புடன் முடியப்பு கரையில். எப்படி கடற்படையினர் கண்ணுக்குத் தெரியவில்லை என்பது வியப்பாகவே உள்ளது! துடித்தெழுந்தான்.

மணல்பரப்பில் கால்வைத்த முடியப்பு நாக்குத் தெறிக்க கால்பிடரியில் அடி விழுந்து — எழுந்து ஓடினான். ஊருக்குள் எப்படி உள்ளிட்டான் என்பதை நினைக்கும்போது விழிகள் பிதுங்கு கின்றன! மண்டைத்தீவு மக்கள் சிலரை அண்டி ஊருக்குச் செய்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு செல்லத் துடித்தான். சனங்களும் பதறித் துடித்து அவனுக்கு வாகன உதவியும் கட்டிய கச்சையின் கோலத்தை, மாற்ற உடையும் வழங்கினார்கள். ஊர்ந்து சென்றதா… கார் அல்லது பறந்து சென்றதா? நிமிடங்களில் ஊருக்குள் முடியப்பு! அவனது பதகழிப்பு பார்த்து நின்றபோது நெஞ்சே வெடித்துவிடும்!… கோரக்காட்சியின் மாட்சி ஊரெங்கும் திரைப்படமாக ஓடிக்கொண்டிருந்தது. அவன் கண்ணால் கண்ட நிகழ்ச்சி அவனுள் நிலைத்து நின்றது. உடலின் நடுக்கம் ஊரவர்முன் வேகமெடுத்தது. இந்நேரம்.

"டேய் முடியப்பு! என்னடா நீ மட்டும் தப்பி வந்துள்ளாய்?" கிழவியின் கேள்வி அவனைச் சுற்றி நின்றவர்கள் எல்லோரையும் திகைப்படையச் செய்தன. திரும்பவும் பேசினாள்! கடவுள் உன்னைக் காப்பாற்ற வில்லை! 'இனிமேல் நீ புலியாக மாறி விடு. திரும்பவும் பேசினாள்! கடவுள் உன்னைக் காப்பாற்றவில்லை! "இனி மேல் நீ புலியாக மாறி சிங்களவனை கிலிகொள்ளச் செய்யவே உன்னை உசிரோடு விட்டுயிருக்கிறான்". அறுபது வயதுக்கு மேல் இருக்கும், கிழவியின் நடுக்கத்தோடு வேகமாக வந்துவிழுந்த வார்த்தைகளைக் கேட்டவர்கள் கண்களும் சொண்டுகளும் செருகிக்கொண்டன. என் னடா, எல்லோரும் பேசாமல் பறையாமல் நிக்கிறீங்க? போங்கடா… போய் ஆகவேண்டியதைக் கவனியுங்கள். கொடும்பாவி நேவிக்காரன் அநியாயமாக கொண்டுட்டானே! வயித்துப் பிழைப்புக்காக தொழி லுக்குப்போன என்ர ஊர் ராசக்கள நாயைச் சுடுகிறமாதி சுட்டுப் போட்டானே. இவன் நல்லா இருப்பானா? கடல் மாரித்தாய் அலைபோல் குமுறி எழுந்து விழுங்காமலா விடுவாள், காலம் பதில் சொல்லும்.. நிச்சயம் என்ர வீரர்கள் இதற்கு பதிலடி கொடுப்பாங்க புள்ளைகள். அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும' என்பது பொய்! எங்கட புள்ளகள் உடனுக்குடன் அறுப்பாங்க பாருங்க. கிழவியின் வேகத்திலும் ஒவ்வொரு சொல்லும் சுற்றிநின்றவர்களின் தேகத்தைப் புல்லரிக்கச் செய்தது. உணர்ச்சியில் உயிரைக் குடித்தவன் குரவலைய அறுக்கத் துடித்து நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்ப்பெரியவர்கள், இளைஞர்கள் பரிதாபமான தோற்றத்துடன் உடல்களை மீட்கும் பணியில் தீவிர பங்குகொண்டார்கள். கொளுத்தும் வெய்யில் என்றும் பாராது மக்கள்வெள்ளம் பாலத்தில் நின்ற வண்ணம் கடலையே வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். உச்சச்சூரியன் சரிஞ்சு மேற்கால மேகங்கள் மழை வருவதற்கான மெல்லிய இருளை வீசிநின்றன. அங்காங்கு கூட்டம்.. கூட்டமாக பலவிதமான வீரம், சோகம், தவிப்பு, அழுகை நிறைந்த பல்லவிகள் பறந்துகொண்டிருந்தன. குளிர்காற்று வீசுகின்றது–மெல்லிய அலையின் ஓசையும் அலைமக்கள் இறப்பைத் தாங்கமுடியாது குமுறுகின்றது. படகுகளின் இரைச்சல் ஓசைகேட்டு அலைகள் பாலத்தோடு மோதி.. மோதி மடிந்து ஒப்பாரி பாடுகின்றது. அடுக்கடுக்காக படகுகள் வந்து கரைதட்டியது! மக்கள் வெள்ளம் முட்டிமோதி தள்ளாடி நின்றன. அழுகுரல்கள் வானை முட்டியது.

படகுகளின் வங்கு இடைவெளி ஒவ்வொன்றுக்கிடையிலும் உருக்குப்போன்ற உழைப்பின் உடல்கள் வளர்த்தப்பட்டுகிடந்தன. காடையரின் கோழைத்தன ஆயுதங்கள் விளைவித்த தழும்புகள் கண்ட சனங்களின் கண்கள் அகல விரிந்து பெருமூச்செறிந்தது. கோடரிக் கொத்து, கத்திக்குத்து, இரும்புப்பார் தலையடி, துவக்குச்சூடு ஓ! தமிழா நீ பட்ட பாடுகளில் இப்படியொரு கோரணியவாதையும் உண்டா? வேதனையைத் தாங்க முடியாத மேகமும் கண்ணீர் சிந்தியது. மேலும் அலைகள் குமுறிக் கொந்தளித்தன.

செய்திகொண்டு வந்த நேரத்திலிருந்து குந்தி கொண்ட இடத்தைவிட்டு அசைவற்று கண்களும் கண்ணீரின்றி பாலையாகி விட்டது. பூவரசு மரத்தோடு உடல் ஆட்டமின்றி முடியப்பு சாய்ந்திருந்தான். இந்நேரம் மேரியம்மாக்கிழவி "தம்பி முடியப்பு எழும்பிவாடா உன்ர சொந்தங்களக் கொண்டுவந்து வாசக சாலையில் வளர்த்தியிருக்கிறாங்களாம். போய்ப் பார்ப்பேயாம்". இத்தனைக்கும் இறந்து கிடப்பவர்களில் இருவர் மேரியம்மாக் கிழவி பெற்ற இரு பெண்களின் கணவன்மார் உலகிற்குக் காட்ட அழவில்லை. அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுகள் அழுதன. கண்கள் சிவந்து அகல விரிந்திருந்தன. அவள் அழவில்லை அழவும் பழகவில்லை.

"ஆச்சி என்னால முடியாது. அந்தக் கன்றாவியப் பார்க்க என்னால முடியாது குலறி அழுதான்"

"டேய் மகனே! எது நடக்கக்கூடாது என்று நினைக் கிறோமோ. அது நடந்துவிடுகின்றது. இது நம்மஊரில மட்டுமல்ல எல்லா இடமும் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. இங்கு கூட்டமாக நடந்திட்டு. மற்ற இடங்களில் திக்குத் திக்காக நடக்குது. நாம் என்றும் அடிபடுபவனாக இருக்கமாட்டோம். அடிக்கு அடி கொடுப்பவனாக மாறிவிட்டகாலம் நடக்குது. எழும்பி வாடா." கிழவியின் ஆறுதல் வார்த்தைக் கேட்டவன் அவள் அணைப்போடு! மெதுவாக நடந்து சென்றார்கள்.

ஊரின் நடுநாயகமாக விளங்கும் குருநகர் சன சமூக நிலையத்தில் அடிச்சுவட்டைப் படிப்பித்த அறிவகத்தில் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்ட முப்பது ஆத்துமங்கள் வரிசையாக உறங்கிக் கொண்டிருந்தன. கடல் உறங்கினாலும் கண்ணுறங்காது உழைத்த உத்தமத் தொழிலாளிகள் வாய்பிளந்தபடி தூங்கிக் கொண்டாயிருக்கின்றார்கள்? போர் முடிந்த களக்காட்சி போல் காட்சியளித்தது. இறப்புச் செய்திகள் பலவாறு பறந்து கொண்டும் – பதுங்கிக் கொண்டுமிருந்தன. முப்பது உயிர்களை இழந்து தவிப்பதைக் காட்டிலும் படுமோசமான செய்திகள் ஆட்சியாளர்களின் அடிவருடிகள் மறைக்கப்பட்டு மறுக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

இறந்த உடல்களுக்கு அஞ்சலி செலுத்த வருபவர்– போவோ ரோடு கதையளந்து பலவிதமான பழமொழிகளை அள்ளிவீசிக் கொண்டிருக்கின்றாள் கிழவி. இறந்த செய்திகேட்டு திடீரென பெரும்புயல் வீசி வேரோடு சாய்ந்த மரம்போல். கணவனை இழந்து, தந்தையை இழந்து, மகனை இழந்து, சகோதரனை இழந்தவர்கள் தலைமாட்டிலிருந்து கதறியழுகின்றனர். முப்பது உயிர்களை உறங்கவைக்க ஆறடிநிலம். "எதிரிகள் கொடுத்த காயம் நாளை அவர்களுக்கு நிச்சயம் பாயும் நியாயம்". பிறந்த மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றோ—நாளையோ நல்லதோர் இலட்சியத்திற்காக வாழ்ந்து இந்த மண்ணிற்கே சொந்தமாகிவிடுவது உண்மைகள்" இவர்கள் இறப்பு....

நீண்ட கடற்கரைவீதி வெள்ளைப் பூக்களாக பூத்து நிற்கின்றது. நின்ற பூக்கள் முகாரி ராகம்பாடி நகர்கின்றது. நீளமான ஊர்வலம். மண்ணின் மைந்தர்களுக்கு "நினைவுக்கல்". அதுவே "நிலையான நினைவுச் சின்னம்".

நம்பிக்கை நாற்றுகள் *(சிறுகதை தொகுதி)*
ஐரோப்பிய சிறுகதை எழுத்தாளர்கள் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளித்தட்டு

சோழகக் காற்றின் வேகம் வெட்கையான புழுக்கத்தோடு கைகோர்த்து நின்றது.

ஊர்வீட்டு வளவுகளில் தென்னைகளும், வேம்பு களும், வேலி பூவரசுகளும் சோர்வை முறிக்கின்றன. எதிரிப்படை வான்கழுகுகளின் எச்சங்களின் கந்தநெடிப்பின் புகையினுள் போர்த்தப்பட்ட வளங்கள் புல் பூண்டுகள் இரண்டு ஒன்றாகத் தலைக்காட்டுகின்றன. வீதிக்கு வருவோர் நெஞ்சை நிமிர்த்தி நாரிய அமர்த்தி ஜீவ களையற்றவர்கள் சிறிசாகப் புன்னகை சிந்திடப் பேசுகின்றார்கள். அவர்கள் தலைகளோ. சூப்பி எறிஞ்சு ஆடிமாதத்து வெய்யிலில் காய்ந்த பனங்கொட்டைத் தும் பாய் வரண்டுகிடந்தன தலைமயிர்கள் பசிக் களைப்பும், பயமும், பதற்றமும் நிறைந்த சனங்கள் கனதியாகத் தலைகாட்டி வீதிகளெங்கும் நடந்து மறைந்து செல்கின்றனர். தொடரான ஷெல் சத்தங்களும்,விமானக் குண்டு வீச்சுக்களும் அடங்கியிருந்த சமாதானப் பேச்சுவார்த்தை நேரம்

இளம்வட்டங்கள் தங்களுடைய விளையாட்டுக் களுக்குத் தூது கொண்டுசெல்ல உடைந்துகிடந்த வீடுகள்—பதுங்கு குழிகளி லிருந்து சின்னக் குருவிகள் சிறகடித்துப் பறக்கின்றனர். பெரிய பறவைகள் குஞ்சு களுக்கும் தங்கள் தேவைகளுக்கும் இரைதேடி ஒட்டி ஒடுங்கிப்போன அடிவயித்தைப் பிடித்து நகர்கின்றனர். இள வட்டங்கள் அமைதியில் விழித்த விழிப்பு தங்களுடைய வீர விளை யாட்டுக்கு ஏற்பட்ட கழிப்பான பெருமூச்சு காற்றோடு கலந்திட நிற்கின்றனர்.

ஊரில் விசாலமான ஒழுங்கை பலகாலம், பாய்ந்து சுதந்திரமாக கிளித்தட்டு விளையாடிய ஒழுங்கை, நீண்டு அகன்ற அந்த ஒழுங்கை மணல்பரப்பில் பாதத்தால் இழுத்தமைய மூன்று தட்டுக்கோடுகள் கீறி முடிந்ததும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலிப் பூவரசோடு சாய்ந்தான் பாலன். சிறிதுநேரம் தட்டுக் கோடுகளை வெறிச்சோடிப் பார்த்தாள்!

"இண்டைக்கு இத்தன பேராவது வருவாங்களாடா தாசன்" என்றான்?

அவனும் பதிலுக்கு "வந்தாங்களென்றால் விளையாட்டுத்தான்".

எழும்பிய ஏக்கத்தோடு பாலன் யாரையோ எதிர்பார்த்தவனாய் தன் பார்வையை திருப்பினான்! தாசன் அவனைப்பார்த்துச் சிரிச்சான்.

மனம் ஒன்றையும் கண்கள் ஒன்றையும் தேடி அலைக்கழித்த மனமாக இருந்த பாலனைத் தட்டினான் தாசன்.

திடுக்கிட்டவன் "என்னடா பாலன் எல்லாரும் வந்திட்டாங் களா?"

"அது கிடக்கட்டும் நீயென்ன தண்ணிப்பைப்பையே கண் வெட்டாமல் பார்த்தபடி இருக்கிறாய்?"

வெட்கத்தோடு "உனக்குத் தெரியாமக் கேக்கிறாய்?"

தேன்கூட்டு ஈக்கள் போல் ஒவ்வொருத்தரும் வந்து அவன் பக்கத்தில் குந்திக்கொண்டார்கள். பாலன் வந்து குந்துபவர்களைப் பார்த்து பல்லிழிச்சுவிட்டு பார்வையை பைப்படி நோக்கித் திருப்பினான்.

"என்னடா மச்சான்! இன்டைக்கு இவ்வளவு பேர்தானா?" சலிப்புடன் கேட்டான் யோசப் பாலன் மௌனித்திருந்தான்.

அவனது தோல்மூட்டை பிடிச்சு உலுப்பியபடி நீதான்ரா தாச்சி உன்ரபக்கத்து ஆட்களாவது வருவார் களா? என்றான் தாசன்.

"உன்ர பொன்னான வாயைத் திறவன்ரா பாலன்" என்றான் பெரியவன். திரும்பவும் அவன் தோள்மூட்டை உலுப்பிவிட்டு பயத்தோடு நகர்ந்தான் பெரியவன்.

ஆத்திரத்தோடு எழுந்த பாலன். "உங்கட ஆட்களையே இன்னும் காணயில்ல ஏன்ரா! என்ர பக்கத்து ஆட்களப் பத்திக் கேக்கிறா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலனின் பதகழிப்பு யாற்றையோ தரிசனத்தின் பாவமாக யிருந்தது. "என்ரா எங்கடபக்கம் 'சைலா' தானே இன்னமும் வரவேணும் யோசப்."

"அந்தா அவளும் ஓடி வாறாள்" என்றான் தாசன்.

இளம்சிட்டாய் சிறகடித்துப் பறந்துவரும் பச்சைக் கிளியை இமைவெட்டாது பார்த்தவண்ணம் நின்றான் பாலன்.

"டேய் மச்சான் நாங்கள்தான் தட்டுக்குள் இறங்கிறபக்கம் நீங்கள் தட்டுக் காக்கிற பக்கம்" என்றான் பாலன்.

"இது என்ன முறை" என்றான் தாசன்.

"இந்தா காசு சுண்டு யாருக்கு அம்மா விழுகுதோ அவங்க இறங்கட்டும்" என்றான் யோசப்.

"முறைய ஏன் மாத்திறீங்க. இங்க கொண்டா காசை நான் சுண்டுறேன்."

காசு பொதுவானவர் ஒருவரால் சுண்டப்பட்டது.

பாலன் அம்மா கேட்டான். அவன்பக்கமே அம்மா விழுந்தது. திரும்பி அங்குமிங்கும் பாத்தவன் "என்னடா தாசன் ஆட்கள் கூடியிருக்கு?"

விழிகள் மேலெழும்பப் பார்த்துவிட்டு "கூடினால் என்ன? தட்டைக் கூட்டினால் போச்சு" என்றான் தாசன்.

நடு வெளியில் கிடந்த நாய்களத் திரத்த கல்லெறிகள் விழுந்தன. சுருண்டு கிடந்த நாய்கள் குரைக்க இசக்கமற்று அடித்தொண்டையால் அலறின. கல்லெறியத் தாங்கமுடியாது ஒட்டிய வயிற்றைச் சுமந்து எலும்புகள் புறப்பட ஓட இசக்கமற்றதுகள் வேலியோரமாய் சுருண்டு விழுந்தன.

மேலும் பாதத்தால் அமைக்கப்பட்டிருந்த அதன் அகலப் பக்கத்திலிருந்து மற்றோர் அகலப்பக்கத்திற்கும் நட்டநடுவில் நெடுக் காகவும் ஒரு தவணைக்கோடுகள் இழுக்கப்பட்டன. அதன் பாத்திகள் நாற்கோணமாய் அமையுமாறு அந்தந்தத் தவணைக் கோட்டிலிருந்து குறுக்காகத் தட்டுக்கோடுகள் இழுக்கப்பட்டன. மேலும் அணியினர் எண்ணிக்கைக்கு ஏற்ப தட்டுகள் பாதத்தால் இழுத்தமைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புழுதி கிளம்புகிறது ஒழுங்க வெளியில் நின்றவர்கள் முகத்தில் புளுகும் பழுதில்லாப் புன்னகையும் வீசிநிற்கின்றன. தேகம் எங்கும் ஒட்டிக்கொள்கின்றன. சந்தனமாக அவர்கள் அதைத் தழுவிக் கொள்ளும் காட்சி இன்னும் என்ர மனசவிட்டு அகலவில்லை.

விளையாட்டுத் தொடங்கியது தட்டுப்புகுதல் பக்கத்தின் தாச்சியாக நின்றான் பாலன். கிளி விளையாட்டில் படுசூரன். மூலை குத்திப்பாய்வதில் பாலனை வெல்ல யாருமே இல்லை. எதிரணியைத் தோற்கடிப்பதிலும், அவன்ர பக்கவெற்றிக்கு வீரனாவன் அவனது சாதுரியத்தில் எதிரணியினர் மிகவும் சங்கடமும் படுவார்கள்.

தட்டுக்குள் இறங்குபவரை மேற் செல்லவிடாது தட்டுத்தடுத்தல் பக்க அணியினருடன் விளையாடினாள் சைலா.

பாலனும் சைலாவும் பள்ளிக்கூடக் காதலர்கள் என்றுதான் சொல்லலாம். அவர்கள் இளமையான நினைவுகள் மேலும் தொடர் கின்றன.

கிளித்தட்டில் மூன்றாவது தட்டுமறித்தல் கோட்டில் நின்றாள் சைலா.

"டேய் பாலன் உன்ர விளையாட்டைக் காட்டடா" என்றான் மரியான்.

"கிளி இறங்கினால்தான் நமக்கு மரியாதை" என்றான் ஜெயந்தன்.

"இந்தப் பொட்டச்சிகள் கூடின பக்கத்தில் தோத்திட்டா நமக்கு மரியாதையில்ல!" என்றான் பாலன்.

ஓமடா ஓம். நீங்க கவனமாக வெருட்டிப் பாயுங்கடா என்றான் யோசப்.

ஜெயந்தா நீ என்னோட வரப்பார்.

டேய் மச்சான் தாச்சி வாரான்ரா நடுக்கோட்டால

ஜெயந்தனின் கையைப்பிடிச்சு இழுத்து தன்ர நெஞ்சோடு சேர்த்துக் கொண்டான் பாலன்.

இரண்டாவது தட்டுக்குள்ள நின்ற பாலன் மூன்றாவது தட்டுக்குள்ள ஏறிவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைத் தடுத்து நின்றாள் சைலா.

சிறு இடைவெளி நேர்ந்தாலும் அவன் தப்பியிடுவான் என்ற பய வைராக்கியம் அவள்ர மனசத் தொட்டது. இப்பபார் அவனைத் தொட்டு தோற்கடிக்கிறேன் என்ற வீராப்போடு அங்குமிங்கும் அசைந்து நின்றாள் சைலா.

பாலன் இருபுற நெடுவரம்புக் கோட்டிற்கப்பால் கால் வைக்காமல் நடுவரம்புக்கோட்டால் ஓடிவரும் தாச்சியின் பாச்சலைக் கவனித்து நின்றவன் சைலாவின் கண்களுக்குள் தன்னைப் பார்த்தான். இருவர் மூச்சும் முகத்தில் பட்டு காதல் சுகராகம் பாடியது. மனங்கள் இரண்டும் மயக்கும் மாலைத் தென்றலின் தெள்ளு தமிழின் இனிய இன்ப பாவத்தில் துள்ளும் உள்ளமாய் உணர்த்தி நின்றன. விழிகள்பாடிய கதைகள் காற்றில் கலந்து சொற்ப நேரத்தில்.

"டேய் பாலன் நான் கிளி இறங்கியிற்றேன்... கிளி இறங்கி யிற்றேன்" என்றபடி கைதட்டி கரகோசம் செய்தான் ஜெயந்தன்.

பாலன் சைலாவைப் பார்த்தான். அவள் இதழ் திறந்து இனிதான புன்னகை சிந்தினாள்.

"இதுகளப் பார்க்கிறப்போ எவ்வளவு சந்தோசமாகயிருக்கு. எங்கட அயலட்டப் பொடி, பொட்டைகள், சிறுசுகள்கூட நின்று ஆசையோடு பார்க்குதுகள். இந்தப் பேச்சுவார்த்தை இப்படியே நீடிச்சு நல்லபடியா முடிஞ்சுது என்றால் அந்த சந்தோசத்தில சனமெல்லாம் மறுபுறப் பெடுத்த மகிழ்வடைவார்கள். இல்ல இந்தவிடிவிற்கும் வெள்ளிடிவிழுந்தவன் அந்த அழிவான் எப்ப தலையிடியக் கொடுக்கப் போறானோ தெரியயில்ல. பேச்சுவார்த்தை யென்று எங்கட பொடியங்களும் அமைதியாக போச்சாங்க. இந்த வெளியில நாங்க ஆடாத ஆட்டமா. கிளித்தட்டு, கிறிலுப்பு, விளையாட்டு என்று விளையாடிக் களைச்சுப்போன நாட்கள் இப்ப நினைச்சாலும் வெட்கமாக இருக்குது" புறு- புறுத்தபடி அங்குமிங்கும் தொட்டுத் தொட்டு கிளித்தட்டு பின்பக்கமாக வந்து வேலியோடுகிடந்த தென்னங்குத்தியில் குந்திக் கொண்டாள் செல்லக்குட்டி ஆச்சி.

"டேய் பாலன் நான் கிளி இறங்கியிற்றேன்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றவர்கள் திரும்பத் திரும்ப தட்டுப் புகுதல் முறை இரவும் கும்மிக்கொண்டு வந்தன. அங்காங்கு வீட்டு விளக்குகளும் கண்சிமிட்டுகின்றன. விளையாடி வென்றவர்கள் தோற்றவர்கள் பலவித குற்றம் குறைகளை விவாதம் புரிந்தபடி கலைந்து செல்கின்றார்கள்.

இரவின்பிடியில் சிக்கிக்கிடந்த ஆதவன் தன் வல்லமை அனைத்தையும் எதிர்த்து எழுந்து வருகின்றான். பாலனும் ஜெயந்தனைப் பார்த்தபடி வாசக சாலை வாங்கில் இருந்தான்.

அவன் வரவுகணடதும் எழுந்து நடந்து சந்தி திரும்பிக் கல்லூரி போவதற்கான றோட்டின் நேர எதிராக நின்றான். பாலனை முட்டவந்தவன் முகம்கப்பிய கவலையோடு காணப்பட்டான.

"என்னடா ஜெயந்தன் ஒரு மாதிரியா இருக்கிறாய்?"

"உனக்கு விசயம் தெரியாதாட அரசாங்கத்துக்கும் நம்மபொடியங்களுக்கும் இடையில நடந்த பேச்சு வார்த்தை முறிஞ்சுட்டாமடா."

"அப்ப திரும்ப இந்த அழிவான் குண்ட, ஷெல்ல அடிக்கப் போறான் என்று சொல்லு."

"அப்படித்தான் கிடக்கு."

"பின்நேரம் நம்ம விளையாட்டு."

"நாம நம்ம பாட்டில விளையாடுவோம் நடக்கிறது நடக் கட்டும்." அலட்சியமாகவே அவர்கள் போக்கு கல்லூரிய நாடிப்போய்க் கொண்டிருந்தன.

மாலைப் பொழுது அவர்கள் எண்ணப்படி கிளித்தட்டு விளையாட்டு விளையாடி முடிந்தது. கிளி விளையாட்டின் பின்ன கிடந்த நாய்களும் பதுங்கிவிட்டன.

பாலன் மட்டும் சைலாவின் வீட்டுப் படிக்கட்டில் குந்தியிருந்தான்.

அவள் வெட்கத்தோடு 'குரும்ப முலைகள்' கதவுநிலையில் குத்த ஒட்டிநின்றாள். இதயத்துடிப்புகள் இறங்கிக்கொண்டன. திடுமென எங்கோ கேட்ட எறிகணை அதிர்வுகேட்டு நெஞ்சுகள் விம்மி மேலும் கீழும் எழுந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன்ரா தம்பி பாலன் நிலமே அதிரும் இந்தச் சத்தம் எங்கேயடா விழுந்து கேக்குது?"

பாலன் செல்லக்குட்டி ஆச்சியக்கண்ட அதிர்ச்சியில் பேசாமல் நின்றான்.

"அழிவான் அடிக்கத் தொடங்கியிற்றான் போலக் கிடக்கு." அடக்கிய நெஞ்சக்குமுறலை அடக்கமுடியாது, பெருமூச்சை இருகைககளையும் உயத்திவிட்டுக் கொண்டாள்.

"ஆச்சி மண்டைத்தீவுக் கேம்பாகத்தான் இருக்க வேணும். பள்ளிக்கூடப்பக்கம் இல்லாட்டி கடற்கரைப் பக்கம்தான் விழுந்திருக்கும். நீ ஏன் இன்னும் உள்ளபோய்த் தொலையாமல் இருக்கிறாய்?"

பாலனின் கேள்வியில் விரகதாபம் மேலோங்கி நின்றன. "டேய்! தொலைவானே என்ன எங்கயடா போகச் சொல்லுறாய்?"

"எங்காவது போய்ப் பதுங்கிறதுதானே. நீங்க என்ன கிருசகேட்டுக்கடா இதில நிற்கிறீங்க?"

இருவரும் சற்றுத்தயங்கியபடி விலத்திநின்றனர்.

"உவளுகள் வீடுகளில் இல்லையா? இஞ்ச பார்த்த பாஸ உங்கட தாய்மாரட்ட அள்ளவைக்கிறேன் இல்லையா என்று பாருங்க."

தனக்குள்ளாகப் பேசியபடி ஆடி ஆடி அசைந்து போய்க கொண்டிருந்தாள். அவளால் ஓடவும் முடியாது வாழவும் பிடிக்காதிருந்தன.

பாலனும் சைலாவும் சிரித்தபடி ஊரில என்ன நடந்தாலும் தமக்கென்ன என்று நெருங்கினார்கள். கிட்டப்போனவன் மெல்ல தலையைச் சாய்த்துப் பார்த்தான். ஒருவரும் இல்லை.

சைலா என்றவன் "ஒருத்தரையும் காணயில்ல சைலா?"

"அதுக்கென்ன இப்ப?"

"ஒன்றுமில்ல கதைக்காம நிற்கிறாய்?" இழுத்த இழுவையில் இரண்டு சொண்டும், கண்களும் நடுவே சொருகிக் கொண்டன.

சைலா மௌனத்தோடு தன் விரல் நகங்களைக் கடித்துத் துப்பியபடி தன் நடுக்கத்தைத் தக்கவைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன சைலா நாளைக்குக் கிளி விளையாட வருவாய் தானே?" பதிலுக்குப் பதுங்கினான் பாலன்.

"இம்... இம் பார்ப்போம் நாளைக்கு" சின்ன இழுப்பு இருந்தது.

"அப்புறம் நான் போகட்டா?"

"திரும்பி நாலு புறமும் பார்த்துவிட்டு"

"சைலா நான் போகட்டா?"

"இந்தநேரம் ஒரு குரல் உரமாக ஒலித்தது?"

"டேய் பாலன்! இன்னும் வீட்டுக்குப் போகயில்லை யாடா? உன்ர அம்மா ஊரெல்லாம் ஒப்பாரி வைச்சுக் கொண்டு திரியிறாள். டேய் மடையா! நீ இங்கநின்று யாரோட கதையளக்கிறாய்?"

குரல்கேட்ட பாலன் திகைப்போடு திரும்பிப்பார்த்தான்!

பொன்னர் கேணி ஒழுங்கையால் திரும்பி வந்து கொண்டிருந் தார்.

தகப்பனைக் கண்டவள் நாக்குத்தெறிக்க ஓடி ஒழிஞ்சு கொண்டாள்.

பாலன்ர உடல் வியர்த்து ஆழமான அச்சத் தைரியம் அவன் முகத்தில் தோன்றின.

தைரியசாலி போல் "உங்கட மகனட்ட புத்தகம் வாங்கிப்போக வந்தேன்."

"புத்தகம் வாங்கிற நேரமாடா?"

"அவனக் கூப்பிட்டுப் பார்த்தேன் இன்னும் காணயில்ல."

நெழிவும் சுழிவும் பார்க்கப் பாவமாக இருந்தது.

"புத்தகம் வாங்கிற நேரமாடா? பள்ளிக்கூடத்தடியில விழுந்த ஷெல்லில நாலு ஐந்து உடல்கள் சிதறிப்போச்சாம். சனமெல்லாம் பதுங்கு குழிதேடி உசிரக் கையில புடிச்சுக் கொண்டு பயந்தொதுங் கதுகள். நாளைக்குப் புத்தகம் வாங்கலாம் இப்ப சுறுக்கா போச் சேரடா வீட்ட." பொன்னர் மூச்சுவிடாத அதட்டல் பேச்சைப் பேசிவிட்டு வீட்டிற்குள் சென்றார்.

பாலனின் உடலும் மனசும் படார்.. படார் எனயடித்தன. இதயத்தின் துடிப்பு காதுக்குள் கேட்டது தனியாக நின்றதாக மனிசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைச்சிட்டார். நல்லகாலம் எங்கட சேட்டைய மனிசன் கவனிக்க இல்ல. கவனிச்சிருந்தா சும்மா விட்டிருக்குமா?

சில நிமிடம் திகைப்புக்குள்ளாக நிலைத்தன அந்தக் காட்சி. நெற்றியில் உருண்ட வியர்வையை வலக்கையால் துடைச்சுவிட்டுப் போய்க்கொண்டிருந்தான்.

சோழகக் காற்று சோர்வின்றி வீசிக்கொண்டிருந்தன.

நேற்றுக் கீறிய கிளித்தட்டுக் கோடுகள் புழுதியில் புதைஞ்சு கிடந்தன. திரும்பவும் பாதத்தால் கோடுகள் அமைக்கப்பட்டன.

நேற்றிரவு நடந்த நினைப்பு திகைப்புப் படலம் எல்லோர்முகத்திலும் திரைப்படம்போல் காட்சிகொடுத்தன. கழுகுகளின் கண்மூடித்தனமான செல்லடியில் துண்டு துண்டாப் பறந்த மனித உடல்களின் கோரக்காட்சி நினைப்பறைக்குள் கிடந்து பயம் காட்டின.

மண்டைத்தீவுக் கேம்பை இல்லாமல் செய்தால் என்ன? இந்த அழிவான்தானே ஷர்ச்சனத்திற்கு கரைச்சலைக் கொடுக்கிறான்? எங்கட வீரர்களும் கண்டுக்காமல் இருக்கிறாங்களா? தொலையப் போயினம் பார்! கிளித்தட்டு வீரர்கள் தங்களுக்குள் ஒழுங்கவெளியில் ஒரு வட்டமேசை மாநாட்டை நடத்திமுடித்தனர்.

"என்னடா இவன் பாலன் இன்னும் காணயில்லை?" என்றான் ஜெயந்தன்.

"அவன் வராமல் ஒரு விளையாட்டா?" என்றான் யோசப்.

யோசப் பேசிமுடிக்கயில்ல. ஒழுங்கை முடியும். திருப்பத்தால் திரும்பி வந்துகொண்டிருந்தான் பாலன் அவனது ஆசையும், ஆவேசமும், தவிப்பும், வரப்பிந்தின காரணமும் உடம்பின் வியர்வையில் தெரிந்தன.

இத்தகைய தவிப்புக்குள்ளும் விழிகள் வழிகாணாது தவித்தன. எச்சிலை முக்கி விழுங்கியபடி.

"சைலா வரவில்லையாடா ஜெயந்தா?"

"டேய் நாங்கள் இவ்வளவு பேர் மலைபோல நிற்கிறோம்."

"அதுக்குள்ள இவனுக்குத்தேவை சைலாவாம்" என்று நக்கலாக இழுத்தான் தாசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவள் வராட்டி என்ன நாங்கள் விளையாட்டத் தொடங்கு வோம்" என்றான் மரியான்.

பாலனின் தலை பொம்மையாட்டம் போட்டது.

மௌனித்திருந்தவனை மேலும் குழப்பினார்கள்.

"என்ரா பாலன் காசைக் சுண்டுறோம்.. காசைசுண்டுறோம்."

நகைச்சுவையோடு சொற்களை வீசிநின்றான் ஜெயந்தன். மேலும் தூக்கிவாரிப்போட்டது பாலனுக்கு.

சூசை, பெரியவன், சின்னவன், யோசப், அழகு, ராணி. பவளம். தாசன். ஜெயந்தன் எல்லோரும் இரைஞ்சு கொண்டு நின்றனர்.

பாலன் நெஞ்சு எதையோ சேகரித்துக் கொண்டிருந்தன.

"ஏன்ரா அறுவான்களே! உங்களுக்குப் பயமென்றது இல்லையா? கொள்ளையில போவான்ர குண்டும், ஷெல்லும் விழாது என்ற திமிர்தானே? ஒரு நாளைக்கு விளையாடாட்டி குடியா மூழ்கிப் போயிடும்?"

பொக்குவாய்த் திட்டு வெற்றிலை சப்பிக் குதப்பிய கடவாய் வழி வழியும் இரத்தத்தை இடது கையைப் பிரட்டி இழுத்து உடுத்தியிருந்த மஞ்சல் நிறநூல் சீலையில் சிவத்தப் பொட்டுட்ட செல்லக்குட்டி ஆச்சி வழமையான தென்னங்குத்தியில் குந்திக் கொண்டாள்.

சைலாவைக் காணாத கவலை உள்ளுக்குள் குமைஞ்சு கொண்டிருந்தது பாலனுக்கு. கிளித்தட்டு மறிக்கும் தந்திரம், வேகம், ஓடும் அழகு அன்றைய விளையாட்டைப் பல கண்கள் ரசித்தன. சைலா மட்டும் தன்ர விளையாட்டைப் பார்க்காத ஏக்கம் தவிப்பாகப் படர்ந்திருந்தது பாலனுக்கு.

"டேய் கிறுக்கங்களே! பொழுது பட்டுட்டடா விளையாடினது போதும் வீடு வாசலுக்கும் போச்சேருங்கடா நேரகாலத்தோடு."

செல்லக்குட்டி ஆச்சியின் குரலோடு அதிர்வின் சத்தமும் வந்து விழுந்தன. அங்காங்கு சிதறி நின்ற உயிர்களை உலுப்பியது அதிர்வின் ஆட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாக்குத்தெறிக்க ஓடிவந்த பொன்னர் "டேய் மண்டைத்தீவுக் கேம்பில இருந்து ஷெல்லடிக்கிறான்ரா".

எல்லோரும் கால் தரையில் படாமல் ஓடினார்கள்.

ஒரு ஈ காக்காவும் கண்ணுக்குப்படவில்லை. பேய்கள் பறப்பது கண்ணுக்குத் தெரிந்த குட்டைநாய்களும் வானத்தை அன்னாந்து பார்த்து குரைத்தபடி ஒதுங்கின.

இரண்டு சின்னக்குழந்தைகள் முகம் குப்புற விழுந்தழுவதைக் கண்டான் பாலன். பயபீதியோடு அதுகளைத் துக்கி நிமிர்த்தி விட்டதும். குண்டியில் தட்டி இஞ்சாலப்பக்கம் ஓடுங்கடா என்றவன் நிமிர்ந்தான் பின்பக்கமாக அனுங்கும் குரல்கேட்டு வியப்போடு திரும்பினான்.

செல்லக்குட்டி ஆச்சி அசைஞ்சு எழும்பி நிற்க இசக்கமற்றுத் துடித்துக்கொண்டு சரிஞ்சு நிற்பதைக் கண்டான். தாவிப்பாய்ந்தவன் ஆச்சியின் நாரிப்பிடியோடு வலது கையைத் தோளில் போட்டுத் தூக்கி நிமிர்த்தி நாலு... ஐந்து அடிகள் முன்வைத்தான்.

"ஏன்ர ராசா என்ர வயித்தில புறந்ததுகள் ஏன் நாயென்று கூடக் கேக்குதுகளில்ல. அவள் புஸ்பத்தட வயித்திலபுறந்த பாலா என்னச் சுமந்த தங்கமே."

ஷெல் கூவியது.

அதிர்வில் வெளி கதறியது.

ஆச்சிய நழுவவிட்டு நகர்ந்தான் பாலன்.

வெண்மணல் பரப்பு செந்நிறமானது. ஊரெல்லாம் ஒலித்த குரல் அடங்கியது. ஆச்சியின் உடல் துண்டு துண்டாய் கிளித்தட்டுகள் எங்கும் சிதறிக்கிடந்தன.

பூவரசு மரத்தடியில் பாலன் குற்றுயிராய்க்கிடந்து துடித்தான்.

இரவின் நிசப்தத்தில் நீண்டது அவலக்குரல்கள்.

அடுத்த அதிர்வுண்டுத் தீர்க்கும்முன் பாலனைத் தூக்கிக் கொண்டு ஓடி மறைத்தார்கள் பதுங்கு குழிக்குள்ள. புழுதியும் புரண்டழுதன, கிளித்தட்டுக்கோடுகளும் கோவெனப் புலம்பின பூவரசும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் பூமியப் பார்த்து இரங்கி எதிர்காலம்தேடிக் கண்ணீர் சொரிந்தழுதது.

நாட்கள் பல உருண்டன....

பாலனின் இரண்டு கால்களும் முழங்கால் மூட்டோடு வெட்டப்பட்டிருந்தன! இடுப்புக்குள் முட்டுக் கொடுத்த தடியுடன் தாவித் தாவி வருகிறான்...!

கிளித்தட்டு விளையாடும் இடத்தைப் பலநாட்களாக வெறித்துப் பார்த்து வெந்து துடித்தாள் சைலா.

நாளும் பொழுதும் அழுது வீங்கிப்போன முகத்தோடு பாலனின் கோலத்தைப் பார்த்து விம்மலை அடக்கமுடியாது புழுவாத் துடித்தாள். மூளைகுத்திப் பாயும் கால்கள்! கூர்ந்துபார்த்தவள் இமை யோரம் முட்டிநின்ற கண்ணீர் துளி..துளியாக விழுந்து கிளிக் கோட்டை அழித்தன.

"என்ன சைலா இந்த அனர்த்தங்கள் நம்ம ஊரில சகசமாகப் போயிற்று. இனியென்ன கிளித்தட்டு விளையாட முடியாது.. வாழ்க் கையும்..?" வேதனையின் விழிம்பில் நின்றவன் இதழ்கள் புன்னகை சிந்தின அவனது வேதனையைப் பங்குபோடுவதற்காகவே தன்மூடிய சிவந்த இதழ்களைத் திறந்தாள்.

"பாலன் உன்னட்ட ஒரு கேள்வி கேக்கிறேன் பதில் சொல்வாயா?" விழிகள் அகலவிரிக்க முடியாது மூடியபடி கேட்டாள் சைலா.

"என்னத்தக் கேக்கப் போறாள்? என்ன மறந்துவிடு. நீ நொண்டியாப்போயிற்றா உன்னோடு நான் வாழ முடியுமா? என்றுதானே அவள் கேக்கப் போறாள் என்று தன் மனசுக்குள் நினைத்துக் கொண்டான் பாலன்.

"தைரியமாக தாரளமாகக் கேள் சைலா. நான் உனக்கு நல்ல முடிவு சொல்லுறேன்." காதலின் மோகத்தை கண்களிலும் காட்டவில்லை. அவள் கேட்கத் தொடங்கினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு பக்கம் ஏழு குழி இருபக்கத்திலும் பதினாலு குழிகள் மரத்தாலானது மகத்தான வீடு மங்கையர் மகிழ்ந்நாடும் வீடு மற்றவரும் கலந்தாடுவர் அது என்ன?"

சட்டென்று பதில் விழுந்தது. "பல்லாங்குழி".

"இப்ப என்ன கிளித்தட்டுத்தானே விளையாட முடியாது? வாயேன் பதுங்குழிக்குள்ளிருந்து பல்லாங்குழி விளையாடுவோம்."

இருவரும் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்கள். ஊரெங்கும் எதிரொலித்தன.

யக்கோவின் கோயில் மணியும் கிடாங்..கிடாங்கென ஒலித்தன இவர்கள் காதல் வாழ வேண்டுமென வேண்டிக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்க்கடிதம்

பிரான்சுக்கு வந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. வருகின்ற ஆவணியுடன் அவல வாழ்வின் ஆறாவது ஆண்டிற்கு அடியெடுத்து வைக்கிறான். பாரீஸ் நகர வீதிகள் தோறும் நடந்து களைத்த 'பாஸ்கருக்கு' இரண்டு வேலை கிடைத்து இரண்டு வருடம் ஆகிவிட்டது. காசு இருந்தென்ன கவலைகள் தீரவழி வேண்டுமே... ஏங்கியவன் மனதில்! "மறக்க நினைத்தாலும் மறக்க முடியாத மண்வாசனைச் சம்பவங்கள் மனதைத் தொட்டுக் கொண்டது". தாயின் அன்பு அணைப்பிலிருந்த உபசரிப்புகள் தந்தையின் அச்சுறுத்தல் கலந்த அறிவுரைகள், அயலவரோடு பழகும் அணுகு முறைகள் தங்கைகள் தம்பியோடு புரிந்த அன்பு அடிபுடிகள் பிற்பாடு ஏற்படும் பாசவுணர்வுகள் தாயகத்தின் தெருவோரங்கிளலும் சந்துகளிலும் நின்று செய்த சேட்டைகள் விபரிக்க முடியாதது. கடந்த கால நினைவுகள் பாஸ்கரை ஒரு உலுப்பு உலுக்கிவிட்டது.

கோடைகால விடுமுறை என்பதால் மெற்றோவுக்குள் (பாதாள ரெயில்) பிரயாணிகள் மிக அரிதாகவே காணப்பட்டனர். பாஸ்கருக்கு இருப்பதற்கு இடமிருந்தும் இருப்புக்கொள்ள முடியவில்லை. வாசலோடு நின்று பிரயாணம் செய்தான். இவ்வளவு காலமும் ஊரிலிருந்து வந்த கடிதங்களால் மகிழ்ச்சி கலந்த மனக்கவலைகள் இருந்தபோதும் அவனையும் அறியாது நவம்பர் மாதக் குளிர் விலா எலும்புகளை வருடிக்கொண்டேயிருந்தது. பாஸ்கர் வேலை செய்யுமிடத்திற்கு சீலன் மூலம் கிடைத்த ரெலிபொன் செய்தி... "ஊரிலிருந்து கடிதம் வந்திருக்குது".

பாஸ்கரும் சீலனும் ஊரில் வாழ்ந்தபோது எந்த வேலையானாலும் இருவருமே சேர்ந்து செய்யும் பழக்கமுள்ளவர்கள். பாஸ்கரின் தாய் ஞானம்மாவின் தங்கை மகன்தான் சீலன். சொந்தம் என்பதால் என்னவோ. இருவரும் நண்பர்களாகவே பழகி வந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். எல்லோரையும் போல் இருவரும் ஒரே நாளில் விமானம் ஏறி விடியாத வாழ்க்கை வாழ வீராப்போடு பிரான்சு வந்திறங்கியவர்கள் இவர்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட அவலங்களை எழுதுவதானால் ஆண்டவா வேண்டாம் எழுதவே முடியவில்லை என்னால் மன்னித்துக் கொள்ளுங்கள் மனப்பாடமாக இருந்தவை மரணிந்து விட்டன.

லாச்சப்பல் மெற்றோவின் முன்வாசலில் சிகரட் புகைக்குள் புகுந்த முகத்தோடு பணத்தை பறிகொடுத்த பாதை சாரிபோல் அங்குமிங்குமாக அலைந்து திரிந்தான். பாஸ்கர், "என்னடா இவன் உடனே இறங்கி வாறேன்ரான் வராமல் வேற விட்டுவிடுவானோ...? நேரமும் ஆறுமணியாகிக்கொண்டு போகிறது. வேலைக்கும் போக வேண்டும். சே...சே. கடிதம்வரும் விலாசத்தை மாற்றாததால் வந்த சிரமம்". முணுமுணுத்துக்கொண்டவன் தனது கழுகுப் பார்வையை ஸ்ரெலிங்காட் மெற்றோ பக்கமாக விட்டான். தென்பட்டான் *சீலன்*, தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு விறுவிறுவென நடந்து வந்து கொண்டிருந்தான்.

பாஸ்கரின் நடையும் *சீலனை* நாடி நகர்ந்தது. இருவரும் பிரஞ்சு மொழியில் வணக்கம் சொல்லிக் கொண்டார்கள். ஊரிலிருந்த பழக்கங்களில் நல்ல மாற்றங்களும் உண்டு. கெட்டவைகளை அதிகம் நாடுவது முண்டு. பொக்கற்றுக்குள்ளிருந்த கடிதங்கள் இரண்டையும் பாஸ்கரிடம் கொடுத்த *சீலன்* "டேய் எனக்கு நேரமாகுது. நீயும் வேலைக்கு போக வேணும்தானே வா இருவரும் சேர்ந்தே மெற்றோவுக்குள் இறங்கலாம்."

ஊரிலிருந்து வந்த கடிதம் என்பதால் செய்தி அறியும் ஆவல் *சீலனுக்கு*. பாஸ்கரே பிடியிலிருந்து விடுபட்டவனாய் "நான் வரவில்லை நீ போடா"

*சீலனும்* பதிலுக்கு ஏதும் பேசாமல் தலையசைத்து விட்டு மெற்றோவுக்குள் இறங்கினான்.

ஒன்று உள்ளூர் கடிதம் அது கண்ணுக்கு அவ்வளவாகத் தேவையில்லை. ஊரிலிருந்து வந்த கடிதம் தாயினுடையது கைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுங்கின முகத்தின் பாவம், பாவமாயிருந்தது. பிரித்த கடிதத்தை நெஞ்சுக்கு நேரே நிமிர்த்தி பிளாட்பாரத்திலேயே நின்று, ஆவலும் அவசரமும் மோத அன்னையின் அன்பு மடல் என்பதால் கண்ணீருடன் வாசிக்கத் தொடங்கினான்.

அன்பு மகன் பாஸ்கருக்கு!

சுகமாக நாங்கள் இருக்கின்றோம். என்பதைவிட நகர் சுடுகாடாகிவிட்டதுதான் வேதனைக்குரியது. நீ எங் கிருந்தாலும் சுகமாக இருக்க வேண்டும். உன்னை நம்பித்தான் தங்கைகள் இரண்டையும் வைத்திருக்கின்றேன். என்னடா மற்றவர்கள் இருவரை யும் காணவில்லையே என்று நினைக்கின்றாயா...? இந்த வரிகள் எழுதும்போது என் இருதயமும் இரும்பாகிவிட்டது கவலைகளால் காய்ந்துபோன என் இருதயத்தை கிழித்து எழுந்து வரும் அழுகையையும் அடக்கப் பழகிவிட்டேன். உன் தந்தை இறந்து விட்டார். 13ம் தேதி காலை ஆறுமணி போல் எங்களுக்கு ஏதாவது சாப்பாட்டுச் சாமான்கள் வாங்க முடியுமா என்று பார்க்கப் போனார் போனவர். போயே விட்டார் என்ற செய்தி பொடியங்கள் மூலம் கேட்டுத் தெரிந்து இடிந்து போய்விட்டோம். உங்களுக்கு உயிர் தந்த ஜீவனைக் கடைசி முறையாக என்னால் பார்க்கமுடியவில்லை. தங்கச்சிமார் இரண்டு பேரும் கதறிக்கொண்டு ஓடினார்கள். பொடி யங்கள் பிடித்து வந்து வீட்டுக்குள் இருக்கச் சொல்லிவிட்டார்கள். பம்பர் தாக்குதலைக் கேள்விப்பட்டிருப்பாய், தாக்குதலின் போதுதான் அகப்பட்டுக்கொண்டார். அன்றிலிருந்து நானும் நடைபிணமாகி விட்டேன். உன் தம்பி சேகரையும் பொடியங்கள் இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அவனை நாங்கள் பார்த்தே பல மாதங்களாகி விட்டது. நீ வரும்போது நாங்களும் இருக்கிறோமோ தெரியாது. இப்போது இருந்த வீட்டையும் விட்டு உன் தந்தையின் நண்பர் கந்தசாமியின் வீட்டில் இருக்கிறோம். இக்கடிதம் செஞ்சிலுவைச் சங் கத்திடம் கொடுத்து அனுப்பச் சொன்னோம். கிடைத்ததும் வாசித்து கவலையடையாதே. உன் தங்கைகளை உன்னை நம்பித்தான் வைத் திருக்கிறேன். இப்படிக்கு அன்புள்ள அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடித வரிகள் முடியும்போது சிந்திய கண்ணீரால் கடிதமும் சேர்ந்து அழுதன. பிளாட்பாரத்தில் மௌனப் போராட்டம், வாய்விட்டு அழமுடியவில்லை அவனால் தொண்டைவரை வந்த அழுகையை கஸ்டப்பட்டு அடக்கிக் கொண்டான். தன்னை அன்போடு அரவணைத்து அறிவூட்டி வளர்த்த தந்தையின் அவல மரணத்தை நினைத்து நிலைகொள்ள முடியாமல் வேதனையில் தவித்தான்.

பாஸ்கரின் தந்தை மாசிலான் அரசாங்க நிறுவனம் ஒன்றில் பொறுப்பு வாய்ந்த அதிகாரியாக கடமையாற்றி வந்தார். நேர்மையின் பிறப்பிடம் பலர் நாவில் நன்றாகப் பேசப்படும் அளவுக்கு உயர்ந்தவர். மனைவியோ குடும்பத்தின் குலதர்மம் மிகுந்த பொறுப்புள்ளவள். நல்ல மனிதர்களைச் சோதிக்கும் கடவுள் இவன் குடும்பத்தையும் நன்றாகச் சோதிக்கிறானோ. நல்லவர்கள் கடவுளுடன் சீக்கிரத்தில் சங்கமமாகின்றனர். பொல்லாதவர்கள் பூமியில் கிடந்து புலம்புகிறார்கள்.

எதிரிலிருந்த பார் (Bar) ஒன்றுக்குள் புகுந்து கொண்டான். இரண்டு பெக் விஸ்கிக்கு ஆடர் கொடுத்தான். அதை ஒரே மடக்கில் குடித்துவிட்டு 50 பிராங் நாணயங்களையும் கிளாசையும் மேசையில் வைத்தான். வைத்தவன் மிகுதிப் பணத்தையும் வாங்காமல் கண்மூடித்தனமான வேகத்தில் பக்கத்திலிருந்த சுப்பர்மாஸ்க்குள் சென்று ஒரு போத்தில் விஸ்கியுடனும் கோலாவுடனும் வெளிவந்தான். அவனுக்கு அந்த நேரத்தில் யாரைப் பற்றிய சிந்தனையும் இருந்ததாகத் தெரியவில்லை.

லாச்சப்பல் மெற்றோலிலிருந்து, பெல்வில் மெறறோவுக்கு வந்து சேர்நதான். இங்குதான் அவனுடைய வீடும் இருக்கிறது. விண் விண்ணென்று தெறித்து விடும் போலிருந்த தலையை விரல்களால் விராண்டிக் கொண்டே வேகமாக ஓடி படிகளில் ஏறினான்.

ஆறு மாடிகள் ஏறிய களைப்போடு பலமாக வாசல் கதவைத் தட்டினான். ரீவியில் ஓடிய தமிழ் சினிமாவோடு ஒன்றிப் போயிருந்த அந்தோணி திடுக்கிட்டுப் போனார். பொலிஸ்காரன்களோ பொடியன்களோ என்று. பிரான்சில் போலிஸ்காரர் கதவு தட்டும் விதமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்கள் கதவு தட்டும் விதத்திற்கும் வித்தியாசம் உண்டு என்பதால் 45 வயது மதிக்கத் தக்கவரும், மற்றவர்களுக்கு புத்திமதி சொல்பவருமான அந்தோணி திடுக்கிட்டு குழந்தையாட்டம் எழுந்து மெல்லக் கதவைத் திறந்தபோது, பாஸ்கரின் முகத்தையும் கையிலிருந்த போத்தலையும் கண்டு உண்மையிலே திடுக்கிட்டுப்போனார்.

அந்தோணி தனக்குள்ளே வேலைக்கு இவன் போக வில்லை. அதிகம் குடிக்காதவன் போத்தலோடு வேற வந்திருக்கிறான். என்ன ஏதோ தெரியவில்லை சரிபார்ப்போம் என்று திரும்பவும் தன் இடத்தில் வந்து அமர்ந்து கொண்டார். மனம் கேளாமல் பாஸ்கர் அருகில் சென்று, "தம்பி பாஸ்கர்" என்றபடி அவனின் தோளில் கையை வைத்தார்.

நெஞ்சைப் பிளந்து பீறிட்டெழும் விம்மலுக்கிடையில் விக்கி, விக்கி அந்தோணி "அண்ணை, என்னண்ணை என் வாழ்க்கையெல்லாம் போச்சு இருந்தென்ன இறந்தென்ன, அண்ணை" என்று அந்தோணியின் தோளில் தலைவைத்து விம்மினான்.

அந்தோணி ஆத்திரம் கலந்த அமைதியில் "டேய் பாஸ்கர் உனக்கென்ன விசர் கிசர் பிடிச்சிட்டா ஏன்ரா இப்படி குடிக்கின்றாய்?"

பதிலுக்கு பாஸ்கர் "வீட்டைவிட்டு தான் வந்தேன் என்ற விசர்தான் அப்பரும் போய் விட்டார். பாளாய்போனவர்கள் தம்பியையும் இழுத்துக் கொண்டு போய்விட்டாங்கள் அங்கே அம்மா இரண்டு குமர் பெட்டைகளோடு வீட்டையும் இழந்து, ஒரு பிறத்தியார் வீட்டில... இந்தாண்ணே படியுங்க கடிதத்தை."

கடிதத்தை இழுத்து பறிந்து வாசித்த அந்தோணியின் நெஞ்சில் விழுந்த அடிகள் முகத்தில் தெரிந்தது, கடிதத்தைப் பார்த்து விறைத்துப் போன அந்தோணி பேச்சு மூச்சற்று இடிந்து போய் சிறிது நேரம் அப்படியே இருந்து விட்டார். பாஸ்கரோ குமுறி அழுது கொண்டிருந்தான்.

சுய நினைவுக்கு மீண்ட அந்தோணி, அடுத்து என்ன செய்யலாம் என்று யோசித்தபடி பாஸ்கரை அமைதிப்படுத்த, "டேய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி நம்ம ஊரில இதெல்லாம் சாதாரணமாகப் போச்சடா. விடு தலையென்ற களம்கண்ட போராட்டம் தொடங்கிய நாளிலிருந்து நம்மட சனங்களும் ஊரும் நாசமாப் போச்சு. பாரிசில நம்மட பொடியங்கள் எத்தனையோ பேருக்கு விசர்புடிச்சுட்டுது. சின்ன வயசுப் பசங்கள் என்னமாய் வாட்டசாட்டமாய் இருந்தவங்கள். என்ரா செய்வது? எல்லோருக்குமுள்ளது தான்..ம்...ம்" ராகம் இழுத்தார்.

காலில் மிதிபட்ட பாம்பாட்டம் சீறினான் பாஸ்கர். "விறுமனாட்டம் பயபத்தியோடு இருந்த மனுசன் ஏன் சாவனும்? 15 வயதும் ஆகாதவனை இழுத்துக் கொண்டு போவதும் சாதாரண விஷயமா?" இடையில் விஸ்கியை போத்தலோடு அண்ணாந்து குடித்தான். வெள்ளம்போல் ஓடிய கண்ணீரை இருகைகளாலும் குழந்தைபோல் அழுத்தித் துடைத்தான். "அண்ணே உங்களுக்கு இது சாதாரணம். பாதிக்கப்பட்டது என்ர குடும்பமண்ணே," அழுதான், குமுறினான். கைகளைத் தலையில் அடித்துக் கொண்டு ஆண்டவனை அழைத்தான். பொடியங்க போராட்டத்தைத் திட்டினான், பாஸ்கரின் நிலையைப் பார்த்து அந்தோணியின் கண்களிலிருந்தும் கண்ணீர் வந்தது. ஒருவாறு தன்னை தேற்றிக் கொண்ட அந்தோணி இவன் பின்நேர வேலைக்கும் போகவில்லை, நாளைக்கும் போகாவிட்டால் வேலையும் போய்விடும். வேலையையும் விட்டுப் போட்டு என்ன செய்யப் போகிறானோ தெரியாது. கவலைக்கு குடிதான் மருந்து எண்டு பாரிசில இருக்கின்ற பொடியங்கள் நினைச்சுட்டாங்க. இவங்க இப்படி போனாங்கள் என்றால் இனத்துக்கும் கெட்ட பெயர்தான். சே...சே எங்கட வயசில எப்படித் தான் காலந்தள்ளப் போறாங்களோ? கடவுளே! உன்ர கண்களில் இரண்டில் ஒன்றையாவது எங்கள் தமிழ் இனத்தின் மேல் திறக்கமாட்டாயா, வேண்டுதலோடு இதயத்தின் தாக்கம் தூக்கத்திற்குள் மீளமுடியாது சாய்த்தது.

சாய்ந்து கிடந்த போத்தல் தரையில் உருண்டது. போத்தலை காலி செய்தவன் நிலத்தில் புரண்டு புலம்பிக் கொண்டிருந்தான். கவலையிலும் மதுவின் மயக்கத்தில் மயங்கிக்கிடந்தவனை தட்டியெழுப்பி, "இந்தா கோப்பி குடிச்சுட்டு பேசாமல் வேலைக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போ!... நேரம் ஒன்பதரை ஆச்சு. நடந்தது என்னவோ நடந்து விட்டது. விதி நம்மால என்ன செய்ய முடியும்? அழுவதைத் தவிர ஆக வேண்டியதைப் பார்ப்போம். இப்ப எழும்பு" என்றவர், இவ்வளவு சொல்லியும் அவன் அப்படியே அசையாமல் கிடப்பதைக் கண்டு, "வேலைக்குப் போக மனமில்லையென்றால் ஒருபோத்தல் எடுக்காதே. இரண்டு போத்தலாக எடுத்துக் குடிச்சுட்டுக்கிட. நேற்றுப் பின்நேரமும் வேலைக்குப் போகவில்லை, இன்றைக்கும் போகவில்லை என்றால் அவன் பத்திரோன் ஒரு மாதிரியானவன் வேறு யாரையும் எடுத்துப் போட்டு விடுவான். அதன் பிறகு என்ன செய்யப் போகிறாயோ? உன்ர தாயையும் தங்கச்சிமாரையும் நினைத்துப்பார். நான் வேலைக்கு இறங்குகிறேன்." அலுத்துக் கொண்டாலும் அந்தோணியிடம் தார்ப்பரியம் மிகுந்திருந்தது.

இரவெல்லாம் அழுத பாஸ்கரின் மனதில் தாயின் கடிதவரிகள் திரும்பி திரும்பி வந்து வாட்டியது. இருந்தும் அந்தோணியின் காலை கதாப்பிரசங்கம் காதுக்குள் ரீங்காரமிட்டு மனதை ஒரு நிலைப்படுத்தியபடி எழுந்திருந்தவன் கண்ணாடியில் முகத்தைப் பார்த்தான். எதிலும் மனம் ஈடுபடவில்லை. காலையில் அந்தோணி சொன்னதும் சரியாகப்படவே, அரைமனதுடன் வேலைக்குப் போனான்.

தந்தையின் இறப்புச் செய்தியறிந்தோர் தொலைபேசியில் துக்கம் விசாரித்து கொண்டனர். சிலர் நேரே ரூமுக்குச் சென்று துக்கம் விசாரித்தனர். தந்தைக்கென துக்கப்பாடற் பூசை ஒன்றும் ஏற்பாடு செய்து வந்தவருக்கு சாப்பாடும் கொடுத்தான். இதைவிட அவனால் என்ன செய்ய முடியும்? சில நாட்களாக கவலை மனதை அரித்துக் கொண்டது. வேலையும் வேதனையும், மதுவும் மறதியும், லீவு நாட்களில் வீடியோ படம் பார்ப்பதும், அந்தோணியின் அலட்டல்களை கேட்பதும், கலை நிகழ்ச்சிகள், சினிமா, நண்பர்களென நாட்கள் நகரத் தொடங்கியது.

வேலை முடிந்து திரும்பிய பாஸ்கர் உடல் களைப்பு அதிகமானதால் பார் ஒன்றுக்குள் சென்று கொஞ்சம் விஸ்கி குடித்தான். அது திருப்திப்படாமல் போகவே பக்கத்திலிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ஜிரியன் கடைக்குள் சென்று ஒருபோத்தல் விஸ்கி வாங்கினதும் அண்ணாந்து ஒரு முரட்டு செருமலோடு இறக்கி விட்டபடி வீடு வந்துச் சேர்ந்தான். வந்ததும் வராததுமாக அங்குமிங்கும் பார்த்தவன் சப்பாத்தை கழட்டிவிட்டு கட்டிலில் சாய்ந்தான்.

காதுகளில் ரெலிபோன் மணி ஒலித்தது. ரிசீவரை எடுத்து காதுக்கருகில் வைத்த போது பேசியது சீலன் தான் எனப் புரிந்து கொண்டு "என்னடா சீலா இந்தப்பக்கமே காணோம் என்றான்......ம்......ம் கெதியாகக் கொண்டா. நானும் இறங்க வேணும்" நின்றபடி ரீசிவரை வைத்தான். மனதில் சிறிது பயம் கௌவிக் கொண்டது. வரும் கடிதத்தில் என்ன இடி வரப்போகுதோ என்று. மனம் திக்திக் என்று அடித்துக் கொண்டிருந்தது. வேலை முடிந்து வந்த அந்தோணி பாஸ்கரின் முகத்தைப் பார்த்தார். வாடியிருந்தது. ஏன்ரா குடிச் சனியா? என்ன ஒரு மாதிரியிருக்கிறாய் என்றார். சீலன் ரெலிபோன் எடுத்தான். எனக்கும் உங்களுக்கும் கடிதம் வந்திருப்ப தாகச் சொன் னான் அதுதான் யோசிக்கிறேன்" என்றான் பாஸ்கர்.

அந்தோணியின் மனதிலும் சிறிது பயம் ஏற்பட்டது தனக்கு வரும் கடிதம் எப்படியிருக்குமோ என்று. எதையும் வெளிக்காட் டாமல், கனிவாய் "பாஸ்கர் சாப்பிட்டியா?" என்றவாறு முதல் நாள் இரவு சமைத்து வைத்த சாப்பாடு. அப்படியே யிருந்தது கண்டு, "டேய் வாடா சாப்பிட" என்று பாஸ்கரை அந்தோணி தந்தையின் பரிவுடன் அழைத்தார். "நான் ரெஸ்ரோரன்டில் சாப்பிட்டு விட்டேன் நீங்க சாப்பிடுங்க" என்றான் பாஸ்கர்.

இருவரது உரையாடலையும் இடைமறிப்பது போல் சீலனும் கடிதங்களோடு உள்ளே வந்தான். அந்தோணியிடமும் பாஸ்கரிடமும் கடிதத்தைக் கொடுத்துக் கொண்டவன் "எல்லோருக்கும் ஊரிலி ருந்து கடிதம் வந்திருக்கு எனக்கு ஒன்றையும் காணவில்லை" என்றான் சீலன். "சும்மா இரடா அதுதான் நல்லது, நிம்மதி" என் றான் பாஸ்கர்.

அன்னையின் அன்புமடலை பிரித்தபடி முன்னே நின்ற சீலனைப் பார்த்தான். என்னடா நல்ல செய்தியா துயரச் செய்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கேட்பது போலிருந்தது அவனின் பார்வை. தாய் நாட்டுக்கடிதங்களில் கவலைகள் தான் அதிகமாக வருவது என்பது சீலனுக்கு தெரியும். இருந்தும் தனக்குப் பெரியம்மா தானே. எங்கட குடும்பத்தைப் பற்றிய செய்திகளையும் எழுதாமலா விடப் போற. அற்ப ஆசை சீலனை ஆட்கொண்டது. காகிதமோ பெரிசு எழுதப்பட்ட வரிகளோ குறைவு. குண்டுதான் விழப் போகின்றது. விழப்போகின்ற குண்டோடு என் உயிரும் போயிட்டால்.....

*அன்பு மகன் பாஸ்கருக்கு,*

*அம்மாவின் அன்பு என்றும் உன்னோடு வாழ்க்கையின் ஒரு பகுதியாவது பலருக்கு நன்றாக அமையும். எங்கட வாழ்கையில் அது கூட இல்லாமல் செய்திட்டான் இறைவன். ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் கொடு என்றார் அது பொய்யாடா? தற்போதைய ஊர் நிலையில் ஒரு கன்னத்தில் அறைந்தாலே போதும் எல்லாம் முடிந்துவிடும். நான் சாகும் முன் உன்னை பார்க்க வேணும் போல் இருக்குது. உன் தம்பி சேகரும் யாழ்கோட்டை தாக்குதலின்போது இயக்க பொடியங்கள் சொல்வதுபோல் மண்ணோடு சங்கமமாகி விட்டான். இரண்டாவது தங்கச்சி சாந்தியும் எங்கென்று தெரியவில்லை. மூத்தவனை கேட்டால் எனக்கு ஒன்றும் தெரியாது என்கிறான். சாந்தியும் செத்திட்டாளோ இருக்கிறாளோ. நான் எங் கென்று தேடுவேன். இடது பக்கக் காலும் கையும் வீழ்ந்து விட் டது. மூலையில் கிடக்கிறேன். இவள் சசிகலாவும் என்ன யோசனையில் இருக்கிறாளோ. கடவுளுக்குத் தான் தெரியும். அந்த கடவுள் நம்பிக்கையும் என்னை விட்டுப் போய் விட்டது. மகனே பாஸ்கர் உனது வாழ்வானது நன்றாக இருக்க இறைவனை வேண்டுகிறேன்.*

*அன்புடன் அம்மா.*

அறைக்குள் ஒரு மயான அமைதி நிலவியது. நெஞ்சில் விழுந்த இடியால் சுவர் அதிர்ந்தது, மடார் மடார் என்று தலையை சுவரில் இடித்து குமுறி அழுதான். நிமிர்ந்து பாஸ்கரின் முகத்தை பார்த்து விட்டு எதுவும் பேசத் தோன்றாமல் குனிந்தபடி மவுனமானார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தோணி. பாஸ்கரின் முகத்தில் எத்தனை உணர்ச்சிகள் தோன்ற முடியுமோ அத்தனையும் விஸ்வரூபம் எடுத்ததோடு உலகத்தை அழித்து விடும் அபார சக்தி ஏற்பட்டவனாய் குமுறத் தொடங்கினான். கவலையின் ஓரத்தில் நின்றவனின் வாயிலிருந்து கருத்தற்ற வார்த்தைகள்... தமிழில் எத்தனை தூசன வார்த்தைகள் பேச முடியுமோ அத்தனையும் வெளிவந்தது. அமைதி கொள்ளும் மன நிலையில் பாஸ்கர் இல்லை என்பதை அந்தோணியும் *சீலனும்* புரிந்துக்கொண்டனர். பாஸ்கரை எப்படி சமாதானப்படுத்த முடியும் என்பதை அந்தோணியால் கிரகித்துக் கொள்ள முடியவில்லை.

அழுவதற்குப் பழக்கப்படாத கண்களே கலங்கியது. பரிதாபமாக பக்கத்தில் போய் "டேய் தம்பி! என்ன கஷ்டகாலமோ உங்கள் குடும்பத்திற்கென்று எழுதி வைச்சாப்போல நடக்கிறது. அழுகை அடைத்துக் கொண்டதால் நா எழவில்லை இன்னும் நாலு வார்த்தை பேச! பாஸ்கருக்கோ செவி வழியாக ஏதும் ஏறுவதாக தெரியவில்லை. அந்தோணி தன் பாணியில் இனி, "அழுது என்ன? ஊரில இருக்கிற ஜீவன்களையாவது இங்கால அழைக்கிற அலுவலைப்பார்," சற்றுநேர அமைதிக்குப் பின் "என்னடாப்பா ஒன்றுமே பேசாமல் இருக்கிறாய்...?"

மரத்துப் போன மனம் மரணத்துக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது. ஆத்திரம் அழிவுக்கு அவசரப்படுத்திக் கொண்டிருக்கிறது. அன்னையின் அன்பு மடல் ஆவியை அழைத்துச் செல்ல அவசரப்படுத்துகிறது, இரண்டு நிமிசம், அதுவே மிகுதி. அத்தனை வேகமாக மாடி படிகள் இறங்கி தெருவில் வேகமாக நடந்தான். பாஸ்கர் போன போக்கு *சீலனையும்* அந்தோணியையும் குழப்பத்தில் ஆழ்த்தியது. இவன் போற போக்கு.... டேய் *சீலா* இறங்கடா"

இருவரும் வேகமாக இறங்கி பின்னால் ஓடினார்கள். பாதாள இரயில் உறுமிக் கொண்டு வந்தது. அதன் உறுமலையும் கிழித்துக் கொண்டு வந்தது பாஸ்கரின். அம்மா....அம்மா....

வீரகேசரி
20.101991



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திப்புக்கள்

பாரீஸ் மாநகரில் ...

தமிழர் மத்தியில் பிரபல்யம் வாய்ந்த இடம். 'லாச்சப்பில் மெற்றொ' என்னத்திற்காக என்று சிந்திக்கின்றீர்களா? தமிழர் கடைகளும், நடமாட்டங்களும் நிறைஞ்சு காணப்படுவதால் லாச்சப்பில் மெற்றொ வந்ததும், வெளிவரும் முன்புறமாக நீழும் தார்றோட்டு, அந்த றோட்டக் கடந்தால் இடப்பக்கமாக ஒரு வங்கி, வங்கியக் கடந்து இடப்பக்கமாகத் திரும்பிப் பிரிகின்ற றோட்டெல்லாம் தமிழர் கடைகள் இந்தமாதிரியான கடைத்தெருக்கள் நிறைந்த றோட்டில் தமிழர்களின் நடமாட்டம். 'நம்ம ஊர் பெரியகடை' றோட்டுக்களில் கலவர காலங்களுக்கு முன்பு 'களாம்—புளமா' இருந்தது போல இருக்கும்.

வீடியோ கடைக்கும் பலசரக்குக் கடைக்கும் இடைப்பட்ட நடைபாதைச் சந்தியின் முன் "என்னண்ணே! உன்னை இவ்வளவு நேரமாய் பார்த்துக்கொண்டு நிற்கிறேன்?"

"ஓமடா..ஓம்! அதற்கு இப்ப என்ன வந்திட்டு?"

"என்ன! வந்ததா? அவன்தான் முருகன் இவ்வளவு நேரமா நின்றான். இப்ப போனாலும் போயிருப்பான்."

"யாரடா அவன்?"

"வேறு யார்! வட்டிக்கு பணத்தைக் கொடுக்கச் சொன்ன வந்தான்."

"அவனுக்கென்னடா! இப்ப தலைமுழுகிப் போச்சு?"

"இரண்டுமாத வட்டிக்காசு தரயில்லத் தெரியுமா?"

"டேய்! எப்படியும் தருவான். தராட்டித்தானே! அவன்ர உடமைகள் பொறுப்புக்கு இருக்குது அது போதாதா?"

"இதென்ன கதையண்ணே! அந்த உடமைகள வைச்சு நான் என்னத்தப் புடுங்கச் சொல்லுறாய்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்ப என்னடா என்னச் செய்யச் சொல்லுறாய்?"

"ஒன்றுமில்ல... காசைப் பொறுப்பிற்கு கொடுக்கச் சொன்ன சொக்கநாதன் அங்க கடையில நிற்கிறார், அவனோட கதைச்சுப் பிரச்சனைய இன்றைக்கே முடிச்சுவிட்டுப்போ."

"டேய்மடையா அந்த மனுசன் நாணயமான மனிசன்ரா உன்ர காசு வட்டிக்காரன் கொடுக்காட்டியும் தன்ர பணத்திலாவது தந்திடும் மனிசன்."

"எனக்கு அந்தயிந்தப் பேச்சல்லெல்லாம் வேனாம். என்ர சோலிய முதலில முடிச்சிடு."

"நான் வந்த அவசரம் உனக்கெங்க தெரியப் போகுது?"

"என்ன அவசரம்?"

"அவன் குமாரக் காணவேணும் அவனவிட்டா என்ர காசும் வாங்கமுடியாமப் போயிடும். உன்ரகாசுப் பிரச்சனை உனக்கு முக்கியம். என்ர முப்பதாயிரம் பிராங்கைப்பற்றி யோசிச்சியா? தயங்கியபடியே சற்றுநேரம் அமைதியாக நின்ற இருவரும். முழிபிதுங்க அங்குமிங்குமாகப் பார்த்தார்கள். நான்கு சந்தி மூலைகளிலும் பலவிதமான கண்கள். இருவரையும் மொய்த்து நின்றது. டேய் உன்ர சோலிய என்ர தலையில எடுத்ததிற்கு செருப்பால அடிக்கக்கூடாது. அலவாங் கால குத்தவேணுமடா.. வெட்கம் கெட்டுப்போச்சு. நடவடா.. நட முன்ன." எரிஞ்சு தள்ளியபடியே இருவரும் முன்னும்–பின்னுமாக நடந்தார்கள்.

அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையே நடந்த இழுபறியச் சண்டைய பார்த்த பலபேருடன் பியர் போனிய வாயிலவைத்து உமிழ்ந்தபடியே ஓரமாக நின்றார். யார் அவர்? நெஞ்சு நிமிர்ந்த தோற்றம், மூக்குக் கண்ணாடிபோட்ட சாந்த முகம், பொதுவான நிறம், பெரிய எடுப்புக்கள் இல்லாத பாவம் கனதியாக யோசிக்கும் கவிஞன். மனைவி, மக்கள் குடும்பப் பொறுப்புள்ளவர், மனைவியின் மேல்கொண்ட பற்றும், நம்பிக்கையும், குடும்பப் பொறுப்பைப்பற்றிய சிந்தனையிலும், சிறிதும் பயப்படாத மனசு, தொழில் செய்து புழைக்கும் மனிசன். யார் தயவையும் எதிர்பார்க்காத எளிமையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிசன். காசில், பணப்பேராசையில் மூழ்கித் தவிக்கும் எம்மவரில் ஒரு வித்தியாசமானவர். சமூக அந்தஸ்தில் காதல் நிறைந்தவர். நாற்பத்தைந்தை தாண்டிய வயசு. இந்தப் பருவத்தில் சகலதும் துறந்தவரல்லாது, கலைமுகங்களை கண்ணாக மதித்து, உயர்த்திப் பார்க்கும் சுபாவம் நிறைந்த நிர்மலமான உள்ளம் கொண்ட இதயம். கலையின் தத்துவங்களையும், கவிதா மோகமும், எக்காலமும் எம் தமிழ் மரபிலினின்று பிசகாது இருக்க வேண்டுமென்ற புதிய பித்தம் தலைக்கேறிய உயர்ந்த உள்ளம். இத்தகைய அனுபவம் வாய்ந்த அவர் மனசில் மாறி மாறி சலனத்திற்கும், சபலத்திற்கும் இடம் கொடுப்பது போன்ற உணர்வு? நம் தமிழரின் நிலையில் தோன்றி மறையும் போக்குகளாலும் நாள் போகப்போக.. மனசைச் சித்திரவதைப் படுத்துவதுபோல இருந்தது, இந்தக் கோரணியத்திற்கு காரணம் என்ன? தொடங்குவதும் முடிவதும் எங்கே? எதிர்பார்க்காத முடிவு இதயத்தில் இடம்பிடித்தது. 'லாச்சப்பில்' மார்க்கற்ற 'போசனியர்' போன்ற தமிழர் நிறைந்த இடமெல்லாம் வேலை முடிந்ததும் அலையத் தொடங்கினார். சங்கடமான சந்திப்புக் கள் ஏற்படும்போது சாவசமாகத் தப்பித்துக கொள்ளும் சாமர்த்தியசாலி. தமிழர் கடை ஒன்றிற்குள் புகுந்தார். வெளிவரும்போது பச்சைக்கலர் 'பியர்' றின்னோடு சொண்டுகள் இரண்டும் சூப்பியபடியே வெளிவந்தார்.

திடுமென ஒரு சலசலப்பு! வீடியோ கடைய மொச்சபடியே இருந்தது தொலைதூர பார்வைக்கு இடமற்ற குறுகிய இடைவெளி. முழிகள் பிதுங்க பல முகங்கள். என்னடா சண்டை சச்சரவே பார்வையிலும் மனசிலும் பதகழிப்புப் படர்ந்தது. பியர் போனிய பின்புற கைகள் உள்ளங்கைக்குள் தினிச்சபடியே நடந்து வந்தார் கடை முன்னே ஏங்கவிட்டவராக நில்லாது எதிர்புற நடை பாதையின் வாங்கில குந்திக் கொண்டார்.

வீடியோ கடையின் பட்டறையில் சிகரட்ட சொண்டில பட்டும்படாத உள்ளிருப்பில் வெளிவரும் புகைநடுவே தெரிந்த ஒடுங்கியமுகம், ஒல்லியான உருவம். வலக்கைய தூக்கியபடியே கடிகாரத்தின் கணிப்பைப் பார்த்ததும் பதறித் துடித்து நின்றார். தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவில உருண்டுகொண்ட வார்த்தைகளை வரம்பின்றி வர வழைத்துக் கொண்டார். அந்தத் துசனவார்த்தைகள் மற்ற மனிசற்ற மனச நோகச் செய்யும் என்ற கவலையும் சிறிதேனும் இல்லை அவரி டம். டேய் லிங்கன்! அங்குமிங்குமாகப் பார்த்துவிட்டு வீடியோப் பக்கமாக நின்ற குருநாதன் முகத்தப் பார்த்தார். அவரது பார்வையும் தோரணம் விலங்கிய குருநாதன் "என்னண்ணே" என்றார்.

"டேய் போயா! உனக்குத் தெரியாதா இன்றைக்குச் சீட்டு இருக்கென்று?"

"தெரியும்ண்ணே அதற்கு நான் என்ன செய்ய?"

"இப்படிக்கேட்டு வீண்கோபத்தக் கிளறாதே, அவன் இல்லாட்டி என்ர நிலமையப்பற்றி யோசிச்சியாடா?"

இருவரது கோப முகங்களும் முன்பின் தெரியாத அதிர்ச்சியில் மூழ்கி நின்றது. இருவரது இடைவெளி வழியாக நடந்து கொண்டி ருந்தான் லிங்கன்.

அவன ஏறயிறங்கப் பார்த்த சொக்கநாதன். லிங்கன் வாயத் திறக்கும் முன்பே.. அவனது ஆரம்பத்தப் புரிஞ்சவர் போல "இந்தா அவன் இவன்ர கதைவேணாம் முதலில போய் பட்டறக் கதிரையில இரு" அவரது வேண்டுகோளை ஏற்றவனாய் கதிரையில் இருந்து முழுசத் தொடங்கினான் லிங்கன். சிகரட் அரைவாசிக்கு வரயில்ல அதற்குள் மறுசிகரட் பத்தும் தோரணையில் நின்றார் சொக்கநாதன். இதற்குள்ள நுழைஞ்சான் லிங்கன் "அண்ணே! எனக்கொரு சிகரட் தாங்களேன்?"

"இஞ்சவா நான் சிகரட்டு வைச்சிருப்பது எனக்கு. உனக்கு வேணுமென்றா இந்தா காசு... போய் வாங்கிப் பத்து" முகத்தில அடிச்சாப்போல சொன்னதும் லிங்கனின் முகம் முழுவதும் மாறிப் போயிற்று.

தன்னை மறந்த நிலையில் அவரது ஆத்திர அவசரம் இப் படிச் சொல்ல வைத்ததை உணர்ந்தான் லிங்கன். திமிர்கொண்ட நடையில்நின்ற சொக்கநாதன் சொர்க்கிய சோகமாய் "இந்தா லிங்கன் இந்தச் சிகரட்பைக்கற்றையே நீ வைச்சுப் பத்து நான் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருநாதனை விட்டு வாங்கிக்கொள்கிறேன். இன்றைக்கு அறுப தாயிரம் பிராங் சீட்டு. அதுவும் கடைசிக்கி முதலுக்கு முதல் சீட்டு. இந்த நேரத்திலதான் மிகக் கவனம் வேண்டும். காசு தராமல் காலங் கடத்துவாங்க. என்னட்ட அந்தத் தில்லு முல்லு நடவாது. மேசையில காசு வரயில்லையே! வடுவாக்கல்ரா வாசலையே சாத்தாமப் பன்ன மாட்டனா?" சொக்கநாதனின் சொல் ஒவ்வொன்றும் வாயிலிருந்து வரும் இடைவெளியில் தூாசனமும் தூாள்பறந்தது. சீட்டு கூறல் தொடங்கியது. கழிவுச்சீட்டு என்பதால் ஏலத்தில் கூறல் நம்ம சந்தையில் மீன் விலை கூறுவதுபோன்று இருக்கும்.

"ஆயிரம்.. இரண்டாயிரம்.. மூன்றாயிரம்" சற்றுநேர அமைதி யின் பின்பு என்ன எல்லாற்ற வாயும் அடைச்சிட்டு கடைசி இரண்டு சீட்டுக்காரர்கள் இருவர் முழியும் இமைமூடாது நின்றது. "மூவா யிரம்.. ஒருதரம்.. இரண்டுதரம்.. மூன்றாம்தரம் கட்டுங்க காசுகள".

"லிங்கன் கட்டுக்காசைக் கணக்குப் பார்த்து வாங்கு." அவ னும் தலையாட்டியபடி கல்குலற்றர், கணக்குச் சொன்னதும். பணத்தை வாங்கினான். மேசையச் சுற்றி நின்றவர்கள் நான்முந்தவா, நீ முந்தவாயென முண்டியடித்தனர். வாங்கில் நேரடிப் பார்வையில் இருந்த செபஸ்ரியாம்பிள்ளையின் மனசு இலேசாகத் துள்ளியது. "இதுயென்ன அயல்நாடா? அகதி அந்தஸ்துக்கேட்ட தேசமா? சொந்த ஊரிலகூட நடவாத நாடகம் பணத்தோடு எத்தகைய துணிவோடு அரங்கேறி உள்ளது." சீட்டுக்காரனின் துணிவையும், சிட்டுப்போட்ட வர்களின் சின்னத்தனத்தையும், சிந்தித்துச் சிரித்தார். "மண்ணின் நிலமை எப்படியோ! மண்மாறியவர்களின் நிலமைகள் பாடும் படுமோசமான 'வேசர்கள்தான்'. இது போதும் இன்றைய கதையின் இரு பக்கத்திற்கு," என்ற சுயசிந்தனையோடு மெற்றோ ஏறினார்.

அடுத்த பெட்டிக்குள்ளிருந்து வெளிவரும் குரல் களின் மோதல் நெஞ்சு மேட்டை குத்திக் குதர்வதுபோல் இருந்தது. இருப்புக் கொள்ள முடியாது தவித்தார். தன்னைமீறிவந்த திமிரோடு அடுத்தபெட்டிக்குள்ள தாவியதும். வாசலருகோடு மடிச்சுப் போட்ட சீற்றை அமர்த்தி உட்கார்ந்தார். நிலைகுத்தின பார்வையோடு, களைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையோடு, காணப்பட்டார். மூன்று நம் தமிழ் வாலிபர்கள் வயதுக்கு மிஞ்சி இரண்டு பெண்களை சுற்றியபடி அடுத்த வாசல் முன்பு நின்று நாணமற்று, வெட்கம் கெட்டு நின்றார்கள்.

"இண்டைக்கு என்ர ரூமில் ஒருவருமில்ல அங்குபோவோம்."

அடுத்தவன் "இவளுகள் எங்கென்றாலும் வருவாளுகள்." மூவ ரும் சேர்ந்தாப்போல் வெட்கமின்றிச் சிரித்தார்கள். அந்தப் பெண் களுடன் பிரஞ்சில் கதைப்பதும். தங்களுக்குள் நம்ம தன்னகரற்ற தமிழில் கதைப்பதுமாக நின்றார்கள். மாறி மாறி அந்தப் பெண்களை கட்டிப்பிடிச்சுக் கொஞ்சுவதும், சீ.சீய் அந்தக் கோமாளிகள் சல்லாபம், அட்டகாசம், அலோங்கோலம், பொறுக்க முடியவில்லை. பார்வையில் படர்ந்த வேதனை தாங்கமுடியவில்லை.

"ஏனிந்தப் பொடடிக்குள் ஏறினேனோ" என்ற கவலை தொட் டது. எழும்பி இரண்டு போடல் போடுவோம் என்றும் துணிந்தார். அவங்கள் நிற்கின்ற காமக்கண்மூடித் தனத்திற்கு திரும்பக் கைவச்சா லும் நமக்குக் கேட்க இந்த இடத்தில ஆளுமில்ல. சிந்திக்கின்ற இதயம், கண்கள இறுக மூடியபடியே அமர்ந்துகொண்டார். காதுகள் இல்லாவிட்டால் இந்த உபத்திரக் கதைகள் கேட்காமல் இருக்கும். இளகிய இதயம் கண்ணீர் சிந்தியது.

மெற்ரோவிற்குள் அட்டகாச, அலங்கோலம் புரிந்த எதிர்காலக் 'கோமாளிகள்' அவருக்கு முன் மெற்ரோவில் இறங்கினார்கள். சிந்த னைய வளர்த்துக்கொண்ட இதயம் கண்களில் கசிந்த கண்ணீரைத் துடைத்தபடியே தன் இருப்பிடம் சென்றார். படுக்கையில் மெற்றோ வில் நடந்த சம்பவம் மாறி மாறி ஓடிக்கொண்டு இருந்தது. மறக்க முடியாது தவித்தார்.

காலை எழுந்ததும் மனசுக்குள்ள என்ன நினைத்துக் கொண்டாரோ தெரியவில்ல? இன்றைக்கு எப்படி மனசுக்கு நிம்மதி யில்லையே? எந்த ஆண்டவன் என்றாலும் அரைமணி நேரம் அமைதிகொள்வது வழக்கம். அந்தோனியார் ஆலயத்தைச் தரிசித்து வெளிவந்தார். இன்றைக்கு லாச்சப்பலில் கடைகள் அதிகமாகப் பூட்டி கிடக்கும். வீட்டுக்கும் சமையல் சாமான்கள் தேவை. ஞாயிற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழமை ஆகையால் இன்றைக்கே சாமான்கள வாங்கிப் போட்டு விடுவோம். நேரம் பன்னிரண்டு மணியத் தாண்டிச் சென்றது. ஆலயப் படியவிட்டு றோட்டின் நடை பாதைக்கு வந்தவர் தூரத்தில் வரும் பழக்கப்பட்ட முகம் தெரிவதுபோல் தெரிந்தது ஆச்சரியமில்லை. தெரிஞ்ச முகம்தான்.

"அண்ணே! கோவிலுக்குள் இருந்து வருமாப்போல தோன்றுது?"

"ஓமடா அரியம். மனசில இருள் படிஞ்சிட்டு".

"என்னண்ணே! சொல்லுறீங்க ஊரில ஏதும் பிரச்சினையா?"

"டேய் என்னன்றாலும் உடன ஊரைத்தான் எடுப்பீங்க. இங்க நடக்கிற கிருசகேட்டையும் சீழ்பிடித்த சின்னத்தனங்களையும் விட ஊர்புதினம் பெரிய கவலையில்லையடா!"

"விளக்கமாகச் சொல்லுங்களேன்?"

"நீ இப்ப எங்க போறாய்?"

"மார்க்கட்ட பொசனியர் மெற்ரோவுக்கு."

"சரி வா நானும் அங்கதான் போறேன்."

இருவரும் மெற்ரோ ஏறியதும் செபஸ்ரியாம்பிள்ளை, முதல் நாள் நடந்த நாடகத்தின் காட்சிகளை சிறந்த விமர்சனம் செய்தார். பத்து மெற்ரோ கடந்து வந்ததுகூடத் தெரியவில்லை. அத்தகை அமர்க்களமான விமர்சனம். பலகொலைகளையும், அலங்கோலங் களையும், களவுகள் தற்கொலைகளையும் பார்த்தும், கேட்டும் ஐரோப் பியத் தமிழர் மீது வெறுப்பு குடிகொண்டுயிருந்த செபஸ்ரியாம் பிள்ளையின் 'சொரூப முகத்தை' அரியத்தால் நிமிர்ந்து பார்க்க முடியவில்லை.

மெற்றோ வாசலை விட்டு வெளி றோட்டைக் கடக்கும் போதும். எவரையும் கவனிக்காமலே நடந்தார். சந்நிதியில் குழுமி நிற்கும் கூட்டத்தை கூர்ந்து பார்த்தபடியே நடந்தார். அக்கம் பக்கமாக கார்கள் வந்த ஓசைகூட கேட்கவில்லை! படபடப்போடு நடைபாதை விளிம்பில் கால் பதித்ததும். "அண்ணே!" என்ற குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டு திடுக்கிட்டார். அரியத்த முழிச்சுப் பார்த்தார். "என்னமோ! மனசில முட்டிற்று. அதில மூழ்கிப்போனார் அரியம்."

எட்டி நடையோடு இருவரும் கடைக்குத் திரும்பும் சந்தியில் குழுமி நின்ற கூட்டம் முன் தரித்து நின்றார்கள்.

அக்கூட்டத்தின் மத்தியில் பெண்களின் பட்டியல் நீண்டு கொண்டே இருந்தது. "ஊரில் உள்ள பெண் தெய்வங்களை உச்ச ரிக்கக் கூடத் தகுதியில்லாத பேய்கள் வாழும் தேசம்! நம்ம தமிழ் வாலிபர்கள்" செபஸ்ரியாம்பிள்ளையின் ஆத்திரமும், திடமான வெளிப் பாடும்.

அத்தகைய பெண்களைப் பற்றிக் கதைப்பது அவர் இதயத் திற்கு இருபக்க ஈட்டியின் குத்தியிழுப்பின் வேதனையாகப் பட்டது. நின்ற இடத்தில நின்றபடியே "தம்பி அரியம். நீ கடைக்குப்போ, நான் ஒருக்கா லாச்சப்பல் போய் அவன் துரைய சந்திக்கவேணும்"

அவரது மனமாற்றத்தை உணர்நதவன் போல "சரியண்ணே! நான் வாறன்." அவன் போறதப் பார்த்த பக்குவத்தோடு பரிதாபமாக கத்திக் குலறிக்கொண்டு நிற்கும் கூட்டத்தின்மேலும் சாபம் போட்டு விட்டு. தன் மனசின் துடிப்பையும் மீறி நடந்து லாச்சப்பில் மெற்றோ வந்தார்.

நேரம் மாலை ஐந்து மணியைத் தாண்டிக்கொண்டு இருந் தது.

அச்சுக்கூடத்திற்குள் புகுந்ததும் கொம்பூற்றர் முன்பாக இருந்த துரையப் பார்த்தார். "என்னடா துரை உன்ர முகத்தில வழமையான புன்முறுவலைக் காணயில்ல? கடைக்கு முன்னால இவ்வளவு கூட் டம் நிற்குது. என்ரா ஏதாவது நிகழ்ச்சி போடப் போறீயா?" சொல்லி முடிஞ்சதும். நிமிர்ந்தான் துரை. ஆத்திரத்தில் சாடையான நடுக்கம்.

"முதல்லே இந்தக் கலைஞர் கூட்டத்தை இங்கே அண்ட விடாமல் துரத்தவேணும் நம்ம தொழிலுக்கு முதல் எதிரி இந்த வம்பளக்கும் கூட்டம்தான். அவனுக்குப் பந்தம்பிடித்து இவனுக்குப் பந்தம் பிடித்து பத்திரிகையில் தங்களைப் பற்றி எழுதிப் போட்டுவிடுவாங்க. அந்தப் பேட்டியையும், கட்டுரையையும், பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களை இங்க வந்து கூட்டம்போட்டு கும்மாளம் போடுவதற்கு என்ர கடைதான் கிடைச்சுதா? இவங்கட அட்டகாசத்தால 'அப்பட்ட மனில' இருக்கிறவங்க. இவங்கல களைக் கிறத்திற்கு ஏழுமாடியில இருந்து சுடுதண்ணீரை ஊத்தியும் களையுறான்கயில்ல. இந்தக் கன்றாவிக் கூட்டத்தால பெரிய தொல்லையாப் போச்சண்ணே. படிச்சவங்கத்தான், சிந்திக்கின்ற தலையுள்ளவங்கள் யாருமே இல்லை" ஒரு மேடைப் பேச்சே நடந்து முடிந்தது.

பொறுமையோடு செபஸ்ரியாம்பிள்ளை, "வேண்டா மடா அவங்களக் களைச்ச பாவத்தைக் கட்டிக்காம. சும்மா இரடா. புத்தகத் தொழில் புனிதமானது அதிலும் அச்சுத் தொழில் யோக்கியமானது. படித்தவனும், நாணயமான வனும் செய்யவேண்டிய கறைபடியாதது. காலம்.. காலம் எதிர்காலத்திற்குத், தேவையுணர்ந்து செய்யவேண்டிய புனிதத்தொண்டு. துரை இந்தக் கூட்டத்தக் களைக்கப் போய் அந்த முட்டாளுகள் என்னத்தயும் உளறிவைக்க. உன்ர தொழிலுக்கே களங்கம் வந்தாலும் வந்திடும் நம்பக் கூடியதுமே."

அறிவுரையக் கேட்ட துரை "ஓமண்ணை! நீங்க சொல்வதுவும் சரிதான். இந்தக் கூட்டம் எக்கேடுகெட்டுப் போனாலும் நமக்கென்ன..." விரக்தியோடு கொம்பிற்றர் முன்போய் முகமற்று அமர்ந்துகொண்டார்.

உள்ளிட்ட ஒருவர் "என்ன துரையர் உம்மட கடையில இவ் வளவு கூட்டம்?" மறுபடியும் புறு புறுத்தபடியே செபஸ்ரியாம்பிள்ளை எட்டி ஒருமுறை பார்த்துவிட்டு "என்னத்தப் பெரிசாகக் கிழிச்சாங் களோ தெரியாது? இதில நின்று வம்பலக்கிறாங்கள். எங்காவது ஒரு ரூமிலிருந்து அலம்ப வேண்டியதுதானே? தான் செய்தவைகளை தானே சொல்லிக் கொள்றதுக்கு கடையும், வீதியும்தான் கிடைச்சுதா? இந்தப் புளுகுக்கூட்டத்திற்கு. கலைகளின் நிலைகள் உயரத் தியாக மனப்பான்மை வேண்டும்." மனதில் இருந்ததை கக்கிய படியே நிமிர்ந்தார் செபஸ்ரியாம்பிள்ளை.

உடம்பு நடுங்க நாடித் துடிப்போடு உள்ளே வந்த இளைஞர். "அண்ணை! வெளிய போகாதீங்க" என்று சொல்லி பதறி நின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாம என்ன குற்றம் செய்தோம்? பயப்பிடுவதற்கு." சொல்லிக கொண்டே வெளியில் போய் விடுப்புப் பார்த்தார் செபஸ்ரியாம்பிள்ளை.

மோசமான சண்டைக்கான ஆயத்தங்கள் தொடங்கியது. இரண்டு குழுக்களுக்கிடையிலான சண்டை. இந்த கேடுகெட்ட குழுக்களுக்குள்ள ஒரு தலைவர் அவரைத் தலைவர் என்பதா? தலையுக்குள்ள ஒன்றுமே இல்லாதவர் என்றுதான் சொல்லலாம். சண் டையில் வலுக்கட்டாயமாக வந்து நின்றவர்கள் பலர். அவர்களது கையாலகத்தனத்தின் பக்குவம் அது. எப்போது சண்டை வலுக்கும்... அந்த நேரமாகப் பார்த்து அந்த அலுப்பிலிருந்து தப்பிக்கும் சாமர்த்தி சாலிகள். என்னடா இவங்க! எங்கயோ கொழுவிய சோலியநம்ம கடைக்கு முன்னால கூடிநின்று நடத்துறாங்க. பயப்பீதியோடு பொலீசுக்கு போன் பண்ணிவிட்டு ஒன்றுமே தெரியாத பாவியாட்டம் வெளிவந்த தமிழ் கடைக்காரன் குழுமி நின்ற அடாவடிகளின் அற் பத்தை அனுதாபமாக பார்த்து நின்றார். சண்டை கத்திகள், செயின்கள் தூக்கும் அலோங்கோல நிலைக்கு வந்தது.

நான்கு சந்திகளையும் மூடியவேகத்தில் பொலீசும் வந்து சூழ்ந் தது.

பொலீசக் கண்டதும் கையில வைத்திருந்த ஆயுதங்களை போட்டுவிட்டு ஓடவும் நழுவவும் முனைந்தவர்களை மடக்கிப் பிடித்தார்கள். அத்தோடு விட்டார்களா? பிரச்சனையின் முன்னணியும், பின்னணியும் தெரியாதா அப்பாவிகளும் அகப்பட்டுக்கொண்டார்கள். சினத்துடன் கிருசகெட்ட, கீழ்மட்ட சீரழிவப் பார்த்து நின்ற செபஸ்ரியாம்பிளைய. நோக்கி இரண்டு பொலிசார் வந்தார்கள். நெஞ்சு நிமிர்ந்த கைக்கட்டு விடுபட்டது, முழிகள் பிரண்டு கொண்டது. "நீ ஏன் இதில நிறிகிறாய்? இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவனா?" பேச்சு எழவில்லை.

"விசாவ எடு" யக்கற் பொக்கற்றுக்குள்ளிருந்து விசாவ எடுத்துக் கொடுத்தார்.

விசாவ பார்த்த பொலிஸ் சிரிச்சிட்டு "ஓ... நீயும் சிறிலங்கன் தான் ஏறு வானில", முதுகில பிடிச்சுத் தள்ளி ஏற்றினார்கள். ஊர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாய் பிடிகாரன்ற வண்டியில் எப்படியோ அதைவிடக் கேவலமாக இருந்தது. அவரைப்பார்த்து பரிதாபமாகக் ஒருவன் கேட்டான் "நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்?. கோபமும், எரிச்சலும், இதயத்தின் துடிப்பும், முகபாவத்தில் தெறித்து சோக, வேக ரேகைகளாக படர்ந்தது.

அண்டக்கிரவுன்ட் அறைக்குள்ள அடைக்கப் பட்டார்கள். இரவுத் தூக்கமும் துயரமும் எல்லோருடைய முகத்திலும் முஸ்திப் பாகி நின்றது. தமிழ் பொடியங்கள் பழக்கப்பட்டவர்கள் போல் அங்காங்கு சுவரோடும், வாங்குகளிலும் சாய்ந்து குறட்டைவிடத் தொடங்கினார்கள் அவரால் துங்க முடியவில்லை.? துயர் சூழ்ந்த துன்பக் கேணியில் மூழ்கியிருந்தார்" தூக்கம் எப்படி கண்களைத் தழுவும்? புகழ் பெற்ற மனிதர்களும் இதற்குள்ளா இருந்தார்கள்? குடலைப் புரட்டிக் கொண்டுயிருந்தது. அடைபட்டுக்கிடக்கும் அல்ஜீரியன், ஆபிரிக்கரின் எச்சில் துப்பல்களும், முகமெடுக்காத நாற்றமும். என்ன வாழ்க்கை சின்னஞ்சிறு கூட்டுக்குள்ள இவ்வளவு பேரையும் அடைச்சு வைச்சிருக்கிறானே? "எப்பத்தான் தன்னவிடப் போறாங்கள்" என்ற தவிப்பு மேலிட்டது.

பொலிஸ்காரன் செபஸ்ரியாம்பிள்ளை என்ற குரல் கொடுத்த படியே ரிமான்ட் கதவைத் திறந்தான். "வெளியவா" என்றான்.

வாசலைவிட்டு வெளிவரும் போது திரும்பி ஒரு பார்வை. அவங்கள் எல்லாரும் தூங்கிக் கொண்டே கிடந்தார்கள். அவரின் மனசுக்கு கஷ்டமாகப் பட்டது. விண்ணிலிருந்து மழை கொட்டிக கொண்டு இருந்தது விடிகாலை அழகு அடைமழையில் தெரிய வில்லை. நேரம் ஏழுமணி இருக்கும். பொலிஸ் ஸ்ரேசன் வாசல் படிகளை விட்டிறங்கி றோட்டுக்கு வந்தார். ஓர் இரவு வாழ்க்கை இன்னொரு முறை தேட வேண்டுமா? மழையில் நனைந்தபடியே நடந்தார்... "நான் சந்தித்தது பாதியுமில்லை இன்னும் சந்திக்க வேண்டியது அதிகம் இருக்கு" நடந்து கொண்டே இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துவேசம்

காலை நேரம்.

பெற்றிலிருந்தபடியே இரு கைகளையும் உயர்த்தி கண்கள் மூடிய உறுமலோடு சோம்பலை முறித்துக் கொண்டாள். அங்கு மிங்குமாக பார்வையை நாலு திசையிலும் துழாவவிட்டாள். அவர் களைக் காணோம்? மேசையில் இருந்த மணிகூட்டைப் பார்த்தாள். எட்டு மணியைப் தாண்டிக்கொண்டு இருந்தது. அந்தக் கனப் பொழுது நேரத்தில் தென்பட்ட திடீர்த் தெம்பு கட்டிலை விட்டெ ழுந்து பாத்ரூமிற்குள் போனதும் வெளிவந்தாள். மேசையின் கீழ் கிடந்த சப்பாத்தை எடுத்து மாட்டிக்கொண்டாள்.

"இவ்வளவு நேரமாகுது… இந்த மூன்று மூதேவிகளையும் இன்னமும் காணவில்லையே?"

யார் அந்த மூன்று மூதேவிகள்.? ஒன்று அவளது கணவன். மற்றது கறுத்தப் பூனை அதன் பெயர் 'மேறினா'. அடுத்தது வெள்ளை பொமேரியன் நாய் அதன் பெயர் 'சிடோனி' அவள் காலை எழுந்த தும் துள்ளிக் குதித்து வரும் மேறினாவின் சிடோனியின் கொஞ்சுதல் கிடைக்காத சித்திரவதைப்படும் மனசாக மாறியிருந்தாள். அக்குறுகிய நேரத்திற்குள் வீடு வெறிச்சோடிக்கிடந்தது. அவளது குருமணல் போன்ற அழகிய முகம் இரத்தினக் கற்களாகக் காட்சியழித்தது! கட்டுமஸ்தான தேகம் கனப்பொழுது நேரத்தில் வில்லிருந்து புறப்பட்ட அம்பு போலானது.

நாலு மாடிப் படிக்கட்டுக்களில் அவளது பாதம் பட்டதா? பாய்ந்தன! படபடப்போடு முதலாவது மாடிப் படிக்கட்டில் மிதித்து, தரித்து. நின்றாள். கீழிருந்து படிகள் மேல் மிக அழகாத் துள்ளிவரும் சிடோனைக் கண்டாள். அவளது உள்ளம் பொங்கல் போல் பொங்கி வழிந்தது. சிடோனும் தாயைக் கண்ட சேய் போல் ஆனந்தமாக வள்… வள் எனத் துள்ளிப் பாய்ந்தது. அவள் தன் இரு கரம் ஏந்தி பிடிச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சோடு அணைத்தாள். தன் கரங்களால் தட்டினாள். விரல்களால் சிடோனின் மயிர்களைக் கோதியபடி உச் உச்சென தன் சிவந்த இதழ்களைக் கூட்டி முத்தமிட்டாள். உடலில் இருந்த கோப உஷ்ணம் குளிர் வாடைத் தென்றலாகத் தனிந்தது.

"என்ன! எலிசபெத் இவ்வளவு கெதியில் வெளிய வந்திட்டா?" மேரினாவை நெஞ்சோடு அணைத்தபடி கேட்டு நிமிர்ந்தான் அவளது கணவன்.

"நான் நித்திரை விட்டெழும்பும்போது என்மீது பாய்ந்து வரும் குழந்தைகளைக் காணாமல் ஏங்கிப் போனேன்! இவ்வளவு நேரமும் எங்க வைத்திருந்தீங்க ஸ்ரனி," ஆச்சரியத்தோடு செல்லமான அதட்டலோடு கேட்டாள்.

"எனக்கென்ன! இதுகளோடு மினக்கட ஆசையா அதுக ளுடைய காலைக் கடன் முடிய நேரமாச்சு."

"அங்க இங்க சுத்தினதில மினக்கட்டுப் போச்சு. அதற்கு ஏன் இப்படித் துள்ளி மாயுறா?" கண்கள் பனிய ஏக்க பாவத்தோடு முகத் துக்கு முகம் முட்ட நின்றான்.

அவளும் பதறியது சிறதாமல் "ஒன்றுமில்ல.. ஸ்ரனி எல்லாம் சரிதான்.." என்றவாறு அவனது முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். பின்பு தனக்கே உரித்தான இழுப்புச் சிரிப்போடு சிடோனை இறக்கித் தட்டிவிட்டபடியே நிமிர்ந்து.. "ஸ்ரனி நான் ஒருக்கா என்ர கேஸ் விடயமாக லோயரை சந்திச்சிட்டு வாரேன்." சொல்லிக் கொண்டே படிகள் இறங்கினாள்.

"எத்தன மணிக்குத் திரும்ப வருவாய்?" கேட்டுக் கொண்டே படிகள் ஏறினான்.. "நான் பத்து மணிக்குள்ள வேலைக்கு இறங்க வேண்டும்" என்றான்.

இறங்கினவள் திரும்பி நிமிர்ந்து எரித்துவிடும் மதுரை நகர் கண்ணகிபோல் நின்றாள். "நான் என்ன படுக்கவா.. போறேன்? பக்கத் தில்தானே, போறதும் வாறதுமாக வந்திடுவேன்!" அதிகாரத் தொனி யில் ஆவேசமாகக் கத்திவிட்டு திரும்பவும் படிகள் இறங்கினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அங்கே! கனநேரம் மினக்கடாதே எலிசபெத்." சிறுகுழந்தைச் சிரிப்போடு, மேறினாவை இறக்கித் தட்டிகொடுத்தபடியே திரும்பி ஆந்தையின் பார்வையைத் தொலைத்து விட்டு நிமிர்ந்தான். மேரினாவும் – சிடோனியும் வீட்டுவாசல் கதவின் முன்னே நின்றன. இவர்களுடைய சண்டையும், சச்சரவுகளையும் தினமும் பார்த்த பிராணிகள்தானே பொறுத்துக் கொண்டன.

அவளது முகத்தில் எள்ளு வெடிச்சது. 'நான் அங்கு போறேன் என்றதும் கொஞ்ச நாளா.. இவன்ர பேச்சில நெழிவு–சுழிவு கனத்து வருகுது. என்னென்றுதான் ஒருக்காப் பார்க்கவேணும்.' தனக்குள் பொருமிக் கொண்டவள் வாயில் வந்த வார்த்தைகள் அவன் காதில் விழாதபடி இருகைகளையும் இறுக்கிப் பினைஞ்சபடியே. "என்ன ஸ்ரனி நான் இப்ப போறதா..? இல்ல உன்னோட மேல ஏறவா?" திரும்பிப் படிகள் ஏறும் ஆவேசத்தோடு திரும்பி நின்றாள்.

"அப்படி ஒன்றுமில்ல நீ! போயிற்று கெதியா வந்தால் நல்லது? சிடோனுக்கும் மேரினாவுக்கும் சாப்பாடு வைக்க வேணும் அதனால் தான் உடன் வரும்படி சொன்னேன்."

இருகைகளையும் மேல்லெழுப்பி "சாப்பாடு வைக்க பத்து மணித்தியாலம்தானே வேணும். இருக்கிற போனிய உடைச்சு வைச்சா அதுகள் தங்கட பாட்டில சாப்பிடுங்கள். இதுக்குப் போய் பிதுக்கிக் கொள்ளுறீர்" மினக்கட்டத நினைச்சு சீண்டிடும் சீற்றத்துடன் படிகள் இறங்கினாள். அன்று வெய்யிலின் கொடூரம் கொளுத்திக் கொண்டு இருந்தது. வழமையாகக் காரில பயணம் செய்யும் வழக்கமுள்ளவள். நடந்தே லோயர் வீட்டுக்குப் போனாள். போகும் நேரம் அவர் கோட்டுக்குப் போகும் நேரமாக இருந்தால் வெளியில் வருமுன் சந்தித்திட வேண்டும். என்ற அவசரம் அவள் மனதில் பதட்டத்தைக் கொடுத்தது.

வீட்டிற்குள் சிடோனும் – மேறினாவும் தங்களது இருப்பிடங்களில் விட்டு சாப்பாட்டை வைத்தான். அங்குமிங்கும் துழாவிட்ட பார்வையில் பதகழிப்புத் தென்பட்டது உடல் அவனை அறியாமல் நடுங்கியது. மனதில் விழுந்த கனப்பொழுது "சந்தேகம்" அவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் செல்லத் துண்டியது. யோசனைகள் பலவாறு தோன்றியது, முகத்தைச் சோகபாவனையில் வைத்துக் கொண்டான். கதவைத் தாழ் போட்டான்.

வெளியில் வந்தவன் அவசர அவசரமாக எலிசபெத் போன தார்றோட் நடைபாதை வழியாக நாக்குத் தெறிக்க நடந்தான். இல்லை ஓடினான். வீட்டிலிருந்து இருநூறு யார் கழிஞ்சதும் நான்கு சந்திகள். வலது பக்கமாகத் திரும்பும் றோட்டு நடைபாதையால் ஐந்து நூறு யார் நடந்தால் லோயர் குடியிருக்கும் வீடு சந்தியால் திரும்பியதும் நடையைத் தாமதப் படுத்திக் கொண்டான்.

லோயரும் எலிசபெத்தும் உரையாடிக்கொண்டு வீட்டு முன் வாசல் முன்நின்று கொண்டு இருந்தார்கள். சந்தேகத்தின் தீவிரம் லோயர் வீட்டு முன்ன நின்ற மறோனிய் மரத்தோடு ஒட்டிக் கொண்டான். ஒழிச்சு நின்றவன் பார்வையிலும், நினைவிலும் வேதனையும் வெட்கமும் கலந்து இருந்தது "என்னடா! இந்தச் சின்னத்தனம் சொந்த மனைவிய இப்படிப்போய் சந்தேகிக்கிறேனே! அவள்ர அழகும், குறும்புத்தனமும், நமக்கு இப்படியான இழிச் செயலைச் செய்ய வைக்குது." அவனது மனசின் கேள்வி...

"இந்தக் கரவுக்குக் காரணம் அவளா? இல்லை நானா?" சீ..சீய் என்றபடியே வாசலை நோக்கினான்.

லோயர் எலிசபெத்தை... அனைத்துக்கொண்டு நின்றார்.

மேலை நாகரிகத்தில் அணைப்பதும், கொஞ்சுவதும் பண்பாடு என்று நினைக்கலாம். அந்த அணைப்பில், கொஞ்சலில் அவன் கண்ட வித்தியாசம் சந்தேகத்தை தீவிரப்படுத்தியது. இதயத்தை பல ஈட்டிகள் தைத்தது. நின்ற இடத்தைவிட்டு பறந்தான். இதயத்துடிப்பின் வேகத்தி லும் வேகமாக வீடு வந்து சேர்ந்தான்.

வாசல் கதவு திறக்கும் சத்தம் கேட்டது சிடோனி பாய்ந்து அவன் நெஞ்சோடு ஒட்டிக் கொண்டது. அனைத்துக் கொஞ்சியவன் சிறிது நேரத்தில அதைக் கீழே இறக்கிவிட்டான். சிடோனி ஓடிக் குதுகழித்தது. மேறினா ஓடியது அவன்கிட்ட அவனது சீற்றம் பூனையின் சீறலிலும் மேலாக சினம் ஏறிநின்றது. தூக்கி வீசினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்துத் துன்புறுத்தினான். மேறினா சீறி ஒழிந்து கொண்டது. வாய் பேசாத ஜீவன் தன் எஜமான் கோபத்தை உணர்ந்ததுபோல் தன்கிட்ட வரும் போதெல்லாம் ஓடிப்பதுங்கத் தொடங்கியது. சிடோனி மேறினாவுக்கு நேர்ந்த கோரணியத்தைப் பார்த்து வள்... வள் எனக் குரைக்கத் தொடங்கியது. மேறினாவுக்கு சாப்பாடு வைக்காது ஓரவஞ்சனை செய்தான். ஒடுங்கிய மேறினா மூளையில் பதுங்கிக் கொண்டது. ஆறறிவு மனிதன் இரு கைகளையும் நெஞ்சில் கட்டிக்கொண்டு நிமிர்ந்து அங்குமிங்குமாக நடந்தான்.

சிடோனி தனக்கு வைத்த சாப்பாட்டை சாப்பிட்டுக்கொண்டு இருந்தது. என்ன துடிப்போ.. உணர்வோ சற்று நிமிர்ந்து மூளையில் பதுங்கிக் கிடக்கும் மேறினாவை கடவாய் வழி வீனி ஒழுக கூர்ந்து பார்த்தது ஒன்றாக வளர்ந்த நன்றியுள்ள பிராணி தன்ர சாப்பாட்டில கொஞ்சம் மிச்சம் வைத்துவிட்டு "வள் வள்" ளென்று கூப்பிட்டது. புரிஞ்சுகொண்ட மேறினா "மியா... மியா" என தாவிப் பாஞ்சு தட்டில் உள்ள சாப்பாட்டில் வாய் வைத்தது.

ஸ்ரனியின் கண்களில் நெருப்புப் பறந்தது. ஓடிய ஓட்டத்தின் மூச்சோடு மேறினாத் தள்ளிவிட்டு சாப்பாட்டு தட்டை ஜன்னல் வழியாக வெளிய எறிஞ்சான். அவனது அறிவுகெட்ட தனத்தை புரிஞ்சு சிடோனி குரைக்கத் தொடங்கியது. ஆத்திரத்தில் சிடோனிக் கும் இரண்டு போடல் போட்டான். "என்ன! நீ ஏசுறதா? போடா போ." என்றான். இரண்டு பிராணிகளின் கவனமும், கவலையும் ஸ்ரனியின் செயலை வெறுத்து நின்றன.

அவனது வாழ்க்கை நாடகத்தில் நடைபெறுவது மறைக்கப் பட்ட உண்மைகளுக்குள் அடங்கியிருப்பது அவள் ஒழுக்கம் சம்பந்த மான விமர்சனமே விளங்க முடியாத விபரீதக் கருத்துக்கள். கண் மூடித்தனமான செயலை செய்விக்கின்றது. அவனது நிறத் துவேஷம் மனித நேயத்தை பொசுக்குகின்றது. இரண்டு பிராணிகளும் பல வருடங்கள் ஒன்றாக அன்பாக வளர்க்கப்பட்ட நன்றியுள்ள ஜீவன்கள். பூனை மேறினா கறுப்பு என்பதாலோ நாய் சிடோனி வெள்ளை என்பதாலோ வேற்றுமைகள் காட்டப்படவில்லை? இன்று ஏன் இப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்குது? இந்த நாடகத்தின் காட்சி மாற்றம் என்ன என்பதைக் காணும் முன் காட்சியின் ஆரம்பத்தைப் பார்ப்போம்.

எலிசபெத் வேலை பார்த்த இடம் வாசனை பொருட்கள் உற்பத்தி செய்யும் பெரிய கம்பெனி. பத்து வருடங்களுக்கு மேலாக அங்குதான் வேலை செய்து வந்தாள். அவளுக்குத் திருமணம் செய்யும் நோக்கம் ஏற்பட்டது. அந்தக் கொம்பனியில் 'சேல்ஸ்மனாக' வேலை பார்த்த ஸ்ரனியைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டாள். திருமணத்தின் பின்பும் இனிதாகவே வாழ்ந்தனர். வேலைக்கு லீவு எடுத்தறியாதவள் உடல் இழைப்பும், சோர்வுமாக இருந்ததால் ஐந்து நாள் லீவுக்கு டாக்டர் மெடிக்கல் அனுப்பி யிருந்தாள். அந்த லீவு முடிந்ததும் இரண்டொரு நாள் வேலைக்குப் போகாமல் இருந்துவிட்டாள். எட்டாம் நாள் திங்கட்கிழமை காலை யில் பதிவுத் தபால் ஒன்று வந்திருந்தது. அக் கடிதம் வேலை செய்யும் இடத்திலிருந்து வந்தது என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டவள். பதட்டத்துடன் கடிதத்தைப் பிரித்துப் படித்தாள். அக்கடிதத்தில் இரண்டு வரிகள் மட்டும் எழுதப்பட்டு இருந்தது.

*'எலிசபெத் இனிமேல் இங்கு நீ வேலைக்கு வரவேண்டாம். உனது சகல விதமான கணக்கு வழக்குகள் கடிதம் மூலம் அனுப்பி வைக்கப்படும்.'* கடிதவரிகள் அவளது கண்களைக் கலங்கவைத்தது. எண்ணங்கள் ஏக்கப் பெருமூச்சாக மேலெழுந்தது. தன்னையறியாத மௌனத்தில். மௌனித்துப் போனாள். தன் கவலையீனம் இப்படி இசகு பிசகாகக் கொண்டு வந்து விட்டுட்டே! என்றெல்லாம் சிந்திக்கத் தொடங்கினாள். இத்தனை வருட உழைப்பிற்கு நன்றியற்ற வனாகப் போயிற்றானே! பத்தோரன் *(முதலாளி)* இவனுக்கு என்ர நன்றியக் காட்டவேண்டாமா? துயரத்தோடு எழுந்த இறுமாப்பு பக்கத்து வீதியில் குடியிருந்த லோயரைச் சந்திக்க வைத்தது.

லோயர் பிரபல்யமானவர். ஆனால் அவரது பிரபல்யம் நிறத் தால் கொஞ்சம் தாழ்ந்து இருந்தது. லோயர் ஒரு ஆப்பிரிக்கக் கறுப்பு நிறத்தவர். திறமையோ வெளுத்து வாங்கும் சிறப்பு. எலிச பெத்திற்கும் லோயருக்கும் இடையே வேலைவிடயமான சந்திப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக நெருக்கத்தையும் கொடுத்தது. முப்பத்தைந்து வயது தாண்டியவள். அழகு அச்சடித்துச் சொல்ல வேண்டிய அவசிய மில்லாதது. பெண்ணுக்குத் தேவையான மூக்கு, முழி, கூந்தல், குறும்பு, சிரிப்பு அவர்களது உடல் வாசி அந்த வெள்ளைத் தோலின் மகிமையை மெருகூட்டி நின்றது.

கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள் எலிசபெத் பதுங்கிக் கிடந்த மேறினா எழுந்து நின்றது. முன்னால் குதித்துப் பாய்ந்தது. வாரிப்பிடிச்சவள் தலையிலிருந்து முள்ளத்தண்டு முடியும் வரை தடவிக் கொண்டாள். சிடோனியிடமிருந்த உஷார் மேறினா விடம் காணமுடியவில்லை.

"என்ன ஸ்ரனி மேறினா ஒரு மாதிரி இருக்கு?" கேட்டுக் கொண்டு சிடோனியின் குரைச்சலுக்கும் துள்ளலுக்கும் கவனம் செலுத்தினாள்.

குசினிக்குள்ளிருந்து வந்தவன் "அதுக்கு மலாத் (சுகமில்லை)" வெறுப்பாகக் கூறியபடி இளிச்சான்.

"என்ன இளிக்கிறீங்க! காலையில நன்றாகத்தானே நின்றது? பரிதாபமாகப் பார்த்தாள் மேறினாவை.

சிடோனி "வள்... வள்" எனக் குரைத்தது.

அதன் பக்கம் திரும்பியவள். "உனக்கென்ன வந்திட்டு" செல்ல மாகக் கேட்டபடி மேறினா நெஞ்சோடு அமர்த்திப் பிடிச்சபடியே குந்திக் கொண்டாள்.

"அதுகளுக்கு ஒன்றுமில்ல உனக்குத்தான் விசர்!" சினத்துடன் சீறி விழுந்தான்.

எலிசபெத்தின் முகம் வெடித்துப் பிளந்த ரேகைகளாக வேதனைப்பட்டது. அதற்குள் சிடோனியும் பெலத்துக் குரைக்கத் தொடங்கியது. மேறினாவை கீழே இறக்கிவிட்டதும். சிடோனியின் குரைத்தலுக்கு ஏதோ ஒரு காரணம் இருப்பதாக அவளுக்குப் புலப் பட்டது. மேறினுக்கு ஏன்னமோ நடந்திருக்கு...! சாப்பாட்டுத் தட்டைப் பார்த்தாள். அந்தப் பார்வையோடு இருக்கும் இடம் தொட நடந்தாள். மேறினும் "மியா.. மியா"வென அழுதபடி முன்னோக்கிப் பாய்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் இரண்டுகால்களையும் தூக்கி சுரண்டியது. அவளும் புரிந்து கொண்டாள். பசி வந்தால்தான் மேறின் இப்படித் தவிக்கும். சீறும், சுரண்டும் என்பதை உய்த்தறிந்தாள். சிடோனியப் பார்த்தாள் அவர் நன்றாகச் சாப்பிட்டேன் என்று குரைச்சுக் காட்டியது துள்ளிக் குதித்தது.

மேறினாவுக்கு ஒரு ரின்ன வெட்டி சாப்பாட்டைத் தட்டில் கொட்டி வைத்தாள். மேறினா அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அவளது எரி பார்வை ஸ்ரனி மீது படர்ந்தது. சிடோனி இருவர் நடுவிலும் அன்னாந்து பார்த்தபடி நின்றது. இருவரது வாய்ச்சண்டை பலத்தது. சிடோனிக்கும் மேறினாவுக்கும் விளங்கியது இருவரும் துள்ளித் துள்ளி தலைய அங்கும் இங்குமாக ஆட்டி மகிழ்ச்சியை எலிசபெத்திற்குத் தெரிவித்தார்கள். சிடோனி தனது முன்னங்கால்களை எலிசபெத்தின் உயரத்திற்குத் துக்கி எழுப்பி குஷியாக நின்றது. நன்றி கெட்ட மக்களைவிட நாங்கள் மேலென்றது. இதனால்தான் பிள்ளைகள் பெற்றுக்காமல் நாயையும் பூனையையும் புள்ளைகளாக வளர்த்தாள்.

வளமையான காலை நேரம் எலிசபெத் அசதியாகத் துங்கிக் கொண்டு கிடந்தாள். சிடோனி வள்வள்ளென வாசலையும் கட்டி லையும் நாடி ஓடிக்கொண்டிருந்தன. மேறினும் தன்ர சேட்டையக் காட்டிக்கொண்டு திரிஞ்சது. வாய்பேசாத பிராணிகளின் காலை கடன் தீர்க்கும் நேரம் ஸ்ரனி எழுந்து பாத்ரூமில் அதிக நேரம் நில்லாது வெளிவந்தான்.

அலுமாரியத் திறந்து தனக்குப் பிடிச்ச ஆடையை அணிந்து கொண்டான். சுவரில் மாட்டப்பட்டு இருந்த ஆணியில் தொங்கிய சிடோனின் வெலிற்றை எடுத்து அதன் கழுத்தில் ஒரு முனையை மாட்டிவிட்டு மறு முனையை தன் வலக்கரத்தில் சுற்றிக் கொண்டான். கதவிற்குக் கிட்ட போனதும் மேறினும் துள்ளி பாஞ்சது. மின்னல் வேகத்தில் வலக் காலால் உதைஞ்ச உதையில் மேறின் ஐந்தடி பறந்து துடித்தது. சிடோனி அழத்தொடங்கியது. மேறின் அனுங்கியது. இதற்கிடையில் எலிசபெத் முழிச்சு எழும்பிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தம் கேட்டது. ஸ்ரனியின் மசும்பிய மூளை ஒன்றும் அறியாத பாப்பா போல வெகுளிச் சிரிப்போடு நின்றான்.

"என்ன! ஸ்ரனி இரண்டு ராஜாக்களையும் வெளிய கூட்டிப் போறீங்களா?" குரல் கொடுத்த படியே அவன்கிட்ட வந்தாள்.

"ஓம்! எலிசபெத் இரண்டையும் கொண்டு போய் வாறேன்!" கள்ளம் மறைந்திருந்தது. "நீங்க வரும்போது நான் நிற்கமாட்டேன்."

"ஏன் எங்க போறாய்?"

"இண்டைக்குக் 'கேஸ்' கோட்டுக்குப் போகவேணும் என்று தெரியாதா?"

"தெரியும்..தெரியும் போய் வா" அவனது அக்கறையற்ற தன்மை குரலில் வெளிப்பட்டது.

தலையைப் பொம்மையாட்டம் ஆட்டிக்கொண்டான். அவனது கையில் நெஞ்சோடு இருந்த மேறின் தலையை நீட்டி அவன் முகத்தைப் பார்த்து முறைச்சபடியே இருந்தது.

வீட்டின் கிழக்குப் பக்கமாக ஓடும் 'செயின் நதி' ஓரமாகத்தான் இவர்கள் உலாத்தலுக்குப் போவது வழக்கம். மேறின் மேலிருந்த வெறுபபும், கடிப்பும் மேன்மேலும் அதிகரித்தது. எலிசபெத் இண்டைக்கு அந்தக் கறுப்பனோட எந்த ரெஸ்ரோறன்றுக்குள்ள இருந்து சல்லாபம்.. ஆடுகிறாளோ? அல்லது எந்தப் பார்க், கொட்டலுக்குள் கிடக்கி றாளோ? என்ற மனத்தாங்கள் அவனை சித்திரவதை செய்து கொண்டு அரிப்பான் குஞ்சுகள் போல அரித்தது. அவனது மனச் சித்திரவதைக கும், கறுத்த பூனை மேறின்தான் பல கோரனிய வாதைக்கும், பச்சாதாபமற்ற படுபாதகச் செயல் பாடுகளுக்கும் உள்ளானது.!

மேறினாவ அன்பாகக் கூப்பிட்டான். அவன் மனத்தில் உள்ள அசிங்கமான அழுக்கைப் புரியாத வாயற்ற ஜீவன் துள்ளிக் குதித்து அவன் கையோடு ஒட்டியது. ஒத்தக்கை வயித்துப் பிடியோடு துக்கி உயர்த்தி நிமிர்ந்தான். அவன் கண்களில் தீப்பிழம்பு புகைஞ்சு எழும்பியது. மேறினாவின் கழுத்தை திருக வலக்கையப் பிசஞ்சான். சிடோனி வள்..வள் என்று குரைச்சுத் துடித்தது. சிடோனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலும், பார்வையும் அவனது இரக்கத்திற்கு அசைவற்றுப் போனது. மேறினாவும் அவனது கொடிய கரத்தைவிட்டுத் தப்பிவிடத் துடிதுடித்தது. அவனது மனசில் படிந்த ஆத்திர அவசர, நிறவெறி வாயற்ற ஐந்தறிவு ஜீவனைக் கொலை செய்ய ஆறறிவு தூண்டியது. எலிசபெத்தின் மேல் கொண்ட சந்தேகம் நிறத் துவேஷம் கொண்டு விஷ்வரூபம் எடுத்தாடியது. தூரத்தில் யாரோ வரும் சத்தம் கேட்கிறது!

சிறிது தயக்கம்… கையில ஏந்திய மேறினா தவிக்கிறது மிருகம் யார் என்பதை உணர்ந்து துடிக்கிறது. கையில் ஏந்திய மேறினாவை செயில் நதிக்குள் வீசி எறிந்தான். மனதில் பயம் நெஞ்சை அழுத்தியது, உடம்பு நடுங்கத் தொடங்கியது. வாயில் இருந்த மிச்ச எச்சிலையும் முக்கி விழுங்கினான்.

ஸ்ரனியின் செயல் கண்ட சிடோனி மேறினா நதிக்குள் இழுபட்டுச் செல்வதைப் பார்த்துக் குலறிக் குலறி பூமியில் புரண்டு துடித்தது. மேறினாவுக்கு நேர்ந்த கொடுமை பொறுக்க முடியாத சிடோனின் குரைச்சல் செயின் நதியோர சேன் மரங்களின் உச்சியில் பட்டுத் தெறித்தது, தன்னோடு கூட வளர்ந்த ஜீவன் கறுப்பு என்றதால் பட்ட அவஷ்ட்டைக்கு அளவேது? நதியின் இரைச்சலையும் மிஞ்சி சிடோனின் அழுகை அதிர்ந்தது. பார்க்கப் பொறுக்க முடியாதவன். பெலிற்றால் அந்த நன்றி உள்ளதுக்கும் அடித்தான். பின்பு தன் பாவத்தைக் கழுவ சிடோனைக் கட்டிப் பிடிச்சுக் கொஞ்சினான்.

இத்தகைய ஆண்மையற்ற இழிசெயலைத்தான் அவனால் அந்த இடத்தில் செய்யமுடிந்தது. உணர்ச்சி நரம்புகள் சுல் சுல்லெனச் சுண்டி இழுத்தன. பதற்றத்துடன் சிடோனின் இறுகக் கட்டிபிடித்த படியே வீடு வந்து சேர்ந்தான். சிடோனிக்கு அன்பாகச் சாப்பாட்டைக் கொஞ்சிக் குலாவி, என்ன வார்த்தைகளால் வசப்படுத்த முடியுமோ அத்தனை விதமான தாலாட்டுக்களையும் பாடி தன் பாவத்தை மறைக்கத் தூண்டினான். வாயற்ற ஜீவனிடம், சாப்பாடு சாப்பிடும் நிலையில் சிடோனி இல்லை, பொறுக்க முடியாதவன் வேலைக்குப் புறப்பட்டுச் சென்றான்…..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் போகும் வரையும் சிடோனியின் அழுகை நிற்க வில்லை. தன்னோடு ஒன்றாக விளையாடி, ஒன்றாகச் சாப்பிட்டு, உறங்கிய உற்றதுணையை இழந்த சோகம் வேதனைப் பெருமூச்சாக் வீடு அதற முழங்கியது. நன்றியுள்ள மிருகம். நன்றியற்ற மனித மிருகத்தின் செயல் துன்பத்தில் படுக்கச் செய்தது. கதவு திறக்கும் சத்தம் கேட்டது தனது எஜமானிதான் என்பதை புரிந்து கொண்டது, வள்வள்ளென்று குளறி அழுதது, வாலை ஆட்டி இரண்டு கால்களையும் தூக்கி அவளது நெஞ்சில் அடித்து குரைத்துத் துடித்தது. அவளது மனத் துடி—துடிப்பு என்னமோ! ஏதோ! நடந்திருக்கு! மேறினயும் காண வில்லை. இதயத்தை இழந்துவிட்ட வேதனை "மேறின்... மேறின்" என்று உரத்துக் கூப்பிட்டாள். சிடோனியும் "வள்... வள்" ளென்ற வீடு அதிரும் குரைச்சலை நிற்பாட்டவில்லை. பதட்டமடைந்தவள் பக்கத்து வீட்டு கதவுகளைத் தட்டித் தட்டி விசாரிக்கத் தொடங்கினாள்... எல்லோருடைய பதிலும் தெரியாது என்றே வந்து விழுந்தது. அவளது கண்களிலிருந்து கண்ணீர் பொல பொலவென உதிர்ந்தது. உதடுகள் உள்ளத்தின் துடிப்பைக் காட்டியது. முகத்தின் சுருக்கம் உணர்ச்சியை வேகப் படுத்தியது. சிடோனியின் கதறல் நரம்புகளை முறுக்கேற்றியது. இதயத்தைக் குமுறச்செய்தது. சிடோனியக் கட்டி அணைத்தபடியே கட்டிலில் சாய்ந்தாள்.

சிறிது நேரத்தில் கதவு திறக்கும் சத்தம் கேட்டது துடித்துப் பதைத்து எழும்பிய வேகத்தோடு எந்தவித தயவு தாட்சன்யமுமின்றி கேட்டாள். "ஸ்ரனி எங்கே! ஏன்ர மேறின்?"

"எனக்குத் தெரியாது" என்று முழுப் பூசனிக்காயையும் சோற்றுக்குள் மறைத்தான்.

"என்ன! தெரியாது? காலையில் நீதான் கூட்டிப் போனாய்?" வேதனைப் பெருமூச்சைத் தள்ளிவிட்டு எகிறி நின்றாள்.

"நான் இங்கதான் விட்டேன். அந்தச் சனியன் இந்த ஜன்னல் வழியாக பாஞ்சு தொலைஞ்சிருக்கும்". சிடோனி அவனது பொய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து "வள்... வள"ளென்று இரண்டுகால்களையும் தூக்கி அவளது மார்பில் அடித்தது.

"உண்மையைச் சொல் ஸ்ரனி! என்ன கொடுமை செய்திட்டாய்?"

"நான் என்ன செய்திட்டேன் எடியே உன்னைப் போல பொய் சொல்ல எனக்குத் தெரியாது?"

"என்னடா! நான் பொய் சொல்லுறேனா?"

"ஓமடி! அந்தக் கறுப்பனோட கொஞ்சித் திரியிறது எனக்குத் தெரியாதாடி. உனக்கொரு வெள்ளையன் கிடைக்கயில்லையாடி?"

"அது என்ர இஷ்டம் உனக்குத் தெரிஞ்சு என்னை என்ன பண்ணிப் புடுங்கப் போறீர்?" ஆத்திரத்துடன் ஓங்கி ஒரு அறை அவளது வலது கன்னத்தில்.

பதிலுக்கு அவளும் ஓங்கி அறைஞ்சாள். இது அவர்களுடைய பண்பாடு சாதாரணமான விடயம். "நமது தமிழ் பண்பாட்டின் பக்குவமும் தற்போது இந்த மேலை நாடுகளில் வாழும் தமிழரிடையே இந்தமாதிரியான தீய பழக்கத்திற்கு வரும் அபாயம் தென்படுகின்றது".

இருவரிடமும் பெலத்த வாக்கு–வாதமும் கைகலப்பும் இடம்பெற்றது சிடோனிக்கு இது சாதாரணமாகத் தோன்றியது. தினமும் பார்க்கும் வேடிக்கை என்பதால். எலிசபெத் பாவம் அவள்தான் என்ன செய்வாள். மேறினாவுக்காக அனுதாபப்பட்டு அழுதவள் ஸ்ரனியின் இன நிறத் துவேஷத்தைக் கண்டு வெட்கப பட்டாள். இன்றும் இந்த வேற்றுமை மறையவில்லை என்பதை எண்ணி வருத்தப்பட்டாள். கறுப்பனோடு பழகியதால் எனது செல்லமாக நான்கு வருடங்களுக்கு மேலாக அன்பைக்கொட்டி வளர்த்த மேறினா பட்டபாடுகளை நினைத்து விம்மி விம்மி அழுதாள்.

ஸ்ரனியோ விறுமனாட்டம் நின்று கொண்டவன் தன் முழி பிதுங்கிய பார்வையோடு உலவினான். எலிசபெத் இனிமேல் இவனோடு வாழ்க்கை நடத்தினால்.. நமக்கும் நஞ்சை வைத்துச் சாகடிக்கவும் தயங்க மாட்டான். என்ற பயப்புழுக்கம் அவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்கச் செய்தது. தன் பெட்டியை எடுத்து உடுப்புக்களை அடுக்கிக்கொண்டு வெளியில் வர ஆயத்தமானாள்.

வாசல் கதவைச் சுரண்டும் சத்தம் கேட்டது! சிடோனி முனந்துகொண்டு கதவின் முன்போய் குரைத்தது. எலிசபெத்தின் மனசில் மகிழ்ச்சிக்கல் உருண்டது. ஓடிப்போய் திறந்தாள்! நதியில் நனைந்த மேறினாவின் தோற்றம்! நடுங்கிக்கொண்ட ஜீவன் தன் எஜமானியக் கண்டதும் மியா..மியா என்று சந்தோஷத்தில் முகத்தைப் பார்த்து சீறியது.

மேறினாவைக் கண்டவளுக்கு ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்த மகிழ்ச்சி. துடி.துடித்துப் போனவள் துவாயால் ஆனந்தக் கண்ணீரோடு துடைத்தாள். திமிறான தெம்போடு! "ஸ்ரனி இனிமேல் நான் உன்னோட இருக்க விரும்பயில்லை. இன்றே! வெளிய போயிடுறோம்." ஒரு கையில் பெட்டியும் மறுகையில் மேறினும்மாக வாசல் கதவை வலக்காலால் திறந்தாள். அவர்களுக்கு முன் சிடோனி வழிகாட்டியது வள் வள்ளென ஸ்ரனியப் பார்த்துக் குரைச்சது நானும் போறேன்! உன்னைவிட்டு என்பதுபோல் மேறினப் பார்த்து இந்த மேறினுக்குக்கும் விடுதலை கிடைத்துவிட்டது. மூவரும் காரில் ஏறிக் கொண்டார்கள். சுதந்திரம் பெற்ற மகிழ்ச்சியில் பயணத்தைத் தொடர்ந்தார்கள்!.

சிறப்பு மலர்
25.12.1993.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவன்

"அம்மா உடம்பிற் ஏதாவது செய்யுதாம்மா?"

"ஒன்றுமில்லையம்மா மனசு பட படக்குது மண்டைக்குள்ள ஏதோயொரு உருண்டை உருண்டு கொண்டு என்னவென்றே தெரியல! இதெல்லாம் எங்கட அப்பாவல வந்ததுதானே?"

"என்னடி சொல்லுறாய்?"

"பிரான்சுக்குப் போய்சோந்ததும் கொஞ்சக் காசு அனுப்பினார். அதுக்கப்புறம் காசையும் காணயில்ல. கடி தத்தையும் காணயில்ல."

"அதுக்கென்னடி இப்பவந்தது உங்களுக்கென்ன குறைய வைச்சேன்?"

"நீங்க புருஷன விட்டுக்கொடுக்க மாட்டிங்க. நாங்க வெளிய படுறபாடு!" இவ்வார்த்தையைக் கேட்டதும் பதில் பகரவவில்லை. குந்தியிருந்தது. எழும்பிய வேகத்தோடு கைதான் உயர்ந்தது. பளா ரென்று கன்னத்தில் அவள் கைவிழுந்தது.

கண்ணகியின் கையிலிருந்த கால்சிலம்புக்கோலம்.

"போடி இந்த இடத்தைவிட்டு உள்ள போடி."

கோபத்தின் வேகம் கீழிறங்கும்முன் இரண்டாவது மகள். "அம்மா அக்காவ இப்ப ஏனம்மா அடிச்சீங்க?"

"அடிச்சா என்னடி?"

"அடிச்சாப்போல உங்க மனசில உள்ள பாரம் குறைஞ்சிடுமா அம்மா?"

அழுதபடியே மௌனமாகத் தலையக் குனிந்தாள்.

"அக்கா சொன்னதும் சரிதானம்மா".

"என்னடி சரி? தோளுக்கு நேர வளர்ந்திட்டாப்போல உங்கட பேச்சு நானும் கேக்கவாடி வேணும்."

"அவ வேண்டிக்கொண்டு போயிற்றா. தங்கைச்சி நீ வேற வக்காலத்துக்கு வந்திட்டியோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னம்மா உங்களப் புரிஞ்சுக்கவே கஷ்டமாகயிருக்கு?"

ஆத்திரத்தோடு மேலும் அழுதாள். "அம்மா நாங்களும் கொஞ்சம் வளர்ந்திட்டோம். எங்களோட படிக்கிற புள்ளைகள் தங்கட அப்பாமாரைப் பற்றி பெரிசா அப்படி இப்படி யென்று கதைக்கிறப்போ நாங்களும் பேசாமல் நிற்போம்."

"அவளுகளோட நம்மவீட்டுக் கதையென்ன வேண்டிக் கிடக்கடி உங்களுக்கு."

"அதனால்தான் ஊமையாக இருப்போம். அம்மா எங்களுக்கும் குடும்பக் கஷ்ரம் தெரியுதம்மா. தினத்-தினம் நீங்க 'சாமி படத்திற்குமுன்னும், இந்த வெளிவாசல் மூலைக்கையும் குந்தியிருந்து தலையில கைவச்சபடி தேம்பித் தேம்பி அழுவரைப் பார்த்து சகிக்க முடியலம்மா."

"முடியலயென்றா முகத்த மூடிக்கொண்டு போடி உள்ள."

கண்விரிய கண்ணீர் வடிச்சபடி இரண்டாவதும் நின்ற இடத்தைவிட்டுப் போச்சு.

"அம்மா எனக்குப் பசிக்குதம்மா எழும்பி வாயேன்". குடைஞ்சான் இளையவன்.

"பள்ளிக்கூடத்தால வந்ததும் வராதுமா சாப்பாடுதன் என்னமாட?"

"மத்தியானம் எப்படிப் பசிக்குமென்று தெரியாதம்மா?"

"பசிச்சா போடா போய்ப் போட்டு விழுங்கு".

விழித்த விழிகள் துடி துடித்துக்கொண்டன. கன நேரம் மௌனமானான். தாயிடமிருந்து உறுமலோடு உபத்திரவ வாதைக் குரல் அவன்மனதைத் தொட்டுக் கொண்டது. மெல்லமெல்ல தாயின் அருகே சென்றவன் முழந்தாளிட்டு. இண்டைக்கும் அக்காக்களோட சண்டையாம்மா புடிச்சீங்க?"

தலைய மெல்ல இல்லையென்று ஆட்டினாள்.

"இல்லாட்டி அப்பாவட கடிதம் இந்தவாட்டியும் வரயில்லையா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைய நிமிர்த்தி அவன் முகத்தைப் பார்த்து இதழை மூடி இழுத்தாள்.

"அப்ப ஏனம்மா என்னோட இப்படி எரிஞ்சு விழுகிறாய்?"

சின்னப் புன்னகை புதிதாக முளைத்தது. முகம்வேற கொழுக் கட்ட மாதிரி வீங்கிப்போய் இருக்கு.

சற்று நிமிர்ந்தவள் கதைப்பதற்கு உருவெடுத்தாள்.

"என்னம்மா வாய்திறந்து சொல்லேன்."

பாசத்தின் பரிதவிப்போடு தாயின் நெற்றியைத் தொட்டுத் தடவிப் பார்த்தான்.

புதிதான தேகச் சிலிர்ப்போடு திடுக்கிட்டவள். இதயத்தை ஊடுருவிய மகனின் இரக்கம்நிறைந்த சொல்லம்புகள் உணர்ச்சியோடு உசுப்பியது.

"மகனே அப்படி ஒன்றுமில்லையடா. அப்பாவட கடிதம் வரக்காணோம். அந்த யோசனையோடுதான் இதில குந்தியிட்டேன். நீ வாடா அம்மா உனக்குச் சாப்பாடு போட்டுத்தாரேன்."

சரஸ்வதியின் மனக்கருள் புகைஞ்சுகொண்டிருந்த பூகம்பம் புதல்வனின் அணைப்போடு புன்னகைப் பூத்துக் குலுங்கியது.

அடுத்தடுத்த நாட்கள் பயவுணர்ச்சியிலேயே கடந்துச் சென்றன. சரஸ்வதியின் கணவர் ஊரில் வாழ்ந்தபோது உயர்வான அரசாங்க உத்தியோகத்தில் காட்டுக்கந்தோர் பரிசோதகராக வேலைச் செய்து வந்தவர். ஜீப்பில் தினம் தினம் காடுகளைச் சுற்றிவிட்டு இரவில் நிதானம் இழந்த நிலையில் வருவது அவளுக்கும் பழக்கப்பட்டு விட்டது. சம்பளம் எடுக்கும் நாட்களில் கந்தோருக்குப் பக்கத்தில் உள்ள 'பார்' அங்க இங்கயென பிரிச்சுக்கொடுத்து மிச்சம்மிகுதிதான் சரஸ்வதியின் கைக்கு வந்து சேரும். மனம்கோனாமல் வாங்கிப் பழக்கப்பட்டது.

மனிசனக் காதலிச்சுக் கல்யாணம் முடிச்ச நாளிலிருந்து மூன்று புள்ளைகளைப் பெறும்வரைக்கும். நல்லா இருந்த மனிசன் உத்தியோக மாற்றத்தால். இந்தக் கன்றாவி விழுந்த காடு சுற்றுற வேலை எப்பதொடங்கியிற்றோ அன்டைக்குப் பிடிச்ச சனியன் பிரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுக்குப் போயும் விலகாமல் கிடக்கு. குடியாமல் இருந்த நாட்களக் கணக்குப்போட்டுப் பார்க்கலாம்! சரஸ்வதி அந்தநினைப்பை நினைத்ததே இல்லை. இன்றுவரை மனிசனோடு வாழ்ந்த நாட்களைத்தான் எண்ணி மகிழ்வாள். அத்தகைய குடும்பவிளக்கு கணவனின் வாழ்வில் ஒரு திருப்பம் ஏற்படுவதற்காக வேனும் புள்ளைகளின் எதிர்காலத்திற்காகவும்தான், அங்க இங்க கடன்பட்டு புலைக்கிற நாடாப்பார்த்து பிரான்சுக்கு அனுப்பிவைத்தாள். குடும்ப வாழ்விற்கும் உயிர்நாடியாக விளங்கினாள்.

மாநகர சபையில் கிளாக்காக தான் வேலை செய்துவரும் சம்பளப் பணத்திலும் மானத்தோடு வாழ்க்கையை கொண்டு செல்லும் ஓடமாக ஏற்றம் கண்டாள். இவளும் ஒரு சாதாரண பெண்தானே? இவள் வீட்டில் என்றும் ஒரு விளக்குப்போல் ஒளிவீசிக் கொண்டிருந்தாள். உடைந்து உருக்குலைந்த துயரத்தின் விளிம்பிலும். இனிதான ஒரு சிறு நம்பிக்கை அவளிடம் ஒழிஞ்சு இருந்தது..! தன் கணவன் என்றோ ஒருநாள் தன் சேவைகளையும், தான் பட்ட துன்ப துயரங்களையும் உணர்வான். அந்தத் துடிப்போடு தன் முகமும் புள்ளைகள் முகமும் நிழலாட உயிர்ப்புப் பெறுவான் என்ற ஏக்கம் தலைத்தாக்கமாகவும் இருந்தது.

திரும்பவும் வாசலில் தாயைக் கண்ட அரவிந்தன் "அம்மா இண்டைக்கும் அப்பாவட கடிதம் வரவில்லை யாம்மா,?"

தலையச் சொறிஞ்சபடி மௌனமாகத் தலை யாட்டினாள்.

"அம்மா அப்பாவட கடிதத்தை எதிர்பார்க்கிறீங்களா? காசைக் காணயில்லையென்று யோசிக்கிறீங்களா?"

"எனக்கெதுக்கடா காசு? மனிசன்ர சுகத்தை யறிந்து நாலு மாதமாச்சு ஒரு கடிதத்தையும் காணயில்லை"

"அம்மா அப்பாவட கடிதம் இண்டைக்குக் கட்டாயம் வரும்மம்மா."

தினறியவள் வேதனைய வெளிக்காட்டாமல் சின்னச்சிரிப்போடு "எப்படியடா. இவ்வளவு துணிவோடு சொல்லுறாய்?"

"நான் இராத்திரி கனவு கண்டேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அட துடுக்கா உன்ர' வாயில சக்கரையைக் கொட்ட "

"ஏனம்மா இப்படி சொல்லுறீங்க?"

"எனக்கும் மனசுக்குப்படுகுது கடிதம் வரும் என்று."

"இன்றைக்குப் பாருங்கோ மொத்தமாகச் சேர்த்து ஒரு காவியமே வரப்போகுது."

"என்ர செல்லமே நீ சொன்னது நடந்திட்டா அம்மா உனக்கு ஒரு லேங்கிசும்–சேட்டும் எடுத்துத் தாரேன்."

"உண்மையாகவா?"

வெட்கப் புன்னகைய இதழ்விரியாது இழுத்துவிட்டு கழுத்தச் சரிச்சு நடந்தாள்.

தாயின் சிரிப்பில் மூழ்கி எழுந்தவன் திடுமென உலுப்பியபடி கடிதம் வரும் என்றதுக்கே இந்தப் போடு போடுற அம்மா. அப்பாவே நேரில் வந்தால்! என்ன குசியாக இருப்பாங்க. நீண்ட சிரிப்போடு அரவிந்தன் வெளியேறி மறைந்து விட்டான். அவன் மறைந்து சொற்ப நேரம் தாண்டியிருக்கும் வீட்டு வாசல் முன் கிணு..கிணுங் சத்தம் கேட்டது. வேலைக்கு வெளிக்கிட சாறி நாரி யில் ஒரு சுற்றுமட்டும் போடப்பட்டிருந்தது. மிகுதிச் சாறியையும் வாரிச் சுருட்டிக்கொண்டு வேகமாக மானாட்டம் துள்ளித் துள்ளி பல்லு முப்பத்திரண்டும் இந்தாபார் என்பதுபோல் இதழ்விரிந்த பெரிய புன்னகையோடு வெளிய வந்து தபால்காரன்முன் முட்டநின்றாள்.

"அம்மா இதில கையெழுத்து வையுங்கோ."

"என்ர மகன் வாக்குப் பொன்வாக்குத்தான்."

"என்னம்மா பிதட்டிறீங்க?" என்றான் தபால்காரன்.

"ஒன்றுமில்லையப்பா." என்றவள் கையெழுத்தை வைத்து விட்டு கடிதத்தை வாங்கினாள்.

சிரிப்பால் சிவந்த அபிநய முகபாவம். சொட்டுச் சொட்டாக சோகபாவத்தால் கறுத்துக் கொண்டது. கடிதத்தை முன்னும் பின்னு மாகப் பிரட்டிப் பிரட்டிப் பார்த்தாள்! கண்கள அகலவிரித்தும் பார்த்தாள்... அவள் கணவன் கையெழுத்தில் விலாசம் எழுதப்பட வில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சி நரம்புகள் ஓட்டம் இழந்தன. முகத்தில் சலனமே அசைவோ, அற்று அமைதிகுடிகொண்டது. விராந்தாவில் கிடந்த சாய்வு நாற்காலியில் மல்லாக்காய் தொப்பெனச் சாய்ந்து கொண்டாள். எழுத்தினால் ஏற்பட்ட நடுக்கம் மட்டும் தீராது இருந்தது. பள்ளிக்கூடம் போவதற்கான ஆயத்தங்களோடு வெளியேற வந்து கொண்டிருந்த மூத்தவளைப் பார்த்தாள்.

"மகளே இங்கவா! இந்தக் கடிதத்த உடைச்சுப் படி!"

"பள்ளிக்கூடத்துக்கு நேரமாச்சு நீங்க பிரிச்சு படியுங்கோவேன்."

"எடியே நான் சொன்னதைச் செய். முதலில இதைப் படிச்சிட்டுப் போ."

தாயின் தவிப்பைப் பார்த்த பரிதாபத்தோடு தயங்கியபடி கைய நீட்டி வாங்கி நெஞ்சுக்கு நேர குத்திக்கொண்டிருந்த புத்தக அடுக்கின்மேல் விரித்து வைத்துப் படிக்கத் தொடங்கினாள்.

*அன்புடன் திருமதி சரஸ்வதி சுந்தரம் அவர்களுக்கு!*

*உங்களது சுகத்திற்கும் மனநிம்மதிக்கும் ஆண்டவன் அருள் புரிவாராக. இக்கடிதம் எழுதும் நான் யார் என்று நீங்கள் அறிந் திருக்கமாட்டீர்கள். சுந்தரம் அண்ணனுடன் ஒன்றாக விமானத்தில் வரும் போதுதான் எங்கள் நட்பும் தொடங்கியது. வந்தநாள் முதல் அவரது ரூமில்தான் நானும் இருக்கிறேன். இங்குள்ள எங்கட பொடியங்களுக்கு நல்ல ஒத்தாசையாக இருக்கின்றார். இருந்தும் அவரிடமுள்ள கெட்டப்பழக்கம் தினமும் மதுவைக் குடிப்பதுதான். குடித்தாலும் யாருடைய மனம்நோக நடக்காத மனிசன். 8.9.1992 சனிக்கிழமை காலம்புற படுத்துக் கிடந்து எழும்பும்போது இரும்மி னார். இருமலுடன் வாயால இரத்தம் கட்டிகட்டியாக விழுந்தது. நாங்கள் உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனோம். டாக்டர் இப்போது ஒன்றும் சொல்லமுடியாது வாட்டில இருக்கட்டும் என்று மறிச்சுவிட்டார்கள். இக்கடிதம் போடும் 'வரை வாட்டில்தான் இருக்கின்றார். நாடு இருக்கும்நிலையில் இக்கடிதம் உங்களுக்கு எப்பவந்து · சேருமோ என்பது எனக்குத் தெரியாது! அடுத்தபதில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கடிதம் சுந்தரம் அண்ணனின் சுகம் கண்டதும் அவரிடம் சொல்லி எழுதுகிறேன்.*

*நன்றி*

*இப்படிக்கு*

*உடன்பிறவாத் தம்பி*

*குணசீலன்.*

கனமாகயிருந்த புத்தகங்களின் கனத்தைவிட கடிதத்தின் சொல் வரிகள் ஒவ்வொன்றும் பாரமாணக் கற்களாக நெஞ்சில் கனத்தன. நிமிர்ந்தவள் அசை வற்றுக்கிடந்த தாயின் முகத்தில் உறைஞ்சு உருமாறிக் கிடக்கும் உணர்ச்சிகள எண்ணத் தொடங்கினாள்.

"அம்மா என்னம்மா ஒரு மாதிரியா இருக்கிறீங்?"

"எனக்கொன்றுமில்லையடி நீ பள்ளிக்கூடத்துக்குப் போ."

"சரி இந்தாம்மா கடிதம்."

வழங்காமல் இருந்த கையை உசத்தி வாங்குவதுபோல எழும்பி மெதுவாகக் கடிதத்தை வாங்கினாள். வேரையே ஆட்டிப் பிடுங்கிவிடும்போலிருந்த கடிதவரிகளின் பிரளயத்தில் மகன் சொன்ன ஆறுதல் வார்த்தைகள நினைத்துப்பார்த்தாள். பத்துப் பக்கத்தில் வரும் ஒரு காவியம் என்றானே பத்தே வரிகளில் பாவிமனிசன்ர பக்குவம் பரிதாபத்தோடு வந்திருக்கு.

"என்னைப்படைச்சவனே இன்னுமா என்னைச் சோதிக்கிறாய்?"

திரும்பவும் அவளும் ஒருமுறை கடிதத்தைப் படிக்க முற் பட்டாள்.

படிக்கின்றபோதே கண்களிலிருந்து குடம் குடமாகக் கண் ணீர் எம்நாட்டில் கண்ணீருக்குப் பஞ்சமில்லை தண்ணீருக்குத்தான் பஞ்சம்.

எவ்வளவுதான் தலையில் அடிச்சு அழுது கொண்டாலும் எண்ணங்களும் ஏக்கங்களும் நிலை தடுமாறிப்போகவும் இல்லை. சாகவும் இலலை. அவள் கணவனோடுதான் உயிர் வாழ்ந்து கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைக்குப் போக அவள் மனசு மசியவில்லை. இந்த நேரம் பார்த்து அவளது தாயின் தாய் அம்மம்மா வீட்டிற்குள் வரும்போதே புறு-புறுத்தபடி வந்துஉள்ளிட்டாள்.

"என்னடி சரஸ்வதி உன்ர புருஷன்ர கடிதம் காசு ஏதாவது வந்ததாடி?"

"இப்பத்தான் வந்தது அம்மம்மா."

"என்னவாம் எழுதியிருந்தான்?"

"சுகமாக இருக்கிறேன் காசும் அனுப்பியிருக்கிறேன் என்று எழுதியிருந்தார்?"

"எவ்வளவு காசடி அனுப்பியிருக்கிறான்?"

தன்னைத்தானே கிரகித்துக்கொண்டவள் "இனி வந்து சேர்ந்தால்தானே தெரியும்."

"என்ன பொய்யச் சொல்லுறீயோ எனக்கு ஒன்றுமாத் தெரியல்ல. உன்னையும் புள்ளைகளையும் நினைச்சுத்தானே இந்த சாகிற நேரத்திலயும் கவலையாக் கிடக்கு. குடிச்சா மட்டும் போதுமா? படிச்சளவுக்காவது புத்தியப் பாவிக்கிறதில்லையா? என்ர நெஞ்சில உங்களப்பார்க்கிற போதெல்லாம் முள்ளுக்குத்துற மாதிரி யிருக்கு." "அம்மம்மா நீ ஒன்றுக்கும் யோசிக்காதே குசினிக்குள்ள சுடுதண்ணிப் போத்தலில கோப்பி ஊத்தி வைச்சிருக்கிறேன் போய்க் குடியம்மா."

"நான் குடிப்பது இருக்கட்டும் 'அதெல்லாம் போக, இவ்வளவு நேரமாச்சு நீயேன் வேலைக்குப் போகாமல் இருக்கிறாய்?"

முழி பிதுங்கியவளாக "உடம்பிற்கு என்னமோ செய்யுது மாசக் கழிவு வேற வந்திட்டு."

"என்னடி சொல்லுறாய்? போனகிழமையும் சொன்னா மாசநாள் என்று! இந்தக் கிழமையும்"

"வந்தா உடம்பென்னத்துக்கு ஆகும்?"

"எனக்கென்ன தெரியும் நீங்கபோய் கோப்பியக் குடியுங்க."

"எல்லாத்தையும் மூடிமற. பின்னால என்ன நடக்கப் போகுதோ! எல்லாம் அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். சரி உனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசதியா இருந்தா படுத்துக்கொள் நான் வீட்டு வேலைகளப் பார்க்கிறேன்."

படுப்பதற்காகவா இந்தமாதிரியான பொய்யைச் சொன்னாள்? தனிமையில் தன் நிலமைய திரும்பிப் பார்ப்பதற்கே.

வீட்டில் மயான அமைதி குடிகொண்டிருந்தன.

மத்தியானம்வரை அவள் பார்க்கும் இடமெங்கும் நிலவியிருந்தது. சிறிதுநேரம் அசதியாகத் துங்கியவளை கெட்ட கெட்ட கனவுகள் வந்து தொல்லை கொடுத்தன.

பல்லி ஒன்று தலைமேல் செத்து விழுவதாகவும், தாலிய யாரோ பறிச்சுக்கொண்டு ஓடுவதாகவும், திடுக்கிட்டவளுக்குக் குலறியழவேணும் போலிருந்தது. நாவும் ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொண்டது. பயத்தால் வியர்த்த உடம்பும் படபடத்துத் துடித்தன.

அம்மா என்றழைக்கத் துடித்தவள் நாவெழுந்து நின்றபடி நிற்க...வாசலில் சையிக்கிள் கிணுங்...கிணுங் சத்தம் மேலும் ஒருபடி நடுக்கத்தைக் கொடுத்தது. இந்நேரம் பள்ளிக்கூடம் முடிஞ்சு புள்ளை களும் வந்து கொண்டிருந்தார்கள்.

தந்திக்காரனைக் கண்ட மூத்தவள் "அம்மா தந்தி வந்திருக்கம்மா."

தந்தியென்றதும் தக்கவைத்திருந்த கொஞ்ச நம்பிக்கையும் அவளிடமிருந்து பறந்து போனது.

"என்னம்மா ஒன்றும் பேசாமல் இருக்கிறீங்க?"

"வாங்கிக்கொண்டு உள்ளவாயேன்ரி."

முன்னால் வந்தவள் "வாங்கியிற்றேன் இந்தாங்கம்மா."

"என்னட்ட ஏன்ரி தாறா நீயே பிரிச்சுப் படியடி."

மூத்தவள் தந்திய படிச்சுமுடித்தாள்!

சிறிதுநேரம் ஒன்றுமே அசையவில்லை..?

எல்லோர் முகத்திலும் தந்தி வரிகளால் ஏற்பட்ட பயம்மட்டும் நிலைத்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் வெள்ளத்தில், கைம்பெண் கோலத்தில் அவள் கண்ணீரைத் துடைத்தபடியே "அம்மா! இனிமேல் உன் வாழ்வே நான்தான்!" திரும்பவும் கண்ணீரைத் துடைத்துவிட்டு அரவிந்தன் தாயின் இரு கரங்களையும் பற்றி எழுப்பி நிமிர்த்தினான்.

பாரிஸ் ஈழநாடு
06.12.1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமையும் இனிமையும்

விடியும் காலையும் முடியும் மாலையும் தெரிஞ்சுக்க மணிக்கூடுகளைத் தேடவேண்டிய தேசமாக்கிடக்கு. பிரெஞ் சுக்காரருக்கு சொத்துப் பற்றில்லாவிட்டாலும் குளிர்காலமும் கோடைகாலமும் மாறி மாறி வருவதில் தான் அவர்களது வாழ்க்கைக் குதுகலமே அடங்கியிருக்குது. பாரிஸ் நகரின் நடு மையத்தில் மாடி மேல் மாடியாக நிறைந்து கிடக்கும் கட்டிடம் ஒன்றில் ஐந்தாவது மாடி அறையில் குடியிருந் தார்கள் தேவன். லோகேஸ் எனும் இரண்டு நண்பர்கள்.

அவர்கள் இங்கு வந்து படுகிற பாடும் போதும். குளிரில் நடுநடுங்கிப் பல்லு மட்டுமல்ல... பிரெஞ்சுப் பாஷையைப் பேசமுடியாமல் சொல்லுமல்லவா வக்கி லடித்துக் கிடக்குது. புண்பட்டவனின் முனகல் குரலில் பேசியபடி அறைக்குள் அங்குமிங்குமாகக் கையைப் பிசைந்தபடி சப்புக்கொட்டியவனாகத் திரிந்தான். அவனுக்குப் போதும் போதும் என்று ஆச்சு. இங்கு வந்ததிற்குள் இப்ப கொஞ்ச நாளாக அவன் மனம் பட்டிருக்கும்பாடு நாய் படாதபாடாப் போச்சு. எத்தனை நாள் தலைமயிர் சீவினான் என்பதும்? முள்ளம் பன்றியைப் போல் சிலிர்த்துக் கலைந்த தலைமயிராகக் கிடந்தது. கண்களின் மிரட்சியால் புருவங்கள் துடிதுடித்தது. எதையோ இரங்கிக் கேட்கும் கண்களுமாகப் பொருமலை அடக்க முடியாதவனாகப் பய உணர்ச்சி தொனிக்க நின்றான் தேவன்.

மாடிப்படிகளில் ஏறி வந்து கொண்டிருந்த லோகேஸ் அறைக்கதவைத் திறந்ததும் நீண்ட பெருமூச்சை ஊதித்தள்ளியபடி. கதிரையில் அமர்ந்தான். தேவனின் கோலத்தை வெறுப்பான பார்வையில் நோக்கினான். தேவனின் நெஞ்சு இடியாய் மனசில் சோக சலனத்தை உண்டாக்கியது. யாருடையதோ அன்பாதரவின் சுகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்து நிற்பவன் போலத் தோன்றியது. இரவு பகல் வேலைப் பளு இதயத்தை அழுத்திய போதெல்லாம் முகத்தில் புன்முறுவல் மாறாதவனின் முகம் களைத்துத் தோன்றியிருந்தது. உடுப்பும் ஊத்தையாய் கசங்கிக் காணப்பட்ட சேட் பொத்தானைக் கூட பூட்டாமல் திறந்த மார்போடு அறைக்குள் மட்டுமல்லாது வெளிக்குளிரிலும் திரிகிறான். இப்படியான அவனது கோலத்தைக் காணும்போதெல்லாம் அதிருப்தியுணர்ச்சியால் அசந்திருப் பான். 'அவன் ஆடும் சந்நதம்' லோகேஸ் கண்களால் துழாவித் தேடிப் பார்க்க முடியாதிருந்தது. தன்னைத்தானே சுதாகரித்து கொண்டவனாக ஆத்திரத்தோடு ஆற்ற கடிதத்தைப் பார்த்தடா, தேவன் நீ இந்தப் பரதேசிக் கோலம் எடுத்து நிற்கிறாய்?

உம்மென்று முறைத்துப் பார்த்தபடி "வேறுயாற்ற கடிதத்தை, உனக்குத் தெரியாதது போல நக்கலாய் கேக்கிறாய்" என்று முகத்தில் அடித்தாப்போல் கேட்டான்.

குளிரூட்டிப் பெட்டியிலிருந்து இரண்டு பியர் போத்தலை எடுத்து, ஒன்றை லோகேஸிடம் நீட்டினான். அதை வாங்கியவன் அண்ணாந்து குடித்தபடி. அவனின் தவிப்பேறிய நய பாவத்தைக் கண்டு மெல்லச் சிரித்தான். "நான் இன்டைக்கு வேலையால வந்ததும் கொழும்பில் இருக்கும் உன்ர அம்மா அப்பாவுடன் ரெலிபோன் எடுத்துக் கதைக்கிறன். இதற்கொரு முடிவு இன்றிரவே எடுக்கிறேனா. இல்லையா பார்". நட்பின் தோழமையில் அவனை ஆரத்தழுவிக் கொண்டான். அவன் வெட்கம் கவிந்த முகத்தோடு தலையைச் சாய்த்தான். அவன் இதயத்தில் மறைத்து வைத்த நாதவெள்ளம் கனவு நிலையில் ஓடிக்கொண்டிருந்தது.

அவனையும் அறியாமல் உதடுகள் நடுங்கும் அவசரத்தின் அவசர அவசரமாக முணுமுணுத்த வார்த்தைகளைக் கேட்டு நின்றான் லோகேஸ். அவன் கனவில் உளறுகின்ற வார்த்தைக்ளைக் கேட்கும்போது லோகேஸின் இதயத்தைப் பிழிஞ்சு எடுத்தது. அவனது கால்கள் சல்லைப் போல் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென அமைதியடைந்தவனைப் பார்த்து "ஏன்ரா தேவன். வேலைக்குப் போகவில்லையா? வேலைக்குப் போகாமல் இருப்பது உனக்குச் சௌகரியமாகப் பட்டால் அதன்படி செய். எனக்கு வேலைக்கு நேரமாகுது நான் போயிற்று வாறன்". 'தாற்பரியம்' அவனது சொல்லில் தென்பட்டது. சுண்டிவிட்ட அவனது அன்பான வார்த்தையில் விழிப்புற்றவன் அவசர அவசரமாக வேலைக்குப் போக முழுமனமின்றி முயற்சித்தான்.

'பணக்காரனுக்குச் சொர்க்கம் கூடப் பற்றாக்குறை தான்', 'ஓரேயொரு மகன் என்ற பாசம்கூட அவனைப் பெற்றவர்களுக்கும் பணத்தின் மேல்தான்'. மாலதியை பிரான்சுக்கு எடுப்பதற்காக அனுப்பிய பணம் பல லட்சங்களாகும். பெற்றவர்களால் எந்தவித பிரயோசன மும் இதுவரை அவனுக்குக் கிடைக்கவில்லை. மாலதி கறுப்பி என்பதாலோ, சாதி குறைந்தவள் என்னும் காரணத்தாலோ பணமில்லையென்பதாலோ சொந்தத்தில் பந்தம் தேடவேண்டும் என்ற பிடிவாதத்தாலேயோ அவர்கள் இக்காரியத்தில் அக்கறையற்றிருந்தார்கள். நம் சமூகத்திடம் இன்னும் இந்தச் சீரழிவு அழியவில்லை. மேலும் பல வண்ணவடிவங்கள் எடுத்தாடுகின்றது. இச்சமூகம் எப்போது மாற்றம் காணும் என்பது இன்று உயர்ந்து நிற்கும் கரங்களின் கையில் தான் உண்டு.

தன்னுடைய சமூகத்தை நொந்தபடியே மாடிக்கட்டிடக் கதவைத் திறந்ததும். தெருவில் கால் வைத்தான். குளிர்ந்த ஈரம் படிந்த இலையுதிர்காலக் காற்று முகத்தில்பட்டதும் நெஞ்சில் தாங்கிக் கிடந்த சிந்தனை யிலிருந்து சற்றுத் துள்ளி நிமிர்ந்தான். உடம்பெல்லாம் குளிர் நடுக்கம் பரவிச் சிலிர்த்தோடியது. வானமண்டலத் தின் கருமேகக் கூட்டங்கள் ஒன்றையொன்று விரட்டிக் கொண்டு அடர்ந்து சென்றன. பாரிஸ் நகரப் பெரும் வீதிகளில் வாகன இரைச்சல் காதுகளைக் காயப்படுத்திக் கொண்டன. மனித சஞ்சாரம் கண்மூடித்திறக்கும் முன் காணாமல் போய்விடுகின்றன. வீடும் வீதியும் வேலையும் என அலைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுத்துப் போனான் உடலும் சோர்ந்தது. பயமும் அனுதாபமும் ஒருவனாகத் தவித்து நின்றான்.

அவன் கடிதங்களைக் காணாமல் திக்பிரமை பிடித்து திகைத்து நின்ற நாட்களையும் மாலதியின் கடிதம் எப்ப வரும் என்று ஏங்கியவன் அவளது அன்புக் கயிற்றால் கட்டப்பட்டுக் கிடந்தவன் என்ன முடிவுக்கு வருவான் என்பதறிந்து சூனிய இருள் படர்ந்தவனாக நின்றான். மனதில் என்றுமில்லாத தைரியத்தை வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொண்டான்.

"டேய் தேவன் ஊரிலிருந்து தான் உனக்குக் கடிதம் வந்திருக்கு."

அவனது உடம்பு சிலிர்த்துக் கொண்டது. முருகனின் மயில்மேல் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக ஆகாயத்தில் பறப்பது போன்று அவனுக்குப் பட்டது.

லோகேஸ். லேசாகச் சிரித்தபடி கடிதத்தை நீட்டினான்.

லாவகமாக வாங்கியவன் ஆனந்தக் களிப்பில் கண்களைச் சிமிட்டி தன் குறும்புத் தனத்தைக் காட்டினான். சிறிது நேரத்தின் பின்பு குரல் தணிக்க "இந்தாடா லோகேஸ். நீயே கடிதத்தைப் பிரிச்சுப்படி" கொடுத்துவிட்டு களிப்பு நிறைந்த கண்களுடன் தள்ளி நின்றான்.

கடிதத்தை வாங்கியவனின் முகம் நம்பிக்கையற்றுச் சுருங்கிச் சிலிர்த்தன. சமாளித்துக் கொள்வோம் என்ற தைரியத்துடன் கடிதத்தைப் பிரித்துப் படிக்கலானான்.

*அன்புடன் தேவன் அறிவது. உனது அன்பான கடிதங்கள் பல எனக்குக் கிடைத்தன. கடைசியாக வந்த கடிதவரிகள் என் மனதை ஆழமாகப் பாதித்துவிட்டன. வெளிநாடு என்று வெளிக்கிட்டதுமே இங்குள்ளவர்களை அதிகமாக மறந்துவிடும் ரகத்தைச் சேராக உனது மனவைராக்கியத்தைப் பாராட்டுகிறேன். இருந்தும் என் நாட்டைப் போன்ற இடத்தை எங்கும் நீ காணமாட்டாய். மனிதனிடம் பாசம், நேசம், காதல் என்பதெல்லாம் பிரிவில்தான் உயிர் உருகி விரிவடைகின்றது. இவ்வேளை யில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*என் முடிவு கண்டு தனித்து வாழ்வதிலும் தூய்மை தவறாத துணிவு வரவேண்டும். என் தாய்நாட்டு மக்களின் துன்பதுயரங்களோடு ஒன்றாகக் கலந்து விட்டேன். மண்ணை மீட்கும் புனிதமானவர்களுக்குச் சேவை செய்வதே என் இலட்சியமாகும். அவர்களோடு வாழ்ந்து கலந்து என் உயிரும் பிரிய வேண்டும். அவர்களையெல்லாம் விட்டு அஙகு வரும் சௌகரியம் எனக்கில்லை.இந்த இக்கட்டான நேரத்தில் மண்ணையும், மக்களையும் நேசிக்சாதவர்கள் மனிதப் பிறப்பே இல்லை. நமது காதலை இன்றும் நேசிக்கிறேன். அதே வேளை என் மண்ணின் சுதந்திரத்தை மேன் மேலும் பூஜிக்கிறேன். நான் அங்கு வரவேண்டும் என்பதைவிட நீ இங்கு வருவதையே நான் விரும்புகிறேன். அந்த நாள் நாம் காதலர்களாக அல்ல, தம்பதிகளாகவே தாயக மீட்பில் பங்கெடுத்துக் கொள்வோம். இம் முடிவின் மூலம் இததனிமையும் இனிமை தரும் என்ற என் நினைவோடு வாழ்ந்து, விரும்பியது போல் புனித மண்ணில் கால் பதிப்பாய்.*

*அன்பின் மாலதி*

அவன் முகம் ஆனந்தத்தால் பரவசப்பட்டதுடன் அவன் குரல் உச்சநிலையில் கணீரென்று ஒலித்தது. மாலதி என்னுயிர்க் காதலியே. உன்னோடு திருமண உறவில் ஒட்டும் நாள்முதல் என் தனிமையும் இனிமைதான். உன் இலட்சியம் உன் முடிவின் தெளிவு என் கண்களை மட்டுமல்ல. இங்கு பலா் கண்களைத் திறந்துவிட்டன. அவன் தோற்றமோ புதுவிதமான அமுதமான ஒளித்தோற்றம் கண்டது. அவனை லோகேஸ் உயிரற்ற கண்களால் வெறித்துப் பார்த்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் பாலன் பிறப்பாரா?

தமிழீழத்தை பேரினவாதப் படைகளும் அயல்நாட்டுப் படைகளும் குவிந்து பேரழிவினை விதைத்த போதெல்லாம் விறுமனாட்டம் ஊரைவிட்டு உசும்பாத சனமெல்லாம் தலைதெறிக்க ஓடித் தப்புவோம். உயிர் பிழைச்சாப் போதும் உடமைகள் என்ன நாசமாய்ப் போனாலும் போகட்டும் என்று மூட்டை முடிச்சுக்களுடன் ஊர்மாறி ஊர் போய்க்கொண்டிருந்தனர். படுபாவிப் படைகளின் விளைவு தெரிந்த பொடியங்களும் சனங்களை யாழ குடாநாட்டை விட்டு வெளியேற்றிக்கொள்ளவே பணி புரிந்தார்கள். கடலோரக் காற்றோடு மழையும் வீசிக்கொண்டிருந்தது. பல்லாயிரம் சனங்களின் இரைச்சலும், இரங்கலும் விம்மலும் அழுகுரலும் கிளாலிக் கடலோரம் முழங்கிக் கொண்டு சோகச் சுமைகளின் வேகத்தை எடுத்துக் காட்டின.

கடலோர சன நெரிசலுக்கிடையில் மரியாளும் மார்ட்டினும் இரண்டு பச்சைக் குழந்தைகளைச் சுமந்த வண்ணம் பெரும் மழையில் நனைந்தபடியே குழந்தைகளை நபர் சீற்றால் மூடிமறைத்தபடி மரியாள் கையில் ஒரு மூங்கில் கூடையும், மார்டடின் கையிலொரு மூட்டையுமாக நிர்க்கதியற்ற நிர்பந்த தடுமாற்றத்தோடு நின்றனர்.

நேரமும் பத்துமணியைத் தாண்டிக்கொண்டிருந்தது. கச இருட்டு வகை சொல்லமுடியாத நெருக்கம். மரியாள் தனது கைப்பிடி பிசகாது தொங்கிக் கொண்ட மூங்கில் கூடையின் பாரம் தாங்காது தொப்பென்று கூடையை தன் காலடி அருகில் போட்டு விட்டு நிமிர்ந்தாள்.

கிறிஸ்மஸ் பண்டிகைக் காலம் வாறதும் போதும். இந்த அழிவான் ஆமிக்காரன்ர தொல்லைக்கும் ஓர் அளவேயில்லை. வருஷம் தப்பாது வெள்ளிடியாகவே கிடக்குது. அவளின் முகத்தில் கவலையின் ரேகைகள் வீங்கி வெடித்து விடும் போலிருந்தது, தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையிலுள்ள இரண்டு வயதுக் குழந்தையைப் பார்ப்பதும், அடிக்கொருத் தடவை மார்ட்டினின் தோளில் தூங்கும் நான்கு வயது குழந்தையின் றபர் சீற்றை கிளப்பிப் பார்ப்பதுமாக நின்றாள்.

மழையின் வேகம் தணிவதாகப் படவில்லை. கடல் அலைகளும் கொந்தளித்துக் கோவெனக் குமுறிக் கொண்டன. போராளிகள் சனங்களை ஒழுங்காக அக்கரைக்கு படகுகளில் ஏற்றியனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

நேரமும் நடுச்சாமம் பன்னிரண்டு மணியைத் தாண்டியது. கடலோரத்தில் ஆங்காங்கு ரோச் லைற்றுக்கள், வானத்து நட்சத்திரங்களைப் போல கண்சிமிட்டிக் கொண்டன. மார்ட்டினும் தன்னோடு வைத்திருந்த ரோச்லைற் ஒளியில் மரியாளையும் குழந்தைகளையும் கவனித்து வந்தான்.

கடுங்குளிரை சனங்களின் மூச்சு வெட்கை ஓரளவு தணித்துக் கொண்டிருந்தது. திடீரென மரியாளின் கைக்குழந்தை வீரிட்டு அழத் தொடங்கியது. அவள் பாடு பெரும் திண்டாட்டமாகிவிட்டது. மத்தியானத்திலிருந்து ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வாயில் பட்டறியாத குழந்தையின் வீரிட்ட அழுகையைக் கேட்டதும் பதகழிச்சுப் போனாள்.

*"செல்வமே அழாதடா கண்ணுறங்கு!*
*கடும் மழை பெய்யுதடா கண்ணுறங்கு!*
*புள்ளயக் கொல்லுற ஆமிக்காரன் வாறான்ரா கண்ணுறங்கு!*
*நம்மட ஊரைவிட்டுத் திரத்திறான்ரா கண்ணுறங்கு!*
*நம்ம வாழ்வே அவலமாப் போச்சு கண்ணுறங்கு!"*

குழந்தை மேலும் மேலும் வீரிட்டு அழுதது. குழந்தையழுத சத்தத்திற்கு ஒத்தூதியது போல் மழையும் காற்றும் சற்று அடங்கித் தூவானம் தொடர்ந்தது. றபர் சீற்றை கிளப்பிக் கொண்டு எழுந்தான் மார்ட்டினின் தோளில் கிடந்த மற்ற மகன்.

விழி பிதுங்கக் கண்டவள். "என்னங்க தூவானம் அடிக்குது. புள்ளைக்கு தூவானம் படக்கூடாதுங்க றபர் சீற்றை நல்லா இழுத்து மூடிவிடுங்க."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி வாய் மூடும் முன்னம் அவள் கையிலிருந்த குழந்தை வீரிட்டுத் திமிறியது. முகத்தை மறைத்த சீற்றை விலக்கி விட்டுப் பார்த்தாள். குழந்தையின் முகம் சிவந்து வந்தது. கலங்கியவள் குனிந்து தன் காலடியில் வைத்த மூங்கில் கூடையைத் தேடினாள்.

பின்னும் முன்னும் பார்த்து விட்டு நிமிர்ந்தவள் தலைதெறிக்க தேகத்தை உலுப்பிக் குளறினாள். "என்னங்க, இங்க வைச்ச நம்மட கூடையைக் காணவில்லைங்க."

"மரியாள் ஏன் இப்படிக் கத்துறாய்?"

"என்னங்க, புள்ளைகளின்ர சாப்பாடும் அதுக்களதானுங்க..."

"இங்கினதான் இருக்கும். பொறுமையாய்ப்பாரு. நாமென்ன ஓரிடத்திலா நிக்கிறோம்? சனத்தட நெரிசலில தள்ளுப்பட்டு எங்கேயோ வந்திட்டம். நீ தவற விட்டிருப்பாய்."

"இல்லைங்க. நான் தூக்கிக் கொண்டுதானே வந்தனான். என்ர உசிரே அதுக்குள்ளத்தான்."

"என்னடி மரியாள் சொல்லுறாய்?"

"ஆமாங்க. நம்ம பிள்ளையளுக்கெண்டு இரண்டு ரொட்டியும் சர்க்கரையும், பால் கொஞ்சமும் வைச்சேன்."

"ஐயையோ எந்தக் களவாடி மகன். கொல்லையில போவான். எடுத்தானோ தெரியவில்லையே" அவளது கண்ணீர், விடாது பெய்த பேய் மழையையும் மிஞ்சியது. பக்கத்தில் நின்றவர்கள் இரக்கத்தோடு விசாரித்தார்கள்.

குழந்தைகள் இருவரும் சேர்ந்து அழத்தொடங்கினர். மார்ட்டின் மூட்டை முடிச்சோடு நிற்பவர்களை துளைத்துக் கொண்டு சென்றான். ரோச்லைற்றோடு திரும்பிய பார்வையில் ஒரு விநாடி ஸ்தம்பித்து நின்றான். அலரி மரத்தடியில் எலும்பும் தோலுமாக குந்தியிருக்கும் கிழவனை நேர்குத்தப் பார்த்தான்.

பல நாள் பட்டினியில் படுத்துறங்காது தோலுரிக்கப் பட்ட துயர வடுக்களைச் சுமந்து. சோகம் கப்பிய முகத்தின் முறுவல் இழந்து சாறத்துடன் தோளில் ஒரு துண்டுமாகக் குந்தியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூங்கில் கூடையும் அவர் அருகில் இருந்தது. கூடையைக் கண்டதும் டவர் அருகே எட்டிய நடையோடு வில்லென போனான். இடது பக்கமாக மரியாள் புலம்பிக்கொண்டுத் திரிந்தாள்.

"பாலன் பிறக்கப் போறார்? எங்களுக்கு எப்பத்தான் நத்தால் பிறந்தது? இந்தச் சிங்களப் படைகளுக்கு ஒரு பேரழிவைக் கொடுக்கிறாரில்லை எங்கசம் வதைபடும் அவலத்தைப் பார்த்து இரங்கிற பாலன் என்றுதான் பிறப்பாறோ?" அவளது உதடுகள் துடித்தன. அடிவயறு அனலாய்க் கொதித்தது. முகத்தில் கப்பிய துயரம், துாவதனம்பட்டு அருகில் நின்றவர்களையும் கண்கலங்க வைத்தன. மரியாள் அருகில் தென்பட்ட வயது முதிர்ந்த தாயைப் பார்த்து விம்மி, விம்மி அழுதபடி கேட்டாள். "அம்மா யேசு மீண்டும் பிறப்பாரா?"

"மகளே நான் சைவக்காரி. ஏன் மகளே என்னட்ட இப்படிக் கேக்கிறாய்?"

"இல்லையம்மா இத்தனை கொடுமைகளையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்தச் சிங்களப்படையை அழிக்க ஒரு நாள் மோயீசன் கால நெருப்பு மழை பெய்யாதா?"

கிழவனுக்குக் கிட்டப் போன மார்ட்டின் தளதளத்த குரலில் இரக்கத்துடனும் போலிக் கோபத்துடனும் அதட்டிக் கேட்டான்.

"அப்பு இந்தக் கூடைய எங்கயிருந்து எடுத்தீங்க?"

கண்களைச் செருகி தலை நிமிர்த்திப் பார்த்தார். "தம்பி நான் பொய்சொல்ல மாட்டேன். அந்தா பாரு ஒரு லாம்பு வெளிச்சம் தெரியுது. அதுக்குக் கிட்ட இருந்து தான் எடுத்தேன் தம்பி."

"இந்த இருட்டுக்கே எப்படி கண்டெடுத்தீங்க? என்னத்திற்காக எடுத்தீங்க?"

"பசி... பசி மாங்க முடியாமல் கண்களும் மங்கிப்போச்சு ராசா. இந்த உடம்பைக் கொண்டு நிற்க முடியாமல் அங்க இங்க கத்திக் குனிஞ்சபடியே வந்தன். அந்த லாம்பு இவளிச்சத்தில் இந்தக் கூடைதான் கண்ணில் பட்டது. சாப்பிட ஏதாவது இருக்கும் என்ற பேராசைதான். களவாகத் துாக்கி இங்கை கொண்டு வந்தேன்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவனை பார்க்கும்போது பலநாள் பட்டினி கிடந்தவரைப் போலிருந்தது. மார்ட்டினும் இரக்கம் மேலிட இறையொளிப் பாலகனை வேண்டிக் கொண்டான். இந்நேரம் துடிக்கின்ற பாலகருக்கு பருகப் பால் எந்தக் கடவுள் கண் திறந்து காட்டப் போறார்.

"அப்படி அதுக்குள்ள கிடந்த எல்லாத்தையும் எடுத்துத் திண்ணுட்டீங்களா?"

"அந்த அளவுக்கு அற்பன் இல்லை மகனே!"

"தொப்புள் குழியைத் தாண்டும் அளவு முறுக்குச் சங்கிலிப் போட்டு வெளிச்சம் நிறைந்த பெரிய கல்வீட்டில் வாழ்ந்த நான், என்ர புள்ளைகளையும், பேரன் பேத்திகளையும் எங்க தேடுவது என்று தெரியாது தவிக்கிறேன். செத்துப் போற இந்தக் கட்டைக்கு ஏன் மகனே இந்தளவு பேராசை?"

கிழவன் நடுக்கத்தோடு சொன்ன அந்த வார்த்தைகள் அவன் நெஞ்சமேட்டில் விழுந்த வேதனைக் கற்களாக இருந்தன. பொறுமை, பொறுக்கமுடியாது நின்றவன் "அப்பு இந்தக் கூடையைத் தாறீங்களா?"

"இந்தா மகனே! உன்ரதான் என்றால்" நீயே எடுத்துக்கொள். இந்தக் கூடைக்கே காசு பவுன் இருக்குது போல கிடக்கு. அதில ஒன்றையும் நான் தொடயில்லை. இவை இப்பயிருந்து என்ன ஆகப் போகுது? என்ர பசிக்கு றொட்டியும் சக்கரையுமே தேனமுதானது."

"அப்பு அதுக்குள்ள இருந்த பால்புட்டிப் பாலையும் நான் குடிச்சிட்டன் பசி வந்தாப் பத்தும் பறக்கும் என்பாங்க தம்பி."

கிழவன்ர கதையிலை கனத்த மனசு, கோபத்தை ஊட்டிய போதிலும் அமைதியாக மனதைத் திடப்படுத்திக் கொண்டான். துயரங்களை ஏற்று, தியாகங்களை சுமக்கிற, தன் மக்கள் இனத்தை நினைத்துக் கொண்டான். வறுமை எப்போது வந்தது? கொடிய பேரினத்தின் படைபெடுப்பிலும் அழிவிலும் அடக்குமுறைக்கு அஞ்சி எகிப்திற்கு தப்பி ஓடுவதிலும் வந்தது. கொடுமைக்கு முடிவு என்பது உண்டு என்பதும் தெள்ளத் தெளிந்த உண்மைதான். தத்துவம் பாய்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சில் மரியாளும் குழந்தைகளும் நிழலாடினர். அந்தப் பாரச் சுமையிலும்.

"அப்பு இந்த இடத்தைவிட்டு என்னோட வாருங்க. அடுத்த படகில அக்கரை போய்ச்சேருவோம். கமக்கட்டுப் பிடியோடு இடதுகைத் தாங்கலோடு எழுப்பி நிறுத்தினான்.

வலது கையிலிருந்த நான்கு வயதுக்குழந்தையின் எடையிலும் குறைவாகத்தான் இருந்தார். மழை பெய்து மண்ணிலிருந்து எழும் குளிரும் கடல்காற்றின் கனப்பும் கிழவனின் உடல் நடுக்கத்தோடு ஒன்றித்து கிடுகிடாப் போட்டன. மரியாள் கிட்ட வந்ததும், கிழவர் பற்றிய விடயத்தை மார்ட்டின் தன் மனசுக்குள்ளே மறைத்துக் கொண்டான்.

மரியாள், திமிரோடு கூடை கிடைச்ச அற்ப ஆவேசத்தோடு "யாருங்க நம்மட கூடையைக் களவெடுத்தது?"

கிழவனை ஏறிட்டுப் பார்த்த மார்ட்டின் முகபாவத்தால் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். மௌனமாக சிரித்தபடி, மரியாள் தன்மகன் பட்டபப்பாடுகளை கோரணிய வாதைகளையெல்லாம் பொறுத்துக் கொண்ட இரக்கத்தின் இராக்கினியவள்! நம்ம ஊர்களில் எத்தனைபேர் விதவைகளாக அழுதுப் புலம்புகிறார்கள். பிள்ளைகளையும் இழந்து, புருஷன்மாரைத் தேடி எத்தனைபேர் வீதிகளில் அலைகின்றார்கள். அவர்களுடைய தியாகங்கள், பொறுமைகள், பெருமைகளை நாமும் மறந்துவிடக் கூடாது.

கிழவன் விம்மிவரும் அழுகையின் வேகத்தை அடக்கியபடி வந்து விழுந்த மார்ட்டினின் வார்த்தைகளைக் கேட்டு துடியாய்த் துடித்தார். கட்டிப்பிடித்து குளறியழவேணும் போல கிழவனுக்கு தோன்றிற்று. "என்ன இந்த மனிசன் இந்த நேரத்தில் நின்று தத்துவம் பேசுது". ஆத்திரத்தோடு கையிலிருந்த கூடையை இழுத்துப் பறிச்சாள். ஆவேசத்துடன் கூடைக்குள்ளிருந்த சமான்களை கிளப்பி கிளப்பி தேடினாள். அவள் வைத்த பொலித்தீன் பையையும் காணவில்லை. பால்புட்டியையும் காணயில்லை. காசு பவுன் பற்றிய சிறிய சிந்திப்பும் அவள் மனதில் துளியும் இல்லை. குழந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கென்று வைத்த ஆகாரம் போச்சு. குழந்தையோடு நெஞ்சி லடித்து புலம்பினாள். மணலில் அப்படியே சப்பாணமாய்க் குந்தி பட்டு மணலை அள்ளித் திட்டினாள். மணல் பறந்த இரவு நேர மண்நட்சத்திரமாகக் காட்சியளித்தது. தன் முந்தானைத் தலைப்பை தூக்கி எறிஞ்சுவிட்டு, பிளவுசைக் கிளப்பி தன் இரண்டு முலையையும் திருகினாள். முலையிலிருந்து பால் சுரக்கும். அவள் கடைசி நம்பிக்கையும் விடுபட திருகிற முலையிலிருந்து இரத்தம் கசிந்தது. மரியாளின் கோரணியத்தைக் கண்கொண்டு பார்க்க முடியாது மார்ட்டின் அருகில் நின்ற மனிசருக்குள் மறைந்து விம்மிச் செத்து உயிர்த்தான்.

"ஐயோ... மகளே இந்தப் பாவிதானம்மா, அதையெல்லாம் எடுத்தித் திண்டிட்டன். என்னை இந்த இடத்திலேயே வெட்டிக் கொண்டு போட்டிடம்மா". அவளருகிலிருந்து புலம்பிய கிழவனின் நடுங்கிய குரல் அருகில் நின்றவர்கள் கண்களையும் பெரும் மழைக்குட்படுத்தியது.

திமிரோடு எழுந்த கிழவன் "மகளே கொஞ்சம் பொறம்மா. இங்கின யாரட்டையாவது கையேந்தி பிச்சை கேட்டாவது கொஞ்சப் பால் வாங்கி வாறன்."

கிழவன் ஒரு கோப்பைப் பாலோடு வரவும். அவர்கள் படகில் ஏறவும் நேரம் வந்தது.

குழந்தைகள் பசியால் அழுது களைத்துப் போய் ஒரு முடி வோடு நித்திரையாகி விட்டார்கள். மரியாளின் கண்ணீர் வெள்ளத்தில் படகு ஓடிக்கொண்டிருந்தது. நேரமும் மூன்று மணியைத் தாண்டி யது. வேதனை உடல்களைச் சுமந்த படகின் ஆட்டத்தில் குழந்தை கள் முழிச்சிடமாட்டாங்களா என்ற ஆராய்ச்சியோடு ரோச் லைற்றை அடிச்சுப் பார்த்துக் கொண்டனர். மழை இலேசாகத் தூறத் தொடங்கின. டெக்கின் மேலாக 'கூறைப்பாய' இழுத்துக் கட்டப்பட்டி ருந்தது. அதன் கீழ் இருந்த ஜீவன்கள் வெள்ளாப்பு நேர நித்திரை யைத் தாங்க முடியாது நித்திரையாகிவிட்டார்கள். மார்ட்டினும் மரியா ளும் குழந்தைகளை மடியில் கிடத்தியபடி சற்றுத் தூங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவணன் படகின் சுக்கானைப் பிடித்தபடி சண்டித்தனமான கடலையும் காற்றையும் வென்று கொண்டிருந்தான். இந்நேரம் இஞ்சின் டெக்கின் மேல் நின்ற போராளிகள் இருவரில் ஒருவர் கேட்டான். "சரவணயண்ணே.. நீங்கள் இதோட எத்தனை யாவது 'றிப்பண்ணே' அடிக்கிறீங்க?"

"என்ன தம்பி எத்தனையென்று தெரியல சனத்தப் பார்க்கிறப்போ ஏற்படுற கண்றாவிய விடவா றிப் பெரிசா கிடக்கு?" வேதனையின் வேல்கள் அவரது நெஞ்சில் பாய்ந்த பதைப்பு அவர் சொல்லில் தெளிவானது.

படகும் கரையொதுங்கிற்று. தூக்கமிழந்த மனிதர்கள் முண்டியடித்துக் கரையேறத் துடித்துக் கொண்டு நின்றனர். கிழவன் வாய்பிளந்து இருக்கும் மாட்டினையும் மரியாளையும் மாறி மாறி.. பார்த்துவிட்டு கூடையும் கையுமாக அங்கு மிங்கும் துடிச்சுப் பதைச்சுப் பார்த்து அழுது புலம்பினான்.

"டேய் தம்பிமாரே.. இந்த ஜீவன்களையும் தூக்கி இறக்குங்கடா... அவங்கட மடியில கிடக்கிற இரண்டு பச்சக் குழந்தைகளும் செத்துப்போய் கிடக்குதடா... இங்காலையும் திரும்பிப் பாருங்கடா..." தலையில் அடித்துப் புலம்பிய புலம்பல் வான்முட்ட எதிரொலித்தன. கரையிறங்கி சனமெல்லாம் கோவெனக் கெம்பிற்று. மரியா ளுக்கு அறிவு தெளியவில்லை. துளியும் பெருக்காத தேகம். நெஞ்சு நிமிர்ந்த வலுத்த உடல் மார்ட்டின் அசைவற்று இருந்தான்.

மடியில் இறந்து கிடந்த பிஞ்சுக் குழந்தைகளை இருபோராளிகள் தூக்கிக் கரை இறக்கினார்கள். இரண்டு பிஞ்சு மழலைகளையும் சனம் ஈ போல் மொய்த்தனர். பெற்ற இரண்டு ஜீவன்களும் ஜீவனே போன காட்சிப்பொருளாக இருந்தனர். கண்ணீருமின்றி, காற்றுமின்றி, கலக்க சுபாவத்தோடு பிஞ்சுப் பிணங்களின் பக்கத்தில் இருத்தினார்கள். கிழவன் கூடையும் கையுமாய்க் குளறி அழுது மண்ணிலே புரண்டு துடித்தார். கடற்கரையோரம் கண்ணீரில் நனைந்து கொண்டிருக்குது.

பாரிஸ் ஈழநாடு

22.12.1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மா.கி. கிறிஸ்ரியன்

இவர் இலக்கியத்தை இதய சுத்தியோடு நேசிக்கும் கவிஞர். தாய் மண்ணில் வாழ்ந்தபோது, நாடகக் கலையோடு தொடங்கிய ஆர்வம் கவிதையின் வாயிலாக இலக்கியப் பரப்பில் விளையாடும் முயற்சிக்குப் பயிற்சியானது. 1982ல் அகதியாக பிரான்ஸ் மண்ணில் காலடி எடுத்து வைத்த அதே ஆண்டில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு வெளியிட்ட "எரிமலை" ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்து அன்றிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட கவிதைகள், கட்டுரைகள், விமரிசனங்கள் என எழுதியதோடு கவியரங்கம் ஆற்றுகையில் ஒரு தனிப் பாணியை உருவாக்கி விட்டவர். இவரது முதல் வெளியீடான 'உயிர்ப்பில்' கவிதைத் தொகுதி மக்கள் மத்தியில் பாராட்டுக்கு உரியதானது. தொடர்ந்து பல படைப்புக்களை வெளியிடும் முயற்சியில் தளர்ச்சியற்ற வளர்ச்சியில் நிற்கின்றார்.

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org